# கலைமதி
# 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

## A. THATCHANAMOORTHY

(OLD ANTONIAN)

☆

☆

☆

# Kandyan Trading Corporation

Distributors For :

CIC, DUCO, DULUX, PENTALITE PAINTS

& HARDWARE

93, D.S. SENANAYAKE VEEDIYA,

KANDY.

☎ 08 - 22616

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித அந்தோனியார் கல்லூரி - கண்டி

தமிழ்க் கலாமன்றம் அளிக்கும்

# கலைவிழா '95

பிரதம அதிதி - பேராசிரியர் கலாகீர்த்தி எஸ். தில்லைநாதன்
(தமிழ்த்துறை - பேராதனைப் பல்கலைக்கழகம்)

சிறப்பு அதிதிகள்- வண. பிதா ஸ்டீபன் ஏபிரகாம்
(முன்னாள் அதிபர், புனித அந்தோனியார் கல்லூரி - கண்டி)

திரு. எஸ். தேசோமயானந்தம்
(உதவிச் செயலாளர் - மத்திய மாகாணக் கல்வி அமைச்சு - தமிழ்)

ஜனாப். எஸ். ஏ. ஆர். எம். பாரூக்
(உதவிச் செயலாளர் - மத்திய மாகாணக் கல்வி அமைச்சு - முஸ்லிம்)

காலம் - 07 - 10 - 1995 (சனிக்கிழமை)

நேரம் - பி. ப. 2.15 மணி

இடம் - புனித அந்தோனியார் கல்லூரி
கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# G. Illangeswaran & G. Illamanathan

(Old Antonians)

*

* * *

* * * *

* * * * * *

**Luxury Trading Company**

**178, 4th Cross Street**

**Colombo - 11**

**☎ 01 - 422971**

**Chella Traders**

**49 A, 4th Cross Street**

**Colombo - 11**

**☎ 01 - 434885, 01 - 438932**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே.

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே.

ஏழ் கடல் வைப்பினுந் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே.

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே.

சூழ் கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே.

தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ் நாடே.

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே.

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே.

✦ ✦ ✦ ✦

# மன்ற கீதம்

கலை விளக்கே! ஒளி விளக்கே!
கவின் விளக்கே வாழ்க!
கலாமன்றம் எனும் இனிய
தமிழ் விளக்கே நீ வாழ்க!

இயல் வளர்ப்பாய் இசை வளர்ப்பாய்
நாடகமும் வளர்ப்பாய்
எல்லோரும் புகழ்ந்திடுவார்
வாழிய வாழியவே – கலை விளக்கே

கல்வியென்னும் அமுது வைத்தாய்
கருத்துடையார் மகிழ்ந்தார்
கவிதை எனும் சரம் தொடுத்தாய்
கலை அறிந்தோர் மகிழ்ந்தார் – கலை விளக்கே

தெய்வ மதன் பொருளுரைத்தாய்
தெளிந்தவர்கள் தொழுதார்
தேனனைய இசை பொழிந்தாய்
தெரிந்தவர்கள் மகிழ்ந்தார் – கலை விளக்கே

இயற்றியவர் :
புலவர் – பார்வதிநாதசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

**D. Ashok (Old Antonian)**

Health grows at home
Homes make a community
Communities make a nation
Nations make a world
"Better health for all"
For dynamic pharmaceuticals service

# CENTRAL MEDICALS

92, DALADA VIDIYA - KANDY.

PHONE : 23677

Dealers in :-
DRUGS, GROCERIES, WHOLESALE & RETAIL.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம அதிதியின் ஆசிச் செய்தி

வேறுபட்ட மொழிகளைப் பேசுபவர்களும் வேறுபட்ட மதங்களைப் பின் பற்றுபவர்களுமான மாணவர்கள் ஒருங்கிணைந்து பயிலும் அழகினைக் கண்டி புனித அந்தோனியார் கல்லூரியிலே காண்கின்றோம். அம்மாணவர்களின் அறிவாற்றலை விருத்தி செய்வதுடன் நின்றுவிடாது கலையார்வத்தையும் பேணிவளர்க்கும் புனிதப் பணியும் மேற்கொள்ளப்படுவது பாராட்டுக்குரியது. கலை நிகழ்ச்சிகள் மக்கள் மத்தியிலே புரிந்துணர்வையும் ஒற்றுமையையும் பரஸ்பர மதிப்பையும் வளர்க்க வல்லன.

விஞ்ஞான, தொழில்நுட்பத் துறைகளில் மனிதகுலம் எத்தகைய முன்னேற்றத்தைக் கண்டாலும், அதன் அமைதியும் அபிவிருத்தியும் ஒருவரை ஒருவர் செவ்வனே விளங்கிக் கொள்வதையும் மதித்தொழுகுவதையும் பொறுத்தே அமைவன. அந்தவகையில், அத்தகைய உயர் விழுமியங்களை வளர்க்க உதவும் கலைகளின்பால் இளஞ்சந்ததியினரின் ஆர்வம் வளர்க்கப்படுவது வரவேற்கப்பட வேண்டியதாகும்.

"வெள்ளத்தின் பெருக்கைப் போற் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்."

என்று மகாகவி பாரதி கூறியதை எண்ணிப்பார்த்தல் ஏற்றது.

புனித அந்தோனியார் கல்லூரித் தமிழ்க் கலாமன்றம் எடுக்கும் வருடாந்தக் கலைவிழா எல்லோருக்கும் களிப்பினை அளிப்பதாகவும் மன்றத்தின் மதிப்பினைப் பெருக்குவதாகவும் கல்லூரி அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் இடையிலான ஆர்வத்தையும் நல்லுறவையும் துலக்குவதாகவும் அமையவேண்டி வாழ்த்துகிறோம்.

சி. தில்லைநாதன்
தமிழ்ப் பேராசிரியர்

பேராதனைப் பல்கலைக்கழகம்,
பேராதனை.
05.09.1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE FROM THE FORMER PRINCIPAL

It gives me great pleasure to associate myself with the activities of the Tamil Cultural Society of St. Anthony's College this year as well, although it is almost a year since I relinquished the reins of office as Principal. The tremendous manifestation of appreciation and gratitude that I received from the members of this Association at the farewell ceremony last year will stay on for a very long time in my memory. I shall ever be beholden to Mrs. I. Sivaratnam, the live-wire of the Cultural Society for her committed service to the entire College, irrespective of ethnic persuasions.

In spite of the many set backs that have beset this minority Community in these climes; in spite of the insecurity and fears that have dogged its members time and again, every member, to a man, has evinced a sense of dedication to his culture and to the College which is, indeed, admirable.

The concern for the ongoing welfare of their culture is certainly genuine; their solicitude for the welfare of their members is undoubtedly sincere. But what impressed me most of all was their undiluted concern for the good name of St. Anthony's, of which they are merely a segment.

The Society has always served the College ungrudgingly in whatever endeavours it was called upon to promote or assist in. St. Anthony's has always been and, I hope will ever remain grateful to the members of the Tamil Cultural Society for their contribution towards its well-being and welfare.

Whilst wishing the office bearers and the entire membership the very best of everything in all their endeavours, I wish this evening's celebration the success it rightly deserves.

18.8.95

Rev. Fr. D. Stephen Abraham O.S.B.
Erstwhile Principal SACK.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய மாகாணக் கல்வியமைச்சின் தமிழ்ப் பிரிவுச் செயலாளர் வழங்கிய ஆசிச் செய்தி

புனித அந்தோனியார் கல்லூரி, மத்திய மாகாணத்தில் எடுப்பும் மிடுக்குங் கொண்ட கல்லூரியாக விளங்கி ஒப்பற்ற உயர் தனிச் சேவையாற்றி வருவதை ஊரும் உலகும் நன்கறியும். இறை நம்பிக்கையும், தன்னம்பிக்கையும் கொண்ட இளைஞர்களை உருவாக்கி நாட்டுக்கும் சமூகத்திற்கும் சேவையாற்றி வருகின்றது.

கல்வியின் மூலம் அன்பு, கருணை, அறப்பண்பு, ஒழுக்கம், தன்னலங்கருதாத்தன்மை என்பனவற்றை வளர்த்து வரும் இக்கல்லூரி மாணவரின் உடல் உளம் சார்ந்த ஆற்றல்களை வெளிப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இக்கல்லூரியின் தமிழ்க்கலாமன்றம் கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக இலக்கியப் பணியாற்றி வருகின்றது. கலை நிகழ்ச்சிகள், நாடகம், மேடைப்பேச்சு விவாத அரங்கு, கட்டுரைப்போட்டி என்பவற்றை நடத்தி தனிப்பட்ட மாணவர்களின் ஆற்றலை வளர்க்க சந்தர்ப்பம் வழங்கி வருவது பாராட்டுக்குரியது.

இம் மன்றம் எடுக்கும் கலைவிழாவிற்கும், கலைவிழாவையொட்டி வெளியிடப்படும் 'கலைமதி' சஞ்சிகைக்கும் வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

கல்லூரி அதிபர் ஆசிரியர்களின் சிறந்த வழிகாட்டலுடன் நெறிப்படுத்தப்பட்டு இயங்கிவரும் இம்மன்றம் மேலும் புதிய நிகழ்ச்சிகளைச் சேர்த்து தித்திக்கத் தித்திக்க விருந்தளிக்கும் என எதிர்பார்க்கிறேன்.

எஸ். தேசோமயானந்தம்
மத்திய மாகாண கல்வியமைச்சின்
தமிழ்ப் பிரிவுச் செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய மாகாண முஸ்லிம் கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் ஜனாப் எஸ்.ஏ.ஆர்.எம் பாரூக் ஜே.பி. அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி

கல்வியும், கலையும் ஒன்றில் ஒன்று சங்கமித்து உலகோடு ஒன்றித்த தெய்வீக தன்மை பொருந்திய துறைகளாகும். கல்வியோடு கலையும், கலையோடு கல்வியும் இரண்டாகக் கலந்துள்ளதால் அவற்றுக்கு என்றுமே அந்தம் என்பது இல்லை. கல்வி எங்ஙனம் நூற்போதனையோடு மட்டும் சங்கமித்துவிடல் ஆகாதோ கலையும் அவ்வாறே அரங்கேற்றத்தோடு மட்டும் அஸ்தமித்துவிடக் கூடாது. கல்விக்கும் கலைக்கும் என்றும் கதவுகள் திறந்தே இருக்க வேண்டும்.

பிரசித்தி மிகு கண்டி புனித அந்தோனியார் கல்லூரியிலே கடந்த கால் நூற்றாண்டுகளுக்கும் மேலாக தமிழ் ஒளி பரப்பி வரும் தமிழ் கலா மன்றம் கல்விக்கும், கலைக்கும் இடையே நெருங்கிய பிணைப்பை உருவாக்கி செயல்பட்டு வருவது சிறப்பாகும்.

மொழியினையும், பண்பாட்டினையும், கலையினையும், கலாசாரத்தையும் ஒன்றிணைத்து மாணவர் சமுதாயத்துக்கு கல்வியோடு பிசைந்தூட்டும் கலாமன் றத்தின் பணி ஈடற்றது. மாணவரின் வளம்மிக்க எதிர்கால வாழ்வு செழிப்புற வும், ஆக்கத்திறனும், ஆற்றல்திறனும் மேன்மையடையவும் கலாமன்றம் வழங்கும் ஒத்தாசை நிகரற்றது.

கலாமன்றமெனும் வானிலே ஒளிவீசும் "கலைமதி" தமிழ் கலாமன்றத்தின் பணிகள் மேலும் பிரகாசிக்க வழிகோல வேண்டும் என உளமார வாழ்த்துகிறேன்.

கலாமன்றம் வளரவும்
கலை மதி ஒளிரவும்
கலை விழா மிளிரவும் ஆசிகள்.

எஸ்.ஏ.ஆர்.எம். பாரூக்
உதவிச் செயலாளர்,
கல்வி அமைச்சு (முஸ்லிம் பிரிவு)
மத்திய மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Rev. Fr. Principal's Message

Dear friends,

I am extremely happy to be associated with the Annual Tamil Cultural Day of the College. It is one such festival many eagerly look forward to. Many a parent and old boys treasure the memories of past 'Kalai Villas'. Even the friends and neighbours of the college, come rallying round for this festival.

Celebrating 'culture' is a must for any human society. It reaffirms their identity and uniqueness. Over the centuries men have built-up cultural patterns to inculcate into their members, their own values of human dignity. Without 'culture' man will remain an animal and not a human-being.

In a school set-up, these celebrations should bring out traditional values to educate our children. But, in the face of modern westernized society, not only the children, but also the adults are confused and seem helpless to discern the cultural values.

My sincere wish and prayer is that this celebration will enrich our children with their cultural heritage.

Thank you and God bless you all!

25/08/95 *Rev. Fr. D. Hilarion Fernando O.S.B.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கங்கவட்டகோரள பிரதேச உதவிக் கல்விப் பணிப்பாளர் அல்ஹாஜ் என்.எம்.எம். இஷாக் அவர்களின் வாழ்த்துச் செய்தி

கண்டி புனித அந்தோனியார் கல்லூரி தமிழ் கலா மன்றத்தினர் பிரதி வருடமும் தாம் நடாத்துகின்ற கலை விழாவினை இவ்வாண்டும் அதி விமரிசையாக நடத்திட முன்வந்துள்ளனர். இக்கலைவிழாவினையொட்டி வெளியிடும் இம்மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

பாடசாலைகளில் புத்தக கல்வியோடு மாத்திரம் நின்றுவிடாமல் மாணவர்களின் ஏனைய திறமைகளையும் வளர்ப்பதே மாணவர்களை எதிர்கால நற்பிரஜையாக மாற்றுவதற்கு உதவும். இவ்வகையில் இக்கல்லூரியின் தமிழ்கலாமன்றம் செயல்பட்டு வருவது போற்றப் படவேண்டிய விடயமாகும்.

இவ்வாறான சிறந்த முயற்சிக்கு பக்கபலமாக இருக்கும் இக்கல்லூரி அதிபரையும், ஆசிரியர் குழுவினரையும் மனமார வாழ்த்துகின்றேன். இவ்வரிய முயற்சி தொடர்ந்தும் வளர வாழ்த்துகின்றேன்.

இவ்வண்ணம்
என்.எம்.எம். இஷாக்
உதவிக் கல்விப் பணிப்பாளர்.


**With Best Compliments From**

**Mr. T. Thavanathan**

**Karunanithy & Co**
**122 Colombo Street**
**Kandy**
**✆ 08 - 22537**

**New Himalaya**
**Biscuit Manufacturers**
**New Town - Kundasale**
**✆ 071 - 33172**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதி அதிபரின் அறிக்கை

மீண்டும் ஒரு கலைவிழாவில் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். வெள்ளிவிழாக் கண்டு வீறு நடைபோடும் கண்டி புனித அந்தோனியார் கல்லூரி தமிழ்க் கலாமன்றம் இருபத்தியெட்டாவது வயதை எட்டி நிற்கின்றது. இன்று இம்மன்றம் இருபத்தி யாறாவது கலைவிழாவை மேடையேற்றுகின்றது. 1978ம் ஆண்டு நான் கலாமன்றத்தைப் பொறுப்பேற்ற பின்னர் மேடையேற்றப்படும் பதினைந்தாவது கலைவிழா இதுவாகும். இந்தக் கால கட்டத்தில் கலாமன்றத்தை வீறுநடை போட வைக்க எனக்குதவிய கரங்கள் பல. அவர்கள் அனைவருக்கும் கலாமன்றம் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று பிரதம அதிதியாக இவ்விழாவில் கலந்து சிறப்பிக்க வருகை தந்திருக்கும் கலாகீர்த்தி பேராசிரியர் தில்லைநாதனும் அவரது பாரியாரும் கண்டிவாழ் மக்களுக்குப் புதியவர்களல்ல. 1974ம் ஆண்டில் எமது கல்லூரியில் கலைவிழா மேடையேற்றப்பட்ட போது பிரதம விருந்தினராக கலந்து விழாவை சிறப்பித்துள்ளார்கள். ஏறத்தாழ இருபது வருடங்களுக்குப் பின்பு மீண்டும் அவரை பிரதம விருந்தினராக வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இன்று சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளும் மத்திய மாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகளையும் எமது முன்னாள் அதிபரவர்களையும், ஏனைய இரசிகப்பெருமக்களையும் வரவேற்பதில் பேருவகையடைகின்றேன்.

மாணவர்களுடைய ஆக்கங்களுக்கு கூடிய முக்கியத்துவமளித்து, விளம்பரங்களைக் குறைத்து மிகுந்த சிரமத்தின் மத்தியில் எமது வருடாந்த சஞ்சிகையாகிய 'கலைமதியை' உங்கள் கரங்களில் சமர்ப்பிக்கின்றோம். கலைமதியை அச்சிடபெருமளவில் நிதியுதவி புரிந்த தமிழன்பர்களுக்கும், இலாபத்தை கருத்திற் கொள்ளாது சிறந்த முறையில் அச்சிட்டுதவிய றோயல் அச்சகத்தினருக்கும் நாம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம். அத்துடன் கலைவிழாவை மேடையேற்றும் பொருட்டு அன்பளிப்புகள் வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். பழைய மாணவர்கள் ஆர்வத்துடன் எமக்கு வழங்கிவரும் ஒத்துழைப்பை நாம் என்றும் மறக்க முடியாது.

எமது கலாமன்ற நடவடிக்கைகளுக்கு வண. பிதா. ஹிலேரியன் பெர்ணான்டோ அவர்கள் வழங்கிவரும் ஒத்துழைப்பு எம்மை பிரமிக்கவைக்கின்றது. சென்ற வருடம் இதே நாளில் வண. பிதா. ஸ்டீபன் ஏபிரகாம் அவர்களுக்கு பிரியாவிடை அளித்த போது, இந்த வருடம் கலாமன்ற நடவடிக்கைகள் எவ்வாறு அமையும் என பலர் ஐயமுற்றிருந்தனர். ஆனாலும் பழையவருக்கு புதியவர் சளைத்தவரல்லர் என்பதை வண. பிதா. ஹிலேரியன் பெர்ணான்டோ அவர்கள் நிரூபித்து விட்டார்கள்.

வகுப்பறைக் கற்பித்தலைப் புறக்கணிக்காது கலைநிகழ்ச்சிகளை மேடையேற்றுவது சிரமமான காரியமாகும். எனினும் வகுப்பறைக் கற்பித்தலை ஒழுங்காக மேற்கொண்டு, நிகழ்ச்சிகளை மேடையேற்ற உதவிய எமது ஆசிரியர்கள் பாராட்டுக்குரியவர்கள். பல நிகழ்ச்சிகளைப் பொறுப்பேற்று தன்னலமற்ற சேவை புரிந்த எமது சங்கீத ஆசிரியைக்கு எனது விசேட பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். கலைவிழா சிறப்புறவும் 'கலைமதி' ஒளி வீசவும் ஆர்வத்துடன் அயராதுழைத்த 95ம் வருட உயர்தர வகுப்பு மாணவர்களைப் பாராட்டும் அதே வேளையில் அவர்களது கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்கும் இதே ஆர்வத்துடன் அயராதுழைக்குமாறும் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மாணவர்களின் கல்வித் தரம் சிறப்புற்றால் தான் கலாமன்றமும் சிறப்படையுமென ஏனைய மாணவர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும். பாடசாலையை விட்டு வெளியேறிய பின்னரும் மாணவர்கள் தமிழுக்குத் தொண்டு செய்ய முன்வர வேண்டுமென விழைகின்றேன்.

இன்றைய கலைவிழா சிறப்புறவும், கலைமதி சுடர்விட்டுப் பிரகாசிக்கவும் வாழ்த்துகிறேன்.

வாழிய செந்தமிழ்; வாழ்க நற்றமிழர்!
வாழிய தமிழ்க்கலாமன்றம்

**திருமதி இந்திரா சிவரட்னம்.**


*K. Thanarajah*
*(Old Antonian)*

**M/S. S.V.S. Murukesan Chettiyar**
**231, 5th Cross Street,**
**Colombo - 11**

**T.P 01 - 29595**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Akram A.A.M.

Arafath S.S

Azari M.M.M

Balachandran S.

Chandramohan K.

Dilfowzi M.M.

Dushyanthan S.

Fawmi F.M.

Fazil S.H.M.

Fernando R.N.

Hariz H.M.

Kalaichelvan M.

Krishnamoorthi J.

Lakshakumar S.

Lingeshwarakumar M.

Maheshwaran S.

Mumthas M.S.M.

Mayooran V.

Nanthakumar N.

**A/L '92**

**Teacher in Charge**

**Mrs. J. Sivaratnam**

Nerio A.M.D.

Nimalan G.

Paulraj S.R.

Pradeepkumar K.

Partheeban A.E.

Rajkumar S.

Ramesh M.

Rizwan M.M.S.M.

Rizmi S.M.

Shabry M.A.M.

Sadeesh K.

Samuel E.L.

Saravanan M.

Sivakumar P.

Somasundaram S.

Utharakumar P.

Vinayagamoorthi R.

Zabry H.M.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருந்தலைவரின் ஆசியுரை

உள்ளத்தின் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண் டாகும்,
வெள்ளத்தின் பெருக்கைப் போல்
கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிப்பெற்றுப் பதவி கொள்வார்,
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்.
இங்கமரர் சிறப்புக் கண்டார்

என அடிமைப்பட்டு கிடந்த நாட்டுக்கும், தமிழ் சமுதாயத்திற்கும் எல்லாவித அடிமைத்தனத்திலிருந்தும் விடுபட விடுதலை ஊக்க பாடல்களை பாடினார் பாரதியார்.

பாரதியார் கூற்றுக்கிணங்க இன்றைய இலங்கை தமிழரின் நிலையில் கூட கவிப்பெருக்கும், கலைப்பெருக்கும், மேவ வேண்டியது அவசியமே. இத்தகைய உயர் நோக்கத்தை குறிக்கோளாகக் கொண்டு குறிஞ்சி தலைநகராம் கண்டியில் புனித அந்தோனியார் கல்லூரி தமிழ் மாணவர் தம் கலை, இலக்கிய ஆர்வத்தையும் ஆற்றலையும் வளர்த்துக் கொள்ள துணைநிற்கும் தமிழ்க் கலா மன்றத்தின் பணி பெருமைப் படத்தக்கதாகும்.

எமது மன்றத்தின் வெற்றிக்கும், அதன் வளர்ச்சிக்கும் எமது கல்லூரியின் முன்னாள் அதிபர் வண. பிதா. ஸ்டிபன் ஏபிரகாம் அவர்கள் தந்த ஒத்துழைப்பும், காட்டிய ஆர்வமும் ஈடுசெய்யமுடியாததாகும். எமது மன்றம் என்றென்றும் அவருக்கு கடமைப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் பல ஆண்டுகளாக, இடையூறுகள் வந்த சந்தர்ப்பங்களில் கூட கலைவிழாவையும், சஞ்சிகை வெளியீட்டையும் வெற்றிகரமாக நடத்தும் எம் மாணவர்களின் ஊக்கமும், திறனும் போற்றப்பட வேண்டியதே. வழமைபோல் இம்முறையும் அவர்களது வெற்றிப் படைப்பான 'கலைமதி' உங்கள் கைகளில் தவழ்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

எமது கலைவிழா சிறப்புற நடக்க சகல ஒத்துழைப்பையும் வழங்கிய பிதா அதிபர் அவர்கட்கும் எம் மன்றத்தின் வளர்ச்சிக்கு ஏணியாக இருக்கும் தமிழ்பிரிவு பிரதி அதிபர் அவர்கட்கும், சகலவித உதவியையும் நல்கிய ஆசிரிய பெருமக்களுக்கும், பல்வேறு வழிகளில் துணை நின்ற பழைய மாணவர்கட்கும், கல்லூரித் தூண்களாம் மாணவமணிகளுக்கும் எனது இதயம் கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

வாழ்க தமிழ்மொழி, வாழ்க தமிழ்மொழி
வாழியவாழியவே

யசோதா இராசையா

## கௌரவ செயலாளரின் அறிக்கை

"தாயைப் போற்றுதல் சேயின் கடமை" அது போல தமிழ் மொழியைப் போற்றுதல் தமிழரின் கடமை. இதை மனதில் இருத்தி வருடாவருடம் புனித அந்தோனியார் கல்லூரி தமிழ்க்கலாமன்றம் தமிழ் அன்னைக்கு விழா எடுத்து வருகின்றது. இவ்வுலகில் விரல் விட்டுச் சொல்லக்கூடிய மொழிகளில் குரல் விட்டுச் சொல்லக் கூடியது நம் தமிழ் மொழி ஒன்றே. தமிழ்மொழி இனிமையும், எளிமையும், அழகும், ஆற்றலும் நிறைந்த உயர் தனிச் செம்மொழி ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இலக்கிய செழுமையோடும் உயிரோட்டத்தோடும் வாழ்கின்ற மொழி தமிழ் மொழியின் மேன்மையையும், தொன்மையையும் மாணவ மணிகள் உணர்ந்து கொள்ளத் தமிழ் விழா வழிவகுக்கின்றது.

தமிழ்க்கலா மன்றமானது மாணவர்களின் நாவன்மையை வளர்க்கும் பொருட்டு பேச்சுப் போட்டிகளையும் இசைத்துறையில் ஈடுபடும் பொருட்டு தனி இசைகுழு இசை போன்ற போட்டிகளையும், கற்பனை வளத்தை அதிகரிப்பதற்காக கட்டுரை, சிறுகதை, கவிதைப் போட்டிகளையும், நடிக்கும் ஆற்றலை வெளிக்கொணர நாடகப் போட்டிகளையும், விவாதிக்கும் ஆற்றலை வளர்க்க விவாதப் போட்டிகளையும் வருடா வருடம் வளர்த்து வருகின்றது. இந்தப் போட்டிகளில் எமது மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றி வருகின்றனர். கல்வித் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட தமிழ்மொழித் தின போட்டிகளிலும் எமது மாணவர்கள் பங்கு பற்றி பரிசில்களைப் பெற்றனர்.

மாணவர்களிடையே மறைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக்கொணர கலைவிழா உதவுகின்றது என்றால் மிகையாகாது. கலைவிழாவிற்கு நடன நிகழ்ச்சிகளைத் தயாரித்தளிப்பதை இலகுவாக்க இந்த வருடம் பரதநாட்டிய வகுப்புகளையும் ஆரம்பித்துள்ளோம். எமது இந்த முயற்சி வெற்றியளிக்குமென நம்புகின்றோம். கலைவிழாவையொட்டி வருடா வருடம் நாம் வெளியிடும் 'கலைமதி' சஞ்சிகை மாணவர்களின் எழுத்தாற்றலை ஊக்குவிக்கும் கருவியாக அமைகின்றது. மாணவ மணிகள் தமிழ் அன்னையின் திருவடிகளில் சமர்ப்பித்த மலர்கள் ஒரு மாலையாய் ஒன்றிணைந்து இச்சஞ்சிகை வெளிவருகின்றது. இச்சஞ்சிகையை வெளியிட பணவுதவி வழங்கிய நேயர்களுக்கும் ஆசியுரை வழங்கிய பெரியோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

'ஓங்கிடு நற்றமிழ் மாணவர்
யாமிங் கொருங்கு கூடி
தேங்கிடு நின்கலைப்பண்போ
நிலவுக நித்த மின்றே
ஈங்கு நின் சீர்தனைப் போற்றியே
வாழ்த்தை இயம்புகின்றோம்
நீங்கிடும் பல்விடர் நிற்கும்
தமிழினி நிச்சயமே"

என பணிபுரிந்து முத்தமிழும் நிலைத்து நிற்க கலையருவி போல் உழைத்திடுவோமாக

ச. அருள்மேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தாணி ஏந்தியபோது.....

கன்னித்தமிழே
என் நா கூட பெருமைப்பட்டுக்கொள்கின்றது,
நீயதன் மீது நடம் புரிவதனாலன்றோ....
என்னிரு செவிகூட புளகாங்கிதப்படுகின்றது,
நீயங்கெல்லாம் தழுவிச் செல்வதனாலன்றோ..!
என் கரங்களிலும் இன்று தமிழ் மணக்கிறது,
இந்நாளை உனக்காக்க உழைத்ததனாலன்றோ...!
இத்தனையும் எதற்கு?
இவ்வாண்டே உன்னால்தானே பூரிக்கின்றது,
அது பிறப்பெடுத்ததே இந்நாளுக்காகவன்றோ!

இன்ப அமுதே!
நீயன்று பொதிகையிற் பிறந்து
சங்கத்து இருப்பிலே இருந்து
வைகை ஏட்டிலே தவழ்ந்த கதைகேட்டு
நாம் வளர்ந்தோம்!
இன்று எம்மன்றத்திலே
நீ வளரும் அழகு கண்டு
முகம் மலர்ந்தோம்!
இல்லையில்லை! அகம் மலர்ந்தோம்!

தேனாறே!
பாலைவனமாகப் பட்ட உள்ளங்களெல்லாம்
பசுஞ்சோலைகளாக மலர்ந்தது
நீ பெருக்கெடுத்துப்
பாய்ந்தோடியதால் தானே!
நாமெல்லாம்
வளம் பெற்று வாழ்வு பெற்றதும்
உன் அரவணைப்பால் தானன்றோ!
உன் ஈடில்லா அன்புக்கு
நாம் செய்யும் கைமாறாகத்தான்
கலைவிழாவென்றும் கலையருவிதனை
உன்வழியில் சங்கமிக்கச் செய்கிறோம்!
இக்கலையருவிதனை உருவாக்க
வழிகாட்டிய அதிபரை ஆசிரியர்களை
தோள்கொடுத்த தோழர்களை
நன்றியுடன் நினைக்கிறேன்!
தமிழழகு காண்பதற்காய்
இன்று நம்மோடு கைகோர்த்த
பிரதமவிருந்தினரை பெற்றோர்பெரியோரை
இன்முகம் கொண்டே
வருக வருக வென
வாஞ்சையுடன் வரவேற்கின்றேன்
வான் புகழ் கொண்ட
தேன் தமிழ் தொண்டன்

பிரிஜேஷ் பார்த்தீபன்
(தமிழ்க்கலாமன்றத் தலைவர்)

## என் சிந்தனையின் சிதறல்களிலே

மதுரையம் பதியினிலே
மூவேந்தர் நிழலினிலே
நா வேந்தர் மொழியினிலே
திக் கெட்டும் பரந்திடவே
திவ்வியமான திராவிடத்தில்
தீந்தமிழின் தீஞ்சுவையை
செப்பியே மாளுமோ
ஆனாலும்..................

கல்லூரி மாணவர் நாம்
கலை வளர்க்க முன்வந்தோம்
செந்தமிழின் முருகினையே
செம்மையாய் உணர்த்திடவே
அமைத்த எம்மன்றம்
வெள்ளி விழா கண்டு
வீறுநடைபயில்கின்றது.

அதிபரவர் ஆசியிலே
கிஞ்சித்தும் குறுக்கமில்லை
அறிவு கூர் ஆசிரியர் தம்
வழி காட்டலில் வஞ்சமில்லை
முது மாணவர் சேவையிலே
எள்ளளவும் இறக்கமில்லை
பெற்றவர் தம் உதரத்தில்
உந்தலுண்டு தொய்வில்லை

கண்ணன் போன்று உதவியோர்
கர்ணன் போன்று வழங்கியோர்
வேந்தர் போன்று வளர்த்திட்டோர்
வேறும் பணிகளை ஆற்றிட்டோர்
அனைவரதும் சேவைகளை
என்றும் வாழ்த்தும் எம்மன்றம்
மாணவர் எம் ஆற்றல்கள்
வெளிப்படும் நற்களமாக

அமைந்திருக்கும் எம்மன்றம் தனை
போற்றிடுவோம் வாழ்த்திடுவோம்
ஒன்று சேர்த்து வளர்த்திடுவோம்
தமிழ் காத்து மெருகூட்டி
தரணியிலே புகழ் வளர்ப்போம் - என

சீராக செப்பிடும்
சீர் மன்ற தமிழ்மகன்
மா மன்ற செயலாளன்
B.H.M. Hafreth

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கௌரவ இதழாசிரியரிடமிருந்து........

தமிழ் மொழி உலகின் மூத்த மொழிகளுள் ஒன்று இலக்கியவளம், இலக்கணவளம், அறிவியல் வளம், அறவியல் வளம், பண்பாட்டு வளம் ஆகியனவற்றை ஒருங்கே கொண்டு பண்பட்ட வளர்ச்சி பெற்று வாழ்ந்து கொண்டு மேலும் வளர்ச்சி பெறுவதற்குரிய உயிர்ப்பினையும் உள்ளடக்கிய நிலையில் விளங்குவது நம் அருமைத் தாய் மொழியாம் தமிழ் மொழி.

மொழியாற்றல் பிரயோகிக்கப்படும் பொழுதுதான் மாணவருடைய நடத்தை மாற்றம் (கற்றல் விளைவு) இனங்காணக் கூடியதாக வெளிப்படுகின்றது. மொழியாற்றலுடன் இணைந்த இரு பெறுபேறுகள் பற்றி குறிப்பிடுவோமானால், ஒன்று திருத்தமான பிழையற்ற பிரயோகம்; மற்றது இடர்பாடு எதுவுமில்லாத இலாவகமான மொழியாட்சி.

மாணவர்கள் பேசுதல், வாசித்தல், கேட்டல் எழுதுதல் ஆகிய மொழித் திறன்களினூடாக மொழியினை செம்மையாக திருத்தமாகப் பிழையின்றி பிரயோகிக்கும் ஆற்றலையும் சரளமாகக் கையாளும் வல்லமையினையும் பெற்றுக் கொள்வர்.

மாணவர்களிடம் இவ்வாற்றல்களை வளர்க்கும் நோக்கிலேயே கண்டி, புனித அந்தோனியார் கல்லூரி கடந்த 27 ஆண்டுகளாக முத்தமிழுக்கு கலைவிழா எடுத்து வருவதைப் பாராட்டுவதோடு மாணவர்களிடம் மறைந்து கிடக்கும் எழுத்தாற்றலை வெளிக் கொணர்வதற்கும், மாணவர்களிடையே எழுத்தாற்றலை ஊக்குவிப்பதற்காகவும் கலைமதி என்ற சஞ்சிகையையும் வெளியிட்டு வருகின்றது. இம்முறையும் தமிழ் அன்னைக்கு பாதகாணிக்கையாக இம்மலரை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இம்மலர் எமது கைகளில் தவழ்வதற்கும், கலை விழா சிறப்பாக அமைவதற்கும் எம்முடன் பல கரங்கள் இணைந்து கொண்டன. ஆலோசனை வழங்கிய பிரதி அதிபர், மாணவர்களின் ஆற்றல்களை பட்டைதீட்டிய ஆசிரியர்கள், ஆர்வமுடன் செயற்பட்ட மாணவர்கள், பல வழிகளில் பண உதவி நல்கிய பெற்றோர்கள், பழையமாணவர்கள், நலன் விரும்பிகள். இந்நூலை அச்சுருவேற்றிய றோயல் அச்சகத்தினர் அனைவருக்கும் செந்தமிழ்தாயின் நல்லாசிகளோடு நன்றிகளை தெரிவிப்பதில் பெருமையும், மனநிறைவும் அடைகின்றேன்.

"வளரட்டும் எம் தமிழ்க்கலா மன்றம்
ஒளிரட்டும் இக் கலை மதி"

நன்றி

யோ. கிருபானந்தன்
(கௌரவ இதழாசிரியர்)

* * * * * * * * * *

## மாணவ இதழாசிரியரிடமிருந்து.....

தமிழுக்கு வணக்கம் தீந் தமிழை அகத்திய குறு முனிவனிற்கு உரைத்த திங்கள் சடை முடியோன் தேனுளம் மகிழ செந்தமிழுக்கு விழாவெடுக்கும் இவ்வேளை பைந்தமிழ் ஆக்கங்களை சுமந்து வரும் கலைமதிக்கு வாழ்த்து செய்தி வெளியிடுவதில் நெஞ்சம் பூரிக்க காண்கின்றேன்.

உலகின் கண் தலை சிறந்த மொழிகளுள் ஒன்றானது தமிழ்; தமிழிலே பல அழகு சொற்கள் காண்கின்றோம். ஆனால் "தமிழ்" போலும் அழகு சொல் எங்கும் காண்கிறோம். இனிய தமிழின் சிறப்பு வரிசையில் தலையாயது அதன் தொண்மையாகும். இற்றைக்கு கி.மு. 3000 ஆண்டுகளிற்கு முன்னிருந்தே விளங்கிவந்த தமிழ் மொழியை முடியுடை மூவேந்தரும் குருநில மன்னர்களும் தங்கள் அவையிலே சங்கம் அமைத்து வளர்த்தனர்.

அன்று ஆன்றோர் காட்டிய வழிகொண்டு இறையோர் நாம் இன்றும் நற்றமிழை போற்றிவளர்க்க அவா கொண்டு இவ்வாண்டும் கலைவிழா எனும் தமிழ்விழாவினை எடுக்கின்றோம். நதிசூழ நாம் இருக்கும் பூமி புனித அந்தோனியார் கல்லூரி ஓர் நந்தவனம். இங்கும் மலர்ந்த செந்தமிழ் மலரினின்று உதிர்ந்த இதழ்கள் தாம் கலைமதி. கனிந்த கலைவிழாமலர் உங்கள் கைகளிலே தவழ்கின்றது. இதன் இன்மணம் நுகர உங்களை அழைக்கின்றேன்.

தமிழ் கூறும் நல் உலகின் பெருமக்களே நலன் விரும்பிகளே! மாணவ இதழ் ஆசிரியன் என்ற முறையில் உங்கள் முன் தலைசாய்க்கின்றேன். உங்கள் நல் ஆதரவிற்கு சிரம் தாழ்த்தி நன்றி கூறுகின்றேன். மாணவ மனங்களில் ஒளிந்திருக்கும் ஊமைத்திறமைகளை வெளிக் கொணரும் நோக்குடன் இந்தவருடம் விளம்பரங்களை வெகுவாக குறைத்து எமது சிறாரின் ஆக்கங்களிற்கு முன்னுரிமை கொடுத்துள்ளதன் காரணமாக தமிழ் பால் ஆர்வமும் அக்கறையும் கொண்ட தங்கள் எல்லோரினதும் விளம்பரங்களை ஏற்க முடியாமல் இருப்பதற்கு உளம் கூர்ந்து பொறுப்பீர்கள் என நம்புகின்றோம்.

கலைமதி இதழிலே பிழைதவிர்த்து தமிழிற்கு பெருமை சேர்ப்பது தமிழ்மாணவர் எமது கடமை. இருப்பினும் சிறுபிழை பொறுப்பது அறிவுடையோர்க்கு உடமையன்றோ. ஆதலினால் கலைமதி இதழை மகிழ்வுடன் வரவேற்பீர்கள் என நம்பிகையுடன் நன்றி கூறுகின்றேன்.

ம. குலேந்திரன்
(மாணவ இதழாசிரியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவியக் கலை

நுண்கலைகளாகிய அழகுக்கலைகளில் தலைசிறந்தது காவியக்கலையாகும். ஏனெனில் காவியக்கலை ஏனைய கலைகளைப் போலக் கண்ணால் கண்டும் காதால் கேட்டும் இன்புறத்தக்கதன்று; அறிவினால் உணர்ந்து இன்புறத்தக்கது. காவியக் கலை உரைநடையாகவும் இருக்கலாம்; செய்யுளாகவும் இருக்கலாம். பொதுவாகச் செய்யுள் நடையிலேதான் இலக்கிய அழகு மிகுதியும் அமைகின்றது.

காவியக்கலையின் இலக்கணம் என்னவென்றால், அதை எத்தனை முறை படித்தாலும் தெவிட்டாமல் இன்பந்தருவதாக இருக்க வேண்டும். சில இலக்கியங்களை ஒரு முறை படித்த பிறகு மறுமுறை படிப்பதற்கு விருப்பம் இருப்பதில்லை. சில இலக்கியங்களை எத்தனை முறை திரும்பத்திரும்பப் படித்தாலும் அவை இன்பமும் உணர்ச்சியும் அழகும் உள்ளனவாக இருக்கும். இவை தாம் சிறந்த இலக்கிய நுண்கலை எனப்படும்

இலக்கியத்தில் கூறப்படும் விடயங்கள் உண்மை, அழகு, இனிமை ஆகிய பண்புகளைக் கொண்டதாக இருந்தால், அவை படிப்போருக்கு உணர்ச்சியையூட்டி மகிழ்ச்சியைத் தரும். அப்படிப்பட்ட இலக்கியங்கள் அவை வசனமாக இருந்தாலும் செய்யுளாக இருந்தாலும், அழகுக்கலைகள் என்று கூறத்தகும்.

பொதுவாகச் செய்யுள் நடையிலே காவியங்கள் இயற்றப்படுவது வழக்கம். காவியங்களிலே பல செய்யுள்கள், அழகுக் கலையுள்ளனவாக அமைந்து விடுகின்றன. உதாரணமாக நாம் கம்பருடைய செய்யுள் ஒன்றை நோக்குவோம்.

கோதாவரி ஆற்றை இராமனும் இலக்குமணனும் காண்கிறார்கள். அந்த ஆற்றில் பாயும் நீர், சிறந்த கவிஞருடைய செய்யுள் போல, அகலமும் ஆழமும் அழகும் தெளிவும் இன்பமும் உள்ளதாகக் காணப்பட்டது என்று கூறுகின்றார் கம்பர்.

" புவியினுக் கணியாய் யான்ற
பொருள்தந்து புலத்திற் றாசி
அவியகத் துறைகள் தாங்கி
ஐந்திணை நெறி யளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென்
றொழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா
விரியினை வீரர் கண்டார் "

ஆற்று நீரையும் கவிஞனின் கவியையும் ஒப்பிட்டுச் சொல்லோவியமாகத் தீட்டிய இக்கம்ப சித்திரத்தை, ஓவியப்புலவரும் சிற்பக் கலைஞரும் எவ்வாறு தமது கலைகளில் காட்ட முடியும்? ஆகையினால் காவியக்கலையை மனத்தில் சிந்தித்து அறிவுக்கண் கொண்டு காணவேண்டியிருப்பதனாலே, காவியக்கலை அழகுக்கலைகளில் நுட்பமானது எனக் கூறப்படுகின்றது.

காவியப்புலவர் தாம் இயற்றும் காவியத்திலே மெய்ப்பாடு [சுவை] அமையக் காவியத்தை இயற்றுதல் வேண்டும். நாடகத்தில் மட்டுந்தான் சுவை அமைய வேண்டும் என்பதில்லை. காவிய நூல்களிலும் ஒன்பது வகையான சுவைகளும் அமைந்தால்தான் காவியங்கள் இனிமையுறும் நாடகத்தில் சுவைகள் இன்றியமையாதன போன்று காவியத்திலும் சுவைகள் அமைய வேண்டும் என்பது பண்டைக் காலத்தவர் கருத்து. இக்கருத்தினைத் தொல்காப்பிய நூலும் அதன் உரையாசிரியர் இளம்பூரண அடிகளும் நன்கு விளக்குகிறார்கள்.

"நகையே யழுகை யிளிவரன் மருட்கை
யச்சம் பெருமிதம் வெகுளி யுவகையென
றப்பா லெட்டா மெய்ப்பா டென்ப"

என்னும் தொல்காப்பிய சூத்திரத்துக்கு உரை எழுதிய இளம்பூரண அடிகள், கீழ்க்கண்டவாறு விளக்கங் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இவ்விலக்கணங் கூத்தினுட் பயன்படல் உண்டாதலின் ஈண்டு வேண்டாவெனின், ஈண்டுஞ் செய்யுட் செய்யுங்காற் சுவைபடச் செய்யவேண்டுதலின் ஈண்டுங் கூறவேண்டுமென்க

உய்த்துணர் வின்றித் தலைவரு பொருளின்
மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடாகும்

என இவ்வாசிரியர் மெய்ப்பாடுஞ் செய்யுளுறுப்பென ஓதினமை உணர்க", இவ்வாறு கூறிய இளம்பூரண அடிகள்

உய்த்துணர் வின்றித் தலைவரு பொருளின்
மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடாகும்

என்னும் செய்யுளியல் சூத்திரத்துக்குக் கீழ்க்கண்டவாறு உரையும் விளக்கமும் கூறுகின்றார்.

"யாதாயினும்மொன்றைக் கூறிய வழி யதன்கட் பொருண்மையை விசாரித்துணர்தலன்றி, அவ்விடத்து வரும் பொருண்மையானே மெய்ப்பாடு தோன்ற முடிப்பது மெய்ப்பாடென்னும் உறுப்பாம்............செய்யுட் செய்வார் மெய்ப்பாடு தோன்றச் செய்தல் வேண்டுமென்பது கருத்து" இதனாலே, காவியச் செய்யுளிலும் மெய்ப்பாடு எனும் சுவையமைய நூலியியற்ற வேண்டும் என்பது தெரிகிறது.

முற்காலத்தில் தமிழ் ஐம்பெருங் காவியங்கள் இருந்தன. அவை சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி என்பன இவற்றில் குண்டலகேசியும், வளையாபதியும் இப்போது மறைந்து விட்டன. இப்போது தமிழில் சிறந்த காவியங்களாகக் கருதப்படுபவை சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, பெருங்கதை, சூளாமணி, கம்பராமாயணம், நைடதம், நளவெண்பா முதலியன. இவற்றுடன் பெரிய புராணம், திருவிளையாடற்புராணம், கந்தபுராணம்.ஆகியவற்றையும் கூறலாம். தமிழ்மொழி காவியவளம் நிறைந்த சிறந்தமொழி இதில் உள்ள காவியக்கலைகளையெல்லாம் இங்கு எழுதிக்காட்ட முடியாது. காவியச்சுவையுள்ள அறிஞர் அவற்றைத்தாமே கண்டு உண்டு சுவைப்பாராக. காரிகையும் கற்றுக் கவி பாடலாம்; ஆனால், கவியிலே உண்மையும் அழகும் இனிமையும் அமையப் பாடுவது அரிது. காவியங்களையும் இயற்றலாம்; ஆனால், அதில் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் எட்டு வகையான சுவைகளையும் அமைத்துக் காவியம் அமைப்பது அரிது. இவையெல்லாம் பொருந்த அமையுமானால் அதுவே காவியக்கலை என்று போற்றப்படும். எனவே இவ்வாறு சிறப்புக்கள் பொருந்திய காவியக்கலையைப் போற்றி வளர்ப்பது நாகரிகம் பெற்ற மக்களின் கடமையாகும்.

தொகுப்பு
ந. தனஞ்ஜெயன்
A/L (96) - உயிரியல் பிரிவு

★ ★ ★

இன்னலை தாம் கவி எழுத
ஏற்ற பொருள் என்று பிறர்
சொன்னவற்றை நீர் திருப்பிச்
சொல்லாதீர் சோலை, கடல்,
மின்னல், முகில் தென்றலினை
மறவுங்கள் மீந்திருக்கும்
இன்னல், உழைப்பு, ஏழ்மை உயர்வு
என்பவற்றைப் பாருங்கள் (மஹாகவி )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழிலக்கிய வானில் சுடர்விட்டு ஒளிரும் விண்மீன்"

தமிழிலக்கிய வானில் சுடர் விட்டு ஒளிரும் விண்மீனாகப் போற்றப்படுபவர், சாகாவரம் பெற்ற கவிதைகளைப் படைத்த கவிச்சக்கரவர்த்தி பாரதியாராவர். "மகாகவி" எனவும் 'புரட்சிக்கவி" எனவும் தமிழ் கூறும் நல்லுலகெங்கும் புகழப்படும் பாரதியார், ஆயிரத்து எண்ணூற்று எண்பத்தி இரண்டாம் ஆண்டு, எட்டயபுரத்திலே சின்னசாமி ஐயருக்கும் இலக்குமி அம்மாளுக்கும் புதல்வனாக அவதரித்தார். சிறு வயதிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்த பாரதி தேசிய கீதங்கள், பக்திப் பாடல்கள், ஞானப்பாடல்கள், கண்ணன் பாட்டு, குயில் பாடல், குழந்தைப் பாடல்கள், பெண்விடுதலைப் பாடல்கள் பாஞ்சாலி சபதம் போன்றவற்றை பாடினார்.

தேசிய கீதங்கள் பாடும் போது, ஜாதி மதங்களைப் பாரோம், உயர் ஜன்மம் இத்தேசத்தில் எய்தினராயின், வேதியராயினும் ஒன்றே – அன்றி வேறு குலத்தினராயினும் ஒன்றே' என வந்தே மாதரம் பாடினார். பாரத ஜனங்களின் அக்கால நிலைமையை கருத்திற் கொண்டு, "நெஞ்சு பொறுக்குதிலையே – இந்த நிலைகெட்ட மாந்தரை நினைத்து விட்டால், அஞ்சியஞ்சி சாவார் இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே" என்று பாடினார்.

தமிழ் மொழியின் சிறப்பை பாடிய பாரதியார், யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்றும் தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" எனவும் பாடினார் அவர் சுந்தரத் தமிழின் மீது வைத்த பெருமதிப்பிற்கு இது சான்று பகருகின்றதன்றோ.

கண்ணனை தாயாக, தந்தையாக, தோழனாக, சேவகனாக, அரசனாக, சீடனாக, சற்குருவாக நினைத்துப் பாடினார். கண்ணம்மாவை குழந்தையாக, காதலியாக, குலதெய்வமாக நினைத்து பாடல்களை எழுதினார். ' பட்டங்கள் ஆள்வதுஞ் சட்டங்கள் செய்வதும் பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்; எட்டு மறிவினில் ஆணுக்கிங்கேபெண் இணைப்பில்லை காணென்று கும்மியடி" என்று புரட்சிக் கவிதைகளை வாரி இறைத்தார். " அச்சம் தவிர் ஆண்மை தவறேல் என ஆண்களுக்கும் உற்சாகமூட்டினார். மழையையும், புயற்காற்றையும் கூட விட்டு வைத்தாரா? "வெட்டியடிக்குது மின்னல், கடல்; வீரத்திரை கொண்டு விண்ணையிடிக்குது; கொட்டியிடிக்குது மேகம், கூக் கூவென்று விண்ணைக் குடையுது காற்று; சட்டச் சட சட்டச்சடடட்டா – என்று தாளம் கொட்டிக் கனைக்குது வானம்; எட்டுத்திசையும் இடிய மழை எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா;" என்று அழகாகப் பாடினார். கற்றறிந்த பண்டிதர் மட்டுமே உணர்ந்து கொள்ளக்கூடியதாக இருந்த இலக்கண இலக்கியங்களை பாமர மக்களும் அறிந்து கொள்ள இலகுவான முறையில் மாற்றி அமைத்தார்.

பாவேந்தன் பாரதிதாசன் கூட, "பாட்டுக்கொரு புலவன் பாரதியடா அவன் பாட்டைப் பண்ணொடொருவன் பாடினானடா, கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனடா" என்று பாரதியாரைப் புகழ்ந்து பாடினார். பாரதியார் அவரது முப்பத்தொன்பதாவது வயதில் பூத உடலை நீத்து புகழுடல் பெற்றார். " பாரதி என்றும் நம்மோடு வாழ்வார்; நம்மையும் வாழவைப்பார்"

தொகுப்பு
சு. ரதீஸ்காந்
ஆண்டு 8T

★ ★ ★ ★

# செஞ்சோற்றுக்கடன்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு" என்கிறது வள்ளுவர் படைத்த பொய்யா மொழி. ஏதாவது ஒரு வழியில் எமக்கு உதவி செய்தவருக்கு நாமும் நம்மால் இயன்ற உதவியை செய்தல் வேண்டும். இதனாலன்றோ நம் முதாதையர் "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்று கூறியுள்ளனர். செஞ்சோற்றுக்கடனை கழித்தவர்கள் இன்னும் உலகில் போற்றப்படுகின்றனர்.

கர்ணன், கும்பகர்ணன், சல்லியன் போன்றோர் செஞ்சோற்றுக்கடனைத் தீர்த்தவர்களாகக் கருதப்படுகின்றனர். மகாபாரதக் கதையை எடுத்துக்கொண்டால் குந்திதேவிதான் தன்தாய் என கர்ணன் அறிந்தும், துரியோதனனைப் பிரிந்து பாண்டவர்களுடன் தான் சேரமாட்டேன் என்றான். கர்ணனுக்கு அரசபதவியையும், ஆளணியையும், செல்வத்தையும் வழங்கியவன் துரியோதனனே என்பதனால் அவனுக்கு துரோகமிழைத்து தான் பாண்டவர்களுடன் சேரவிரும்பவில்லை எனக் கூறினான்.

மந்திர தேசத்து மன்னனான சல்லியன் படையோடு பாண்டவர்களுக்கு உதவி செய்ய வந்தான். அப்போது துரியோதனன் தனது பணியாட்களை அனுப்பி அவனை நன்கு உபசரித்தான். சல்லியனும் தருமன் தான் தன்னை உபசரிக்கின்றான் என எண்ணி அந்த உபசரிப்பை ஏற்றுக்கொண்டான். எனினும் துரியோதனன்தான் தன்னை உபசரித்தவன் என்பதை அறிந்தான். இதனால் செஞ்சோற்றுக்கடனுக்காக அவன் தனது உறவினர்களான பாண்டவர்களையே எதிர்த்தான்.

இராமாயணத்தில் கும்பகர்ணன் இராவணனின் ஆதரவுடன் வாழ்ந்து வந்தான். இராமனின் மனைவியான சீதையை இராவணன் கவர்ந்து வந்தபோது கும்பகர்ணன் இராவணனை கண்டித்தான். எனினும் செஞ்சோற்றுக் கடனுக்காக தனது குல தெய்வமான இராமனையே எதிர்த்து போரிட்டு மடிந்தான்.

ஒருவர் செய்த உதவிக்கு நன்றி தெரிவிப்பது வெறும் வழக்கமாக தற்போது மாறிவிட்டது. இருப்பினும் தாம் பெற்ற உதவிக்காக உளமார்ந்த நன்றியைத் தெரிவிப்போரும் எம்மிடையே இருக்கின்றனர்.

ஆக்கம்
R. சுரேஸ்காந்
ஆண்டு 8 T

★ ★ ★ ★

# குறள் தந்த வாழ்வு

தமிழ் இசையாய், கவியாய், இனிதாய், எளிதாய் நம்மோடு உறவாடும் முதுமொழி, பொதுமொழி, தாய்மொழி வள்ளுவரும், பாரதியும், கம்பரும் இன்னும் பிற கவிகளும் தமிழோடு கலந்து, இழைந்து, விளையாடி அழியாத பல கருவூலங்களை நமக்கு தந்தவர்கள்.

இதனுள் வள்ளுவர் வகுத்த தமிழ் வான்புகழ் பெற்ற தமிழ் அஃது உலகுக்கே பொதுவான வேதத்தை சொல்கின்றது. காலத்தாலும், மதத்தாலும் மாற்று மொழிகளாலும் அழியாத மாறாத மறையாத மறையாக வள்ளுவரின் தமிழ் இன்று உயர்ந்து நிற்கின்றது. அறத்தை அழகாக அறிந்து சொன்னார். இன்பத்தை எளிதாக எடுத்துச் சொன்னார். பொருளை புதிதாகப்பிரித்துச் சொன்னார். இது தமிழர் வாழ்வில் பொருள் பயன் உணர்த்தி எம்மினத்தவரை இலக்கியத்தில் நாயகத்துவம் பெற வைத்த ஓர் அரிய நூலாகும். இதனை சிறப்புடைய திருக்குறளானது கூறும் கருத்துக்களுள் மனித வாழ்வைப் பற்றி அவை கூறுகையில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்கிறார் இங்கு "வாழ்வாங்கு வாழ்தல்" என்பது குறளின் அடிப்படையில் நோக்கப்படின் குறள் வாழ்வில் வகிக்கும் பங்கு பற்றி தெளிவாகும். வள்ளுவரது கருத்துக்கள் வாழ்க்கையின் நான்கு படிகளுக்கும் தேவையான ஒழுக்கங்கள் நடைமுறைகள் ஆகியவற்றை கொண்டதாக அமைந்துள்ளது. ஓர் குழந்தை வளர்ந்து சிறுவனாகி பின் கட்டிளம் காளையாக மாறி பின் கற்றறிந்த வயோதிபனாகி பின் மண்ணை விட்டு செல்லும் வரை அவரது அறிவுரைகள் கடைபிடிக்கத்தக்கன.

முதல் படியான பிரம்மச்சாரியத்தில் ஓர் சிறுவனுக்குத் தேவையான கல்வி, ஒழுக்கம், கடவுள் வணக்கம், அறம், ஒழுக்காறின்மை போன்ற பல கருத்துக்களைப்பற்றி எடுத்துரைக்கின்றார். கல்வியைப்பற்றி குறிப்பிடுகையில்

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றார் டொழா ரெனின்"

என்கிறார். கல்வியின் பயனே கடவுளை வணங்கல் என்று குறிப்பிட்டு கடவுள் வணக்கத்தையும் மேம்படுத்துகிறார்.

"அழுக்காறு அவாவெகுளி யின்னாச்சொன் னான்கு
மிழுக்கா வியன்ற தறம்"

என்று அறத்தை பாலிற் தேன் கலந்தாற் போல் எமக்கு இனிமையாக கூறுகின்றார். அடுத்த படியான கிருகஸ்தம் எனும் இவ்வாழ்க்கைப் படிக்கு இல்லறவியல் என்ற பகுதியையே ஒதுக்கி விட்டார் வள்ளுவர். மூன்றாம் படியான வானப்பிரஸ்தம் நான்காம் படியான சந்நியாசம் போன்ற இரு படிகளுக்கும் நீத்தார் பெருமை, துறவு, அவாவின்மை எனும் அதிகாரங்கள் மூலம் இவ்வுலக இன்பத்தை விட்டு பேரின்ப பெருவாழ்வை பெற அடியும் எடுத்து கொடுக்கிறார்.

இவ்வாறு மனித வாழ்வானது ஆசை வேகத்துடன் தொடங்கி முடிவில் அறம், அன்பை, தழுவி சிறக்க வேண்டும் என கூறுகிறார். தெய்வப்புலவர் இதுவே மானிட தர்மம் ஆகும். இவ்வாறாக தர்மம் மோட்சத்தை அடையும் வழியை குறள் எளிதாக, அழகாக, இனிதாக, இதமாக, நயமாக எடுத்து கூறுகிறார்.

இத்தகைய சிறப்புடைய இதன் சிறப்பை புகழ வார்த்தைகள் தான் ஏது? வாழ்வாங்கு வாழ்தல் எனும் ஓர் சொல்லை மட்டும் கொண்டு முழு வாழ்கையையே உணர்த்திவிட்டார் வள்ளுவர். இதையே

"அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புரட்டி குறுகத்
தரித்த குறள்"

என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.நாம் இங்கு கண்டது குறள் எனும் மாகடலின் ஒரு துளியே ஆகும். எனவே நாம் குறளின் கருத்துக்களை பின்பற்றி பெருவாழ்வு எய்துவோமாக.

ஆக்கம்
மு. பிரதாபரன்
ஆண்டு 12 கணித பிரிவு.

★ ★ ★

பணத்துக்காகத் திருமணம் செய்து கொள்பவன் சுதந்திரமற்ற அடிமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை

கலை என்று கூறும்போது இசை, நாட்டியம், ஓவியம், சிற்பம் என்பவைத்தான் முக்கியத்துவம் பெறுகின்றன. இவற்றுள் சங்கீதமே மனத்தை இளகச்செய்யும் கலையாகும். நமது கடவுளின் வடிவங்கள் அனைத்துமே இசையை ஆதாரமாக கொண்டுள்ளன. நமது வாழ்க்கையில் நிகழும் ஒவ்வொரு சம்பவமும் இசையோடு சம்பந்தப்பட்டது. உலகில் உள்ள சகல ஜீவராசிகளும் இன, மத, மொழி பேதமின்றி ரசிக்கக்கூடிய கலை சங்கீதம் ஒன்றேயாகும். சங்கீதம் ஒரு தெய்வீகம் பொருந்திய கலையாகும். சிவனின் கையிலுள்ள உடுக்கையும், கலைமகள் கையிலுள்ள வீணையும், கிருஷ்ணன் கையிலுள்ள புல்லாங்குழலையும் உதாரணமாக கூறலாம். ஏனெனில் இவை தெய்வீகத்தன்மையை விளக்குகின்றன. மனிதன் இசை மூலமும், நாட்டியத்தின் மூலமும் இயற்கையாகவே நிம்மதி பெற முடியும்.

கலைகள் அறுபத்தினான்கு ஆகும். இந்த அறுபத்திநான்கு கலைகளுள் இசையும், நாட்டியமும் ஒன்றை விட்டு ஒன்று பிரிக்கமுடியாமல் இருந்தால்தான் நமக்கு மேலும் இன்பம் கிடைக்கும். ஓவியமும் கலைகளுள்ளே சிறந்த ஒரு கலையாகும். ஒருவன் ஓர் ஓவியத்தை வரையும்போது அது அவன் மனதில் இன்ப உணர்ச்சியை ஏற்படுத்துகிறது. ஓவியம் ஒரு அழகியற் கலையாகும். ஒரு மனிதன் ஒரு ஓவியத்தை இரசித்து இன்பம் பெறுகின்றான். ஆகவே இக்கலைகள் மனித உள்ளத்தில் இன்பத்தையே தருகின்றது எனலாம். சப்தத்தை எழுப்புவதோடு அங்கங்களை அசைப்பதனாலேயே நாட்டியம் உருவாகிறது.

கேட்பதாலும் ஸ்வர சாகித்தியத்தாலும் தொண்டை என்கிற குரல் வளத்தாலும் சங்கீதம் உருவாகிறது. நவரச உணர்ச்சிகளை விளக்குகிற அங்க அசைவே அபிநயம் ஆகும். இதனாலேயே நாட்டியத்துக்கு நிருத்தம் என்றும் ஒரு பெயர் ஏற்பட்டிருக்கிறது. சங்கீதத்தை சப்தம், ஸ்வரம், லயம் என்பன மெருகூட்டுகின்றன. சிற்பம் மனிதனின் கைத்திறமையை காட்டுகின்றது. மனிதனின் நுட்பமான வேலைப்பாடால் அமையும் உருவமே சிற்பமாகும். கடவுளுக்கு நாம் செய்யும் உபசாரங்கள் 64 கலைகளாக விளங்குகின்றன. இந்தக் கலைகள் யாவும் காந்தர்வ வேதம் எனப்படும். மனத்திற்கு உற்சாகம் தருவதனாலயே இக்கலைகள் காந்தர்வ வேதம் என்று அழைக்கப்படுகின்றன. இனத்தால், மதத்தால் மொழியால் மனிதன் வேறுபட்டாலும் அவன் எல்லாவற்றையும் மறந்து உலகப் பொது மொழியாவதுபோல் கலையால் ஒன்றுபடலாம். ஆகவே மனித ஒற்றுமையை உருவாக்கும் பாலமே கலையாகும்.

ஆக்கம்
**N. பிரசன்னா**
ஆண்டு 9T

★ ★ ★

# "தருமத்தின் வாழ்வதனைச் சூது கௌவும், தருமம் இறுதியில் வெல்லும்"

தருமம் என்றொரு பொருள் உளது என்பது கந்தபுராணத்தை யாத்தருளிய கச்சியப்பர் சுவாமிகளின் திருவாக்கு. மனித சமுதாயம் தக்கது இது தகாதது இது என்று தனது அனுபவத்தினால் உணர்ந்து தக்கது எனக் கண்டதைத் தருமம் எனக் கொண்டது. உலக வாழ்வின் நிலைபேற்றிற்குத் தருமமே அத்தியவசியமானது என்று பெரும்பாலானவர் உணர்ந்துள்ளனர். என்னும் அடிக்கடி இவ்வுணர்ச்சி சரியானதா? என்ற கேள்வியும் அவர்களின் உள்ளங்களிலே எழுவதும் தவிர்க்க முடியாததாகின்றது. காரணம் ஆட்சி, அதிகாரம், ஆட்பலம் முதலிய காரணிகளால் தருமம் தோற்றுவிடுவது போலவும் அதருமம் தலையெடுத்து வெற்றிக் கொடி நாட்டுவது போல்வதுமான தோற்றம் உண்டாவதே. ஆனால் இத்தோற்றம் நிலையானதன்று. தருமம் நீடித்து நின்று வருத்தும் என்பது பொய்மையானதாகும். இதனையே இக்கட்டுரையின் தலையங்கமாய் அமைந்துள்ள பாரதியின் கூற்று உறுதிப்படுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமத்தை இடையிடையே சூழ்ச்சியும் சூதும் கௌவி மறைப்பது உண்மைதான். சந்திரனையும், சூரியனையும் கிரகணம் மறைப்பதனை நாம் கண்டிருக்கின்றோம். இம்மறைப்பு நீடிப்பதுண்டா? சில மணித்தியாலங்களில் கிரகணம் மறைந்து விடச் சூரியனும் சந்திரனும் முன்போல ஒளிகாணுவது தானே நிலையான உண்மை? தருமமும் இந்தச் சூரியன் சந்திரன் போன்றதே, அதன் ஒளியினை நிரந்தரமாக மறைத்து விடும் ஆற்றல் எந்தச் சக்திக்கும் இல்லை.

'தருமத்தின் வதனம் என்னத் திகழ்ந்தது தனிவெண்திங்கள்' என்பது கம்பராமாயணத்தில் வரும் ஓர் அடி. உலகில் எழுந்த பேரிலக்கியங்கள் பலவற்றிலும் தருமத்தின் இறுதிவெற்றி மிகத்தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. பாரதநாட்டின் பழம் பெரும் இதிகாசங்களான பாரதமும், இராமாயணமும் தருமத்தின் பெருமையையும் அதருமத்தின் சிறுமையையும் துலாம்பரமாக எடுத்துக் காட்டி மக்களின் வாழ்வினை நெறிப்படுத்திச் செல்வதை அறியாதவர் யார்? கைகேயின் சூழ்வினையால் இராமன் சீதையுடன் பதினான்காண்டுகள் காடுறைய நேரிட்டது. காட்டிலே இராவணன் சீதையைக் கவர்ந்து சென்றான்.

மூவுலகையும் வெற்றிகொண்டு பேரதிகாரமும் பெரும்படைப்பலமும் பெற்றிருந்த அரக்கர் கோனான அவன் தனது அதரும வழியிலே நிலைத்து வாழ முடியவில்லை. இறுதியில் எவ்வகையிலும் தன்படைக்குச் சமமாகாத குரங்குப் படைக்குத் தலைமை வகித்து வந்த மானிடர் இருவரால் இராம லக்குமணரால் முக்கோடி வாழ்நாளும் முயன்று பெற்ற தவவலியும் இழந்து மரணத்தையும் தழுவ நேர்ந்தது. பாரதப்போரில் பாண்டவர் ஐவர் துரியோதனாதியோர் நூற்றுவர் ஆனால் தருமத்தின் காவலனான ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவை, தருமம் அவர்கள் பக்கத்தைச் சார்ந்து நின்றதால் நாடிழந்து பன்னீராண்டு வனவாசமும், ஒராண்டு அஞ்ஞாதவாசமும் செய்து பலவாறு இடருற்ற போதிலும் பாண்டவர்களுக்கே இறுதியில் வெற்றிக்கிட்டியது. எனவே தருமம் இறுதியில் வெல்லும் என்பதை நாம் எச்சந்தர்ப்பத்திலும் மறவாதிருக்க இந்த இருபெரும் இதிகாசங்களும் நமக்கு கலங்கரை விளக்கங்களாக வழி காட்டுகின்றன என்பதில் ஐயமில்லை.

இதிகாசங்கள் கற்பனை என்று சிலர் ஒதுக்கிவிடல் கூடும். ஆனால் வரலாறு காட்டும் உண்மையும் இதிகாசம் போதிக்கும் உண்மையே என்பதை நாம் உணர்ந்து கொள்ள ஆதாரங்கள் பல உள்ளன. சென்ற நூற்றாண்டிலே உலகம் முழுவதையும் தன்னடிப்படுத்திப் பேரரசனாய் விளங்கிய நெப்போலியன் முனைந்த கதை யாவரும் அறிந்ததே உயிர்களைத் துச்சமாக மதித்து ஆதிக்க வெறியில் தலைப்பட்டு நின்ற அவன் முடிவு என்னவாயிற்று? "ஆரிய இனமே உலகைக் கட்டி ஆள வேண்டும் ஜேர்மனியே உலக அரங்கில் பேரரசாக மலரவேண்டும் மற்றைய நாடுகள் அதன் கீழ்க் கைகட்டிச் சேவகம் புரிதல் வேண்டும்" என்று கனாக்கண்டு இலட்சக்கணக்கான அப்பாவி மக்களைக் கொன்று குவித்த சர்வாதிகாரி ஹிட்லர் முகவரியின்றி மறைந்து போனதை நாம் கண்கூடாகக் கண்டுள்ளோம். அதருமத்தின் மொத்த உருவமான அவன் உலகம் முழுவதையுமே ஒரு கலக்குக் கலக்கியது உண்மைதான் இவனூடாக அதருமமே கொடிகட்டிப் பறக்கப் போகின்றதோ என்று நல்லவர்களெல்லாம் அஞ்சி நடுங்கியது உண்மைத்தான். ஆனால் முடிவு என்னவாயிற்று?

இன்று உலகில் அக்கிரமங்களும், அராஜகங்களும் தலைவிரித்தாடுகின்றன. இதனால் தருமம் அழிந்து அதருமம் தலை தூக்கி நிற்கின்றது. ஆனால் அதருமம் என்றொரு அரக்கன் ஒரு நாள் அழிவான் என்பது திண்ணம். சூது தருமத்தைக் கிரகணமாகக் கௌவிக்கொண்டிருப்பது மறுக்க முடியாதது. ஆனால் இது நிலைக்கப் போவதில்லை. இறுதியில் தருமம் வெல்லும் என்பதை நாம் இருந்து பார்க்காவிட்டாலும் எமது சந்ததியினர் நிச்சயம் காண்பர். ஏனெனில் 'தருமம் என்றொரு பொருள் உளது'

ஆக்கம்
ஆர். அஷோக்
ஆண்டு 9

❄ ❄ ❄

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசான் என்பது பள்ளியின் ஓசோன்

"குருவும் தாரமும் இறைவன்
கொடுத்த வரம்"

பெற்றெடுத்தாள் அன்னை. வித்தை கற்பித்தான் ஆசான். அந்த ஆசான் செய்யும் தொழிலின் அர்த்தத்தை அளப்பரிய சமுத்திரத்திற்கு ஒப்பிடலாம். ஆனால், அதில் சிற்றொரு பகுதிக்கடலையே என் கையெழுத்துக்களில் பொறிக்கின்றேன்.

காலன் என்னை சார்ந்தது. காதல் ஆசானை நோக்கியது. அந்த நோக்கல் மலர்மீது தேன் பருகும் வண்டின் ரீங்காரம் போன்ற அர்த்தமற்ற அலங்கார ஓசைகள் என்று எண்ணிவிடாதீர்கள். தாயிற் சிறந்த கோயிலுமில்லை ஆனால், அந்த அன்னையோ தன் பிள்ளையை மட்டுமே பாசத்தோடு பரிவு காட்டுவாள். ஆனால், ஆசானோ அவ்வாறில்லை. "அ" என்ற எழுத்தை கற்ற எல்லாக் குழந்தைகளையும் தன் பெற்றெடுத்த பிள்ளையாக எண்ணி பாசம், பரிவு காட்டி நேசவார்த்தைகளால் ஆதரிக்கிறான்.

பத்துத்திங்கள் சுமந்து பெற்றெடுத்து பாலூட்டி, தாலாட்டி, பள்ளிவரை அனுப்புபவள்தான் அன்னை. ஆனால், அந்தப்பிள்ளையின் பாதையில் வரும் அத்தனை சீர்திருத்தங்களையும் திருத்தி நற்சிறார்களாக நாட்டுக்கு பெருமை தேடித்தருபவன்தான் ஆசான். தன்னிடம் கல்வி கற்ற ஒருவன் நல்லதொரு நிலையை அடைந்தால், தான் பெற்ற பிள்ளையாக எண்ணியே பெருமிதம் அடைவார்கள்.

கற்பிக்கும் காலத்திலே பாரபட்சம் இன்றி எல்லா மாணவர்களுக்கும் ஒரு வழிகாட்டியாக அவர்களை அடக்கி, ஒடுக்கி, அன்புமழை பொழியும் அரிய தொழில்தான் ஆசிரியத்தொழில். அத்தொழிலை செய்பவர்கள் தங்களை அர்ப்பணித்து தங்கள் வாழ்வை அர்ப்பணித்து வளமான சிறார்களை வளர்த்தெடுக்கும் அன்னை என்றால் கூட தப்பில்லை.

வளரும் சிறார்களின் வாழ்க்கையை வடிவமைப்பதே கலைக்கூடம். ஆனால், அதன் ஒவ்வொரு கதாப்பாத்திரங்களும் ஆசான் என்ற அரிய பிறவிகளுக்கே உரியது. ஒரு கோலத்தின் வர்ணத்தை வகைக்குறித்து போடுவதோ ஒரு கலைஞனின் திறமை.ஆனால், பல மாணவர்களிலே ஒவ்வொருவருடைய இயல்புகளையும் கண்டு அவர்களின் பாதைகளை வகுக்கும் ஆசான்களை யாருக்கு ஈடாக சொல்லுவர்?

இதற்கெனவே பிறந்தோம், இதற்காகவே வாழ்கிறோம், என்று எத்தனை மாணவர்களின் வாழ்வில் ஏற்றிவைத்த தீபங்கள் என்றென்றும் அணையாத தீபங்களே. இவையெல்லாம் தேசத்துக்காக விளைந்த முத்துக்களே. அந்த ஆசான் இல்லையென்றால் இன்று அணு கூட இயங்கியிருக்க முடியுமா? அவர்கள் அறிவியல் தத்துவங்களை ஆயிரமாயிரம் வார்த்தைகளால் அவற்றின் அடிப்பொருளை உணர்த்தும் ஆசான்களின் அறிவியல் திறமையை யாரால் கூறமுடியும்? அள்ள அள்ள ஆற்று நீரும் வற்றிவிடும். ஆனால், ஆசான் அமுத சுரப்பிகள் என்றுதான் வற்றுமோ?

தனது ஒவ்வொரு வார்த்தைகளிலும் பல மாணவர்களின் வார்த்தையை தீர்மானிக்கிறது. ஒருவன் தனது பாதையில் தகுந்த முறையில் செல்ல வேண்டுமாயின் ஒரு உதவி தேவை. ஆனால், ஒரு மனிதன் வாழ்க்கைப் பாதையில் செல்ல வேண்டுமாயின் ஆசான் என்ற வழிகாட்டி நிச்சயம் தேவை. ஆழ்கடலில் விளைந்த முத்துக்களால் அக்கடலுக்கு என்ன பயன்? ஆனால், அதனை அகழ்ந்தெடுத்தால் அதன் பெறுமதி என்ன? அதுபோல இந்த மாணவ சமுத்திரத்தில் உள்ள முத்துக்களை அகழ்ந்தெடுத்து அதன் ஒளியை காட்டுபவர்கள் ஆசான்களே.

ஒரு நாட்டின் வளர்ச்சி அந்நாட்டின் கல்வி அறிவிலே தங்கியுள்ளது. அபிவிருத்தி என்ற வார்த்தையின் ஆரம்பம் அறிவியல் சிநேகங்களிலே தங்கியுள்ளது. கல்விக்கடலில் ஓடும் ஓடங்கள் கரை வரை வலிக்கும் ஆசான்களுக்கு அவ்வோடம் எவ்வாறு எத்திசைக்கு ஏற்றமுறையில் செலுத்த வேண்டும் என்று எண்ணி முன்கூட்டியே முடிவெடுத்து அவ்வோடத்தை வலிக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

என்ற அறிவியல் வார்த்தையினை ஆயிரமாயிரம் சிறார்களுக்கு போதித்து அவ்வுண்மைக்கு உயிர் கொடுக்கும் ஆசான்களே, ஒரு அரிய சேவையை ஆற்றுகிறார்கள். தன் இரத்தத்தில் ஒரு பகுதி தன் உள்ளக்கருத்துக்களை வார்த்தைகளாக சிந்தி உயர்த்த உதவும் ஏணிப்படிகளை போல உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற வேறுபாடின்றி உயர்த்தும் உயிர்களாக ஆசான்களின் அரிய அர்ப்பணத்தை அழகுபடுத்த வசனங்களுண்டோ?

நீர்க்குமிழி போல நிலையில்லாத இவ்வாழ்க்கையில் நிகழும் அகழாத நினைவுகளெல்லா வற்றையும் தன்நிழலிலே நிற்கும் சிறுவர்களுக்கு வளமான வார்த்தைகளால் எடுத்துரைத்து வாழவைக்கும் ஆசான்களின் அன்புமனம் பாதிக்கப்பட்டு விட்டால்,

"தீப்புண் ஆறினாலும் வாய்ப்புண் ஆறாது" அதுபோல அவர்களின் வாழ்க்கையும் ஆறாது. அவ்வாசான்களுக்கு அன்பும், பரிவும், பாசமும், நேசமும், காட்டி அவர்கள் மனதை தீண்டாது மாணவ சிறார்கள் வாழ்வார்களேயானால் வளமான எதிர்காலம் உருவாகும் என்பதில் ஐயமில்லை.

ஆக்கம்
எஸ். சுகீதரன்
உயர்தரம் 95 கணிதப்பிரிவு

★ ★ ★

# கல்வி என்றும் அழியாத செல்வம்

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

கல்வியின் அருமையைப் பற்றி வள்ளுவர் கூறும் போது எண், எழுத்து ஆகிய இவ்விரண்டும் மனிதனின் இருகண்கள் போன்றவை என்கிறார்.

கல்வி என்னும் செல்வம் அழியாதது, நிலையானது, களவாட முடியாதது. கற்றவர்க்கு சிறப்பை தேடிக் கொடுப்பது. காலமெல்லாம் காப்பது, கற்கக் கற்கக் குறையாதது, எனவே நாம் அனைவரும் கல்வியை சிறந்த முறையில் கற்பது எமது தலையாயக் கடமையாகும். கல்வியைப் பற்றி ஒரு மதம் மாத்திரம் கூறவில்லை; எல்லா மதங்களும் கல்வியின் பெருமையை எடுத்து இயம்புகின்றன. எச்சமூகத்திலும் கல்வி கற்றவர் சிறப்பாகவும் மதிப்புடையவராகவும் கணிக்கப்படுகிறார்.

உலகில் ஒரு மனிதன் கல்வியை முழுமையாக அதாவது உலகத்திலுள்ள அனைத்து விடயங்களையும் கற்க முடியாது. ஆகவே நமக்கு எல்லாம் தெரியும் என்ற எண்ணம் கொள்ள கூடாது. இதைத்தான் ஔவையாரும்,

"கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு" என்றார்.

உலகில் கல்வி கற்பது ஆண் பெண் ஆகிய இருவரினதும் கட்டாயக் கடமையாகும். சில பிள்ளைகள் கல்வியை கற்பது தனக்காக அல்ல பெற்றோரின் வற்புறுத்தலுக்காகும். முஸ்லீம்களின் இறைத் தூதுவரான முகம்மத் நபி (ஸல்) அவர்கள் "சீனா தேசம் சென்றாலும் சீர்கல்வியைக் கற்றுக் கொள்" என்று கல்வியின் முக்கியத்துவத்தை கூறியுள்ளார். இது முஸ்லீம்களுக்கு மாத்திரம் அல்ல, உலகில் வாழும் அனைவருக்கும் பொதுவானது. அதே போன்று வள்ளுவரும் தான் எழுதிய திருக்குறளில் கல்வியின் மகத்துவத்தையும் கற்றவர்க்கு உள்ள சிறப்பையும் எடுத்துக் கூற இருபது அடிகளை ஒதுக்கினார். இவர் கற்றவரின் பெருமையை கூறும் போது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கண்ணுடையர் என்பர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்" என்று கூறி யுள்ளார். இதன் மூலம் கல்வி கற்றவர்கள் தான் கண்ணுள்ளவர்கள் கல்விகற்காதோருக்கு கண்ணிருந்தாலும் அவை புண் போன்றவை என்கிறார்.

இவர் கல்வி கற்றவர்களை பற்றி எழுதியதோடு கல்விகற்காதவர்களைப் பற்றியும் எழுதியுள்ளார். இதற்காக இருபது அடிகளை ஒதுக்கினார். கல்லாதவர்கள் பற்றி கூறும் போது "கல்லாதவரும் நனிறல்லர் கற்றார் முன் செல்லாதிருக்கப் பெறின்" கல்லாதவரும் அறிவாளிகள் கல்விமான்களுக்கு முன்னால் செல்லாமல் இருக்கும் வரை, என்று கூறி கற்றோரின் சிறப்பை மற்றோரில் இருந்து பிரித்து காட்டுகிறார். ஔவையார், யேசு, முகம்மத் நபி (ஸல்) புத்த பெருமான் போன்றோர் மாத்திரமன்றி இப்பூவுலகில் வந்துதித்த நன்மக்கள் யாவரும் கல்வியின் சிறப்பை எடுத்தியம்பியுள்ளனர்.

எனவே நாமும் நல்லன கற்று
நற்குணம் பெற்ற நற்குடியாகுவோம்.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து"

ஆக்கம்
செல்வன் S.M. யாசிர்.
ஆண்டு 8

★ ★ ★

# கல்வி

கல்வி என்பது மனிதனுக்கு அறிவூட்டும் ஒரு விளக்குப் போன்றது. மனிதரிடத்திலுள்ள அறியாமையைப் போக்கி நல்வழிக்காட்ட வல்லது. "கற்றறிந்தவனே கண்ணுடையவனாகக் கருதப்படுவான், எனவே மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் கற்க வேண்டியதைக் கற்று கற்ற நெறிப்படி ஒழுக வேண்டும். உலகில் உள்ள செல்வங்களிலே கல்விச் செல்வம் உயர்ந்தது. நிலையானது. கல்வியை நாம் கற்கும் பொழுது மிகவும் ஆர்வத்துடனும் திட்டவட்டமாகவும் சரியாகவும் அமைத்துக் கற்க வேண்டும். கடல் கடந்து சென்றாலும் கல்வியே நமக்கு கைகொடுத்து உதவும். கள்வரால் கவரப்படாத செல்வம், கல்விச் செல்வம் ஆகும். கொடுக்க கொடுக்கப் பெருகுவது கொடுத்தால் குறைவு படாததும் கல்விச் செல்வமே. பகைவரையும் நண்பராக்கும்.

ஔவையார் "பிச்சைப்புகினும் கற்கை நன்று" என்று கல்வியின் முக்கியத்துவத்தை அறிவுருத்தியுள்ளார். கரையில்லாத கல்விச் செல்வத்தை எந்த வயதிலும் எப்போதும் கற்று சென்ற இடமெல்லாம் சிறப்புப் பெற முடியும். கல்வியைக் கற்காதோர் கண்ணில்லாதவருக்குச் சமம் என்பார்கள். ஆகவே சென்ற இடமெல்லாம் கற்றவருக்கே சிறப்பு.

ஆக்கம்
கிறிஸ்டோபர்
ஆண்டு 4D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மொழிக் கல்வியும் பிறமொழிக் கல்வியும்

ஒருவன் பிறந்து மொழிபயிலத்தொடங்கும் பொழுது முதலிலே அவனுக்கு அறிமுகமாகும் மொழியே பெரும்பாலும் அவனின் தாய்மொழியாகக் கொள்ளப்படுகின்றது. தாயின் மடியிலிருந்து திருத்தமற்ற மழலை மொழியாகக் கற்றக் காரணத்தால் மட்டுமன்றித் தாய்போல அவனால் எக்காலமும் நேசித்துப் போற்றிப் பயன் செய்கின்ற காரணத்தினாலும் ஒருவன் தனக்குச் சொந்தமான மொழியைத் தாய் மொழி என அழைக்கின்றான். தாய்ப்பால் போலத் தாய் மொழியும் இயற்கையான ஓர் ஊட்டப்பொருளே. தாய்பால் அருந்தித் தாய் மீது பக்தி கொள்வதுப்போல தாய்மொழியைக் கற்று அதன் மீது பற்றுக்கொள்ள வேண்டியது எமது கடமையாகும். ஒருவன் தனது கல்வியைத் தனது தாய்மொழி மூலம் பெறுவதே பெரிதும் விரும்பத்தக்கது. தனக்கு இயல்பான மொழியூடாக ஒன்றை கற்கும் பொழுது விளக்கம் கூடுதலாக இருக்கும். இதனால் கல்வியின் பயன்பாடும் பூரணமாகக் கிடைக்கும். இதனை உணரா சிலர் உலகமொழிகள் என்று பிரசித்தி பெற்று விளங்கும் ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்சு முதலான மொழிகள் வாயிலாகக் கற்க அதிக விடயம் உண்டு என்றும் தாய் மொழி மூலம் கற்க விடயங்கள் குறைவாகவே உள்ளன என்றும் கருதித் தமது தாய் மொழியினூடக கற்பதை புறக்கணிக்கின்றார்கள். "சென்றிடுவீர் எட்டுத்திசையும் – கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"

என்ற மகாகவி பாரதியாரின் கூற்றினை நாம் சிந்தித்தல் வேண்டும். பிறநாட்டு உயர் கலைகளை எல்லாம் நாம் எமது தாய்மொழியிற் கொணர்ந்து தாய்மொழியினை வளர்த்தால் ஒருநாள் அது உலக மொழிகளின் வரிசையில் இடம் பெறுவதோடு நாமும் பிற நாட்டினருக்குச் சமமான நிலையை அடைவோம். தன் தாய் அழகற்றவள் ஏழை என்பதற்காக எவரும் அழகுள்ள அந்நியப் பெண்ணைத் தாய் என்று அழைத்து, மதித்து, நேசிக்கமாட்டார். இதைப் போலவே தாய் மொழியினை போற்றி கற்று அதனை வளர்க்க முன்வருதலே வரவேற்கத் தக்கது.

ஆக்கம்
D. பிரசன்னா
ஆண்டு 6T

★ ★ ★

# புதிய சமுதாயம் உருவாக வேண்டும்

எமது சமுதாயம் மாற வேண்டும்; மனிதன் பணம் என்ற சிறையிலிருந்து மீள வேண்டும். மனிதன் மிருகமாக மாறி வருகின்றான். கடவுளுக்கு மேலாக பணத்தை மதிக்கிறான். இதனால் அவன் மரணத்தை மறந்து விடுகின்றான். அந்த நிலை மாறி ஒரு புதிய சமுதாயம் உருவாக வேண்டும்.

பணம் இல்லாமல் வாழ முடியாது என்ற நிலை உருவாகி வருவதனால், மனிதன் தனது பொருட்செல்வத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு பல வழிகளை நாடுகிறான். பொய் கூறிப் பணம் சம்பாதிப்பதும், கொள்ளையடிப்பதும், சூதாட்டம் போன்ற நேர்மையற்ற வழிகளில் பணத்தை சம்பாதிப்பதும் இன்றைய நாகரிகமாக மாறிவிட்டது. இவ்வாறாக சம்பாதிக்கும் செல்வம் நிலைத்திருக்குமா என்பதை அவன் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

திரைகடலோடியும் திரவியம் தேடுவதற்காக தனது சொத்துக்களை விற்றுவிடுகிறான். இறுதியில் ஏமாற்றப்படுகிறான். மதுபானம் வாங்கிக் குடித்து புகைத்து, போதைவஸ்துவிற்கு அடிமையாகி தனது உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்கிறான். இதனால் அவனது குடும்பமே பாதிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இந்த சமுதாயம் மாறாவிட்டால் தொடர்ந்து அழிவுகள் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கும். இன மத வேறுபாடுகளிருக்கும் வரை மனித இனத்திற்கு விடிவே கிடையாது. மரணம் வரை மனிதன் இவற்றில் சிக்குண்டு வாழவேண்டியிருக்கும். எனவே மனித மேம்பாட்டிற்காக புதிய சமுதாயம் உருவாக வேண்டும்.

ஆக்கம்
வின்சன்ட் சுரேந்திரன்
ஆண்டு 7T

★ ★ ★

# புத்தம் புது பூமி வேண்டும்

"பாருக்குள்ளே சமத் தன்மை – தொடர்
பற்றுஞ் சகோதரத்தன்மை
யாருக்கும் தீமை செய்யாது – புவி
யெங்கும் விடுதலை செய்யும்"

அன்று புதுமைக் கவிஞன் பாரதியார் பாடிய பாடல், இன்றும் எதிரொலித்துக் கொண்டு தானிருக்கின்றது. ஆனால் இது நடைமுறைக்கு சாத்தியமாகுமா? இக்காலத்து சமுதாயத்தைப் பொருத்தவரை சற்று சிந்திக்க வேண்டிதான் உள்ளது. அதற்குக் காரணம் எங்கு பார்த்தாலும் சாதி! சாதி! சாதி உலகமே சாதியில் மூழ்கி முடங்கிக் கிடக்கின்றது. இதனால் எழுந்த பிரச்சினைகள் எண்ணிலடங்காதவை. உலகமே போர் என்று இரத்தவெறிபிடித்து அலையும் காலமிது. எங்கு பார்த்தாலும் மரணம், பஞ்சம் என்ற செய்திகளைக் கேட்டே அலுத்துப்போய் விட்டது.

உலகம் தோன்றிய போதே அழிவு என்பதும் தோன்றியதா? எத்தனை உயிர்கள் கொலை செய்யப்படுகின்றன? எத்தனை இளைஞர்கள் தமது ஆசைகள் எல்லாவற்றையும் பொதிகட்டி வைத்து விட்டு நாட்டிற்காக போர்க்களம் செல்கின்றனர். இறைவா, மானிடர்களுக்கு விடிவே இல்லையா? ஏன் இல்லை, நம் மாணவ சமுதாயம் நினைத்தால் விடியலுக்கு தூரமில்லை. எமது சமுதாயம் சமாதானமாக வாழ்ந்தால் அனைத்தையும் சாதிக்கலாம். நாம் சமாதானமான வழியைப் பின்பற்றுவதன் மூலம் எதிர்கால ஒற்றுமைக்கு அடித்தளம் வகுக்கலாம்.

நாமனைவரும் ஒரு தாயின் வயிற்றில் பிறந்தோரென்ற தத்துவ வழியில் ஒழுகி, எமக்கிடையேயுள்ள வேற்றுமைகளைக் களைந்தெறிதல் வேண்டும். எங்கும் சமாதான ஒளி பரவ வேண்டும். கலைகள் வளரவேண்டும்; கலைக்கூடங்கள் பெருக வேண்டும்; நாடு செழிக்க வேண்டும். நீதி நெறியினின்று பிறக்குதவும் நேர்மையாராய் வாழ வேண்டும். ஆகவே இறைவா! உன்னிடம் நாம் வேண்டுவது யாதெனில் அமைதியான சமுதாயம் வாழ்கின்ற புத்தம் புது பூமியாகும்.

ஆக்கம்
பா.சிவகரன்
ஆண்டு 8T

✳ ✳ ✳ ✳

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் மனிதனாக....

ஆறறிவு படைத்த மனிதன் ஈரேழு ஜென்மங்களில் ஒரு பிறவியே. ஆம் இம்மனிதன் ஐந்த றிவு படைத்த விலங்குகளிலிருந்து பகுத்தறிவாகிய ஒரு உன்னத அறிவால் வேறுபடுகிறான். மனிதப் பிறவியின் உயர்வைப் பல பெரியார்கள் தம் பொன்மொழிகளினால் கூறியுள்ளார். அவர்களுள் ஔவையார் கூறியதாவது

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது

அதிலும் அரிது கூன், குருடு, செவிடு நீக்கிப் பிறத்தலரிது' என்பதாகும். அன்றைய காலத்தில் மக்கள் தாம் மனிதராக பிறந்ததே பெரும் பாக்கியம் என்று மகிழ்ந்தனர். ஏன் அவர்கள் மட்டுமா மகிழவேண்டும்? நாங்களும் மகிழவேண்டியதுதானே.

ஆனால் அன்றைய மனிதன் மனிதனாக பிறந்ததே என் அதிர்ஷ்டம் என்று நினைத்தான். ஆனால் அழிந்து வரும் இம்மாசுபட்ட உலகில் வாழும் மனிதனோ 'நான் கீழ்ச்சாதியில் பிற ந்துவிட்டேன், எனக்கு பணம் இல்லையே' என்றெல்லாம் நினைத்து அல்லலுறுகிறான். எனினும் ஒரேயொரு மனிதனாவது 'நான் தன் மானமுள்ளவனாக உண்மையானவனாக, நேர்மையாக இருப்பேன்' என்று நினைத்தானா? இல்லை. அப்படியும் ஒருவன் இருக்கின்றானானால் அவன் ஆசையை வென்ற துறவியாகவே இருக்க வேண்டும். இம்மனிதன் பகுத்தறிவினாலேயே நல்லவை கெட்டவைகளை உணர்ந்து செயல்படுகிறான் ஏன் பகுத்தறிவினாலேயே உண்டாகும் கெட்டவைகளை உணர்ந்து செயல்படுகிறான் ஏன் பகுத்தறிவினாலேயே உண்டாகும் ஆசையால் மனிதன் கவர ப்படுகிறான் மண், பெண், பொன் முதலியவற்றை விரும்புகிறான். இவற்றை எம்முறையிலாவது அடையவேண்டும் என்று எண்ணுகிறான் அவை நல்ல முறையா அல்லது தீய முறையா என்று சிறு துளியேனும் எண்ணுவதில்லை பண்டைய காலத்தில் ஆடையில்லா மனிதன் அரை மனிதன் என்றுதான் கூறினார்கள். எனினும் தற்போதைய உலகின்படி ஆசையில்லா மனிதன் மனிதனேயில்லை என்று நினைத்துள்ளார்கள் போலும்

இவ்வாசையினால் உந்தப்பட்ட தற்போதைய மனிதன் பொய் பேசல், களவெடுத்தல் பார பட்சம் காட்டல், பொறாமை நன்றி மறத்தல் முதலிய கேடுகெட்ட செயல்களை செய்கிறான். இப்படியானவர்களை மனிதன் என்று கூறுவதே பாவம் ஓர் மனிதனானவன் தேவகுணத்தையும் விலங்குக் குணத்தையும் ஒருங்கே கொண்டவன். இவன் இவற்றில் விலங்குக் குணத்தை உயர்த்த எண்ணினாலே அவனுக்கு விலங்குக் குணம் தோன்றிவிடும் எனினும் தேவ குணத்தை உயர்த்த அப்படியல்ல கட்டாயம் முயற்சி செய்யவே வேண்டும்

இதற்கு முதலாவதாக வாய்மையை கடைபிடிக்க வேண்டும். இதனையே திருவள்ளுவர்.

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

என கூறியுள்ளார். இதற்கு அடுத்ததாக ஒரு மனிதன் தூய சுயநலமுள்ளவனாயிருத்தல் வேண்டும். அஃதாவது "இன்று உன்காலில் குத்தியமுள் என்றோ நீ தூவியதுதான்" என்பதை நினைவுபடுத்தி செயல்பட வேண்டும். மனிதன் சுயநலமுள்ளவனாயிருந்தால் பிறருக்கு தீமை செய்யாது நன்மை செய்வான் காரணம் ஒருவன் செய்யும் செயல்களின் பத்துமடங்கான விளைவு மீண்டும் அவனை வந்தடையும். ஆகவே நாம் ஒருவனை துன்புறுத்தினால் பிறகு நாம் துன்பப்படுவோம். நாம் மற்றவருக்கு நன்மை செய்தால் நாமும் நன்மையே பெறுவோம். அடுத்ததாக மனிதனிடம் உள்ள கெட்டப்பழக்கம் நன்றிமறத்தலாகும். ஐந்தறிவு படைத்த நாயே நன்றி உள்ளதாயிருக்கும் போது ஏன் மனிதரால் முடியாது. அடுத்ததாக தன்மானத்தை கவனிக்க வேண்டும்; ஓர் கவரிமானானது தனது மயிர் ஒன்றை இழப்பினும் உயிர்வாழாதாம். ஆனால் தற்போதைய மனிதன் செய்யும் ஒவ்வொரு தீவினைகளாலும் இழக்கும் மானத்திற்கு எடுக்கும் பிறவி தோறும் தற்கொலை செய்தாக வேண்டும்!

அழிந்து வரும் இம்மாசுபட்ட உலகில் ஒரேயொரு மனிதனாவது இறைவன் உவக்கும் ஒரு தூய மானிடனாக இருக்க விரும்பினானால் அவனுக்கு இவ்வியற்கை அன்னையே இலவசமாக படிப்பிக்கிறாள். ஒருவன் நன்றியில் நாயாக, மானத்தில் கவரிமானாக, வீரத்தில் புலியாக தாராள மனதில் சிங்கமாக ஒற்றுமையில் காகமாக, சுறுசுறுப்பில் எறும்பாக இருப்பானானால் அவனே வரப்போகும் புதுயுகம் தேடும் ஒரு புண்ணிய சீலன்.

ஆக்கம்
R. ஜெயகாந்த்
ஆண்டு 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# NAGALINGAMS
Jewellers

**22 kt Sovereign Gold Quality Jewellery**

101, Colombo Street
Kandy

T.P. 08 - 32545

*With Best Compliments From*

**K. Suresh**
**(Old Antonian)**

**Ratha Beedi Company**
**Radha Enterprises**

**Importers, Exporters and Manufactures of Chakra Products**

111, Madawala Road
Katugastota,
Sri Lanka.

T.P. 08. 99333

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

**T. Mohan Raj**
(Old Antonian)

# நிகழ்ச்சி நிரல்

01. மங்கள விளக்கேற்றல்

02. தமிழ் மொழி வாழ்த்து

03. மன்ற கீதம்

04. வரவேற்புரை - செல்வன் பிரிஜேஷ் பார்த்திபன்
(கலாமன்ற மாணவ தலைவர்)

05. விநாயக அஞ்சலி - கீழ்ப்பிரிவு மாணவர்கள்

06. ஆண்டறிக்கை - செல்வி எஸ். அருள்மேரி (கௌரவ செயலாளர்)

07. துதிப்பாடல்கள் - கல்லூரி இசைக்குழு

08. புஷ்பாஞ்சலி - கல்லூரி நடனக்குழு

09. நாடகம் - "சுயநலத்தின் வேடங்கள் எத்தனையோ?" -
12ம் வருட மாணவர்கள

10. வேளக்களி போர் நடனம் - மத்திய பிரிவு மாணவர்கள்

**AJANEE TRADERS**
*General Merchants*
*Dealers in all kinds of empty Bottles,*
*Corks, Plastic Caps Etc.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**AJANEE TRADERS**
**119 Central Road,**
**Colombo - 12**

11. "கலைமதி" சஞ்சிகை வெளியீடு
12. தலைமையுரை - செல்வி யசோதா இராசையா
13. அதிபரவர்களின் உரை - வண. பிதா ஹிலேரியன் பெர்னாண்டோ
14. பிரதம அதிதியின் உரை - பேராசிரியர் கலாகீர்த்தி எஸ். தில்லைநாதன்
15. பரிசில்கள் வழங்கல்

**இடைவேளை**

16. இசையும் கதையும் - 9ம் வருட உயர்தர வகுப்பு மாணவர்கள்
17. நகைச்சுவை நாடகம் - "21ம் நூற்றாண்டு அரிச்சந்திரன்" 13ம் வருட மாணவர்கள்
18. நன்றியுரை - செல்வன் B.H.M. ஹப்ரத் (மாணவ செயலாளர்)
19. இசை அரங்கம் - கல்லூரி இசைக்குழு
20. நகைச்சுவைத் துணுக்கு - 1995ம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்கள்
21. உழவர் நடனம் - 9ம் 10ம் ஆண்டு மாணவர்கள்
22. மங்களம் - கல்லூரி இசைக்குழு
23. தேசிய கீதம்

**119 Central Road,**
**Colombo - 12.**
**✆ 01 - 423010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

**M.J.M. NIYAS**

**(OLD ANTONIAN)**

**FANCY TEXTILES**
**3 PUTTALAM ROAD**
**NIKAWERATIYA**

**☎ 037 - 50304**

*With Best Compliments From*

M. Ravindran

(Old Antonian)

48, Luxumi Villas

Maskeliya

✆ 052 - 7382

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

M. Ganesaraja
(Old Antonian)
Sivasakthi Stores
Maskeliya

T.P. 052 - 7210

*With Best Compliments From*

**People's Hardware And Tractor Co.**

**Dealers in all kinds & Tractor Spares.**

**160, D.S. Senanayake Vidiya,**
**Kandy.**

**T.P. 32139**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கலாமன்ற செயற்குழு 1995

| | | |
|---|---|---|
| அதிபர் வண. பிதா. | – | ஹிலேரியன் பெர்ணான்டோ |
| பிரதி அதிபர் | – | திருமதி ஐ. சிவரட்னம் |
| பெருந்தலைவர் | – | செல்வி யசோதா இராசையா |
| கௌரவ செயலாளர் | – | செல்வி அருள்மேரி சந்தனம் |
| கௌரவ பொருளாளர் | – | திரு. ஏ. எம். எஸ். சந்திரசேகர் |
| கௌரவ இதழாசிரியர் | – | திரு. யோ. கிருபானந்தன் |
| குழு அங்கத்தவர்கள் | – | திருமதி எல். இரட்ணராஜா |
| | | திருமதி எம். இராசிக் |
| | | செல்வி சிசில் குமாரி |
| | | செல்வி எம். கலைவாணி |
| | | திருமதி மாஹிர் |

| | | |
|---|---|---|
| தலைவர் | – | செல்வன் P. பிரிஜேஷ் |
| உப தலைவர் | – | செல்வன் A. மாலிக் |
| செயலாளர் | – | செல்வன் B.H.M. ஹப்ரத் |
| உப செயலாளர் | – | செல்வன் M.S. அஹமட் |
| பொருளாளர் | – | செல்வன் M.M. பர்சான் |
| உப பொருளாளர் | – | செல்வன் P. பிரதீப் |
| இதழாசிரியர் | – | செல்வன் M. குலேந்திரன் |
| செயற்குழு | – | செல்வன் M.T.M. ஷிகார் |
| | – | செல்வன் R. சுதர்ஷன் |
| | – | செல்வன் H. சுரேஷ் |
| | – | செல்வன் S. சுகீதரன் |

வகுப்பு பிரதிநிதிகள் : -

| | | | |
|---|---|---|---|
| ஆண்டு | 6 | | செல்வன் யோகேந்திரன் |
| | 7 | | செல்வன் சசி சர்வேஸ்வரன் |
| | 8 | | செல்வன் R. ரதீஸ்காந் |
| | 9 | | செல்வன் R. ஜெயகாந் |
| | 10 | | செல்வன் J. நிஷாந்தன் |
| | 11 | | செல்வன் S. சஜீஸ்வரன் |
| | 12 | (விஞ்ஞானம்) | செல்வன் M.F. நிஹ்மத்துல்லா |
| | 12 | (வர்த்தகம்) | செல்வன் M. உதயகுமார் |
| | 13 | (விஞ்ஞானம்) | செல்வன் M.H.M. fபாசி |
| | 13 | (வர்த்தகம்) | செல்வன் M. சசிதரன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TAMIL CULTURAL SOCIETY - 1995



**Seated From Left to Right**
Mr.S. Kirubananthan, Mrs.I.Sivaratnam, Miss.M. Kalaivany, Miss.Y. Rasiah, P. Brijesh, Rev. Fr. Hilarion Fernando, B.H.M. Hafreth, Miss.S. Arulmary, Mrs. Mahit, Mrs.M.N. Razik, Miss. Sicil Kumari, Mr.A.M.S. Chandrasegar.

**Standing From Left to Right**
Senthil Jayaprakash, H. Suresh, Navaneethan, M.T.M. Zihar, R. Sutharshan, P. Pradeep, S.M. Nazeedeen, Atham Malik, M. Kulendran, S. Suheetharan.

(Absent - M.M. Farzan, M.S.M. Ahamed)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரின் கெடுதியும் சமாதானத்தின் அவசியமும்.

இவ்வுலகில் போர் இன்று நேற்றல்ல தொடங்கியது. ஆதி காலந் தொட்டே நிலவியது. இப்போர் பற்றி நாம் வரலாற்று அடிப்படைநூல்களிலும், கல்வெட்டுக்கள், பெரியோர்கள் மூலமாகவும் அறியக்கூடியதாகவுள்ளது. மேலும் போரை நாம் அடி, பிடி, கொலை, களவு என்று எடைபோடுவதிலும் பார்க்க ஒரு வித்தியாசமான கோணத்தில் நோக்குவதே சிறந்ததாகும். இப்போர் தர்மப்போர், அதர்மப் போர் என இருவகைப்படும்.

தர்மப் போர் ஆதிகாலத்தில் மக்களின் சுதந்திரத்துக்காக நடைபெற்றதை அறிவியல் ரீதியாக அறியலாம். இப்போர் இரு சாரார் மேற்கொள்வதை குறிக்கும். இப்போரில் நேருக்கு நேர் நின்று போர் செல்வதை அவதானிக்கலாம்.

உ+மாக : சிலுவை போரை எடுத்துக் கொண்டால்

இஸ்லாமியருக்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையிலேற்பட்ட ஒரு போராகும். இப்போர் காரணமாக பல அசௌகரியங்கள் ஏற்பட்டன அவற்றுள் மக்கள் குடி பெயர்வு, இயற்கை சமநிலை பாதிப்புறல்.

அதர்மப்போர்

ஏறத்தாழ 75 வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது. இது நவீன உலகை ஆட்டிப் படைக்கும் ஒரு கருவியாக காணப்படுகின்றது. ஒரு சிறுவிடயத்திற்காக இன்றைய உலகம் இப்போரை மேற்கொள்கிறது.

இவ்வதர்மப் போரை மேற்கொள்ளத் தேவையான அனைத்து போர்க் கருவிகளும் இன்று நியாயமான விலையிலும் அதிகமாக பல நாடுகளில் விற்கப்படுகின்றன.

உ+மாக : அணுகுண்டுகள் இரசாயன குப்பி வகைகள், வெடிகுண்டுகள், கண்ணி வெடிகள், ஏவுகணைகள் போன்றவை. இக்கருவிகளை உபயோகிப்பதால் மனித உடல் மண்ணை செல்கின்ற வாய்ப்பு ஏற்படுகின்றது. அது மட்டுமல்ல நாட்டின் அபிவிருத்தி பாதிப்படைகின்றது.

இப்போரின் தீமைகளை எடுத்து நோக்கினால் பலகோடி மக்களின் உயிரை "துப்பாக்கி" எனும் கருவி குடிக்கின்றது. ஊனமுற்ற குழந்தைகள் அதிகளவில் பிறக்கின்றன. காரணம் இரசாயன பொருட்களின் தாக்கமே இயற்கை வளங்கள் அழிகின்றன. பல நாடுகளின் கட்டிடங்கள், கோயில்கள் அழிக்கப்பட்டன. அதுமட்டுமல்ல பொருளாதாரமும் சீர் குலைந்தன.

இன்றைய காலத்தில் சமாதானத்தையே நாட்டுத் தலைவர்களும், மக்களும் விரும்புகின்றனர். சமாதானம் என்பது பேச்சில் மட்டுமல்ல இருப்பது செயலிலும் இருக்க வேண்டும்.

உ+மாக : ஒரு மனிதன் ஒரு நாட்டில் பிறக்கின்றான். அவன் அந்த அரசு என்ற சங்கத்துக்கு உரித்துடையவனாகின்றான். அவன் பிறந்தது முதல் இறக்கும் வரை அந்நாட்டிலே சீவிப்பான். அவ்வாறு சீவிப்பவன் சாந்தி என்ற அன்பையும், சமாதானம் என்ற பற்றையும் வளர்க்க வேண்டும். இச்சமாதானம் என்ற பதம் தற்போது சிற்சில பாடசாலைகள் வாயிலாக பாடமாக கற்பிக்கப்படுகிறது.

நாட்டில் சமாதானம் ஏற்பட்டால் நாட்டின் கல்வி, பொருளாதாரம் உயரும். தலாவருமானம் அதிகரிக்கும், நாட்டுப்பற்று ஏற்படும். பொதுச் சொத்துக்களை பாதுகாக்கும் தன்மை மக்களிடையே ஏற்படும். நாடுகளிடையே போர் தடைப்பட்டால் நாட்டின் சமாதானம் நிலவும், சிறப்பான முறையில் வாழ்க்கையை நடத்தலாம், போருக்கு செலவாகும் பணத்தை தவிர்க்கப்பட்டு நாட்டின் அபிவிருத்திக்கு உட்படுத்தி நாட்டை வளம் பெறச் செய்யலாம். நாட்டில் ஆயுதங்கள் உபயோகிப்பதை தவிர்ப்பதனால் பரம்பரையாக ஏற்படும் ஊனங்கள் தவிர்க்கப்படுகின்றன.

எனவே ஒவ்வொரு மாணவர்களும் தனது சிந்தனை துளிகளை சிதறவிடாமல், சில்லென்று விளங்கக்கூடியதாகவும் மற்றவர்களுக்கு போரின் கெடுதியையும் சமாதானத்தின் அவசியத்தையும் எடுத்துக் கூறி ஒவ்வொரு மனிதனிடமும் சமாதானம் என்ற உணர்வை உள்ளத்தில் உண்டு பண்ண வேண்டும்.

ஆக்கம்
M. உதயகுமார்
A/L (97) - (வர்த்தகப்பிரிவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமனாக வாழ்தல்

இவ்வுலகில் வாழும் உயிரினங்கள் பற்பல இவை அனைத்திலும் உயர்வான பிறப்பாக உயர்திணையாக கொள்ளப்படும் பெருமைக்குரிய பிறவி மனிதப் பிறவி ஒன்றேயாம். "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல்" என்று ஔவையாரும் மானிடப் பிறவியின் மாண்பினை எடுத்துக் கூறியுள்ளார் இத்தகைய மானிடப் பிறவியில் தான் மற்ற உயிரினங்களில் பாராட்டப்படாத ஆண் பெண், உயர்வு தாழ்வு என்ற பேதம்! பகுத்தறிவுள்ள சமுதாயத்தில் இத்தகைய பேதம் பாராட்டப்படுவது விந்தையும், வேடிக்கையானதுமாகும்.

பெண்ணுக்கு முதன்மை தந்து சக்தியாகவும், இறைவனாகவும் போற்றுகின்றது தமிழ்ச் சமூகம். ஆனால் அதே பெண் இனத்தை பழைய காலம் தொட்டு இன்றுவரை அடிமைகளாக, சமத்துவமற்றவர்களாக நடத்தி வருகின்றது. இந்த இழிநிலை கண்டு உள்ளம் கொதித்து

'மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொழுத்துவோம்
வைய வாழ்வு தன்னில் எந்த
வகையினும் தமக்குள்ளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்களோடு பெண்களும்
சரி நிகர் சமானமாக
வாழ்வோம் இந்நாட்டில்"

என்று அறை கூவல் விடுத்தான் மாபெரும் கவிஞன் பாரதி.

இன்று ஜனநாயக அரசியல் எழுச்சியும் அனைவருக்கும் கல்வி என்னும் விழிப்புணர்வும் பெண்களின் சமூக நிலையினை ஓரளவு உயர்த்தியுள்ளது. பட்டங்களை பெறுவதும் சட்டங்களை செய்வதும் இவ்வுலகில் பெண்களும் செய்ய வந்தார்கள் என்ற நிலைக்கு கொண்டு வந்த அரசியல் மருத்துவம், பொறியியல், சட்டம், பாதுகாப்புத்துறை போன்ற பலதரப்பட்ட துறை களிலும் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமாதானமாக வாழும் நிலையினை ஏற்படுத் தியுள்ளது. இன்றைய பொருளாதார நிலையில் சகலரும் உழைத்து வாழ வேண்டிய நிலையில் ஆண்களுடன் பெண்களும் சகல துறைகளிலும் சமத்துவமாக தொழில் புரிய வேண்டிய நிலையினை ஏற்படுத்தியுள்ளது.

பெண்ணிற்கு குடும்பத்திலும் சமூகத்திலும் பாரிய பங்களிப்புண்டு இதனை உணர்த்துமுகமாக உள்ளதே 'அர்த்த நாரீஸ்வரவடிவம். உலகம் ஆண்பாதி, பெண்பாதி என்ற தத்துவத்தை இவ்வுலகம் கொண்டுள்ளது. எனினும் இன்று உலகத்தில் நடைமுறையில் ஆண்களோடு பெண்கள் சரிநிகர் என்பது கேள்விக் குறியாகவேயுள்ளது. இவ்வுலகில் அன்றுதொட்டு இன்று வரை உள்ள அடக்குமுறையான பெண் அடக்கு முறையை வேரோடு அழித்து விட மேற் கொண்ட போராட்டங்களின் மூலம் உரிமைகளை பெற்றமை பொன் எழுத்துக்களால் பொறி க்கப்பட வேண்டிய தொன்றாகும். சிலர் பெண்கள் எனும் பயிருக்கு நல்ல மழை போல பிற ந்து பெண் அடிமைமுறையை எதிர்த்து வருகின்றனர்.

(இந்த உண்மையை) பெண்களுக்கு சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்று பௌத்த மதமும் போதிக்கின்றது. ஆண்கள் மாத்திரமின்றி முற்காலத்தில் பெண்கள் வீரசரித்திர நாயகிகளாகப் போற்றப்பட்டுள்ளனர். இதற்கு இலங்கை நாயகிகளாகிய விகாரமகாதேவி, சேமா தேவி முதலியோரைக் கூறலாம். முற்காலத்தில் பெண்கள் ஆண்களுடன் சமமட்டத்திலிருந்துள்ளனர். உதாரணமாக சிங்காசனத்தில் வீற்றிருந்த சீவலி, லீலாவதி, அனுலா போன்ற இராணிகளை கூறலாம். இதலிருந்து பெண்கள் எப்போதும் ஆண்களுடன் சரிநிகராக வாழவேண்டும் என்பது எனது எண்ணம். இல்லத்தலைவியாகவும், ஆண்களின் உள்ளத் தலைவியாகவும், இருந்த பெண் இன்றைய நாட்டின் (இலங்கை) தலைவியாகி, உலகத்தின் முதல்வியாகி ஆண்களுடன் பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்கின்றனர்.

வாழ்க பெண்மை! வளர்க சமத்துவம்!

ஆக்கம்
சி. சஜீஸ்வரன்
(ஆண்டு 11T)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவம்

அவசரமாக வாசலைத் தாண்டினான். பூனை ஒன்று குறுக்காகச் சென்றது முன்னொரு முறை பூனை இவ்வாறு சென்றபோது அசட்டை செய்து வெளியே போனபோது ஒரு விபத்தில் மாட்டிக் கொண்டது நினைவில் வந்தது.! யோசித்தான் பிடிபடவில்லை.

ஒரு முறை அனுபவப்பட்டால் அது உண்மை ஆகிவிடுமா? ஒரே நிகழ்ச்சி பலருக்கு பலவித அனுபவங்களைத் தரலாம் ஏன் அப்படி? நடந்ததைக் கிரகிக்க அறிவு வேண்டும். அறிவுள்ளவன் அனுபவமே பயனுள்ளதாக இருக்கும். சொல்பவன் எப்படியோ கேட்பனாவது அறிவுள்ளவனாக இருக்க வேண்டும். அனுபவம் வேறு அறிவு வேறு. அறிவு! எது அறிவு? 'வாழ்க்கையை மகிழ்ச்சியாக அமைத்துக் கொள்வதே அறிவு.' என எங்கோ கேட்ட ஞாபகம். வாழ்க்கையில் மகிழ்வில்லையில் அவன் அறிவு கெட்டவனா?

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு"

மெய்ப் பொருள் காண்பதெவ்வாறு? முதலில் மெய்யை பொய்யாகக் காணவேண்டும். மெய் தானாகப் புலப்படும். பொய்யை பொய்யாக காண்பதே அறிவா? எது மெய்ப்பொருள்? கேட்டால் அது சொல்லித் தெரிவதில்லை அனுபவத்தால் தெரிவது.

அனுபவம், 'ஒரே அனுபவத்தை பலமுறை பலமுறை அடையலாமா'? முட்டாள்தனம் இல்லையா? அப்போது ஒரு முறை அனுபவப்பட்டுவிட்டு அதுவே உண்மை என்பது மட்டும் எவ்வகையில் புத்திசாலித்தனமாகும்! அதுவே மீண்டும் ஆரம்பத்திற்கு வந்ததை உணர்ந்தான் தலையை உதறினான் சிந்தனை கலைந்து விட்டது வெளியே நடந்தான். காரியம் பிசகில்லாமல் நல்லபடியாக முடிந்தது. நிம்மதியாக வீடு வந்து சேர்ந்தான். பூனை திண்ணையில் குந்தி இருந்தது. ஒரே நிகழ்ச்சி இரு வேறுபட்ட அனுபவங்கள். மீண்டும் பூனை குறுக்காக சென்றுபார்க்க எண்ணம் வந்தது. முதல் அனுபவத்தைக் கொண்டு அவன் வெளியில் செல்லாமல் இருந்து இருக்கலாம். முட்டாள் தனம் கோழைத்தனம். மீண்டும் முயற்சிப்போம் என்பதே துணிவு. அவன் அப்படிக் கூறினான் இப்படிக் கூறினான் என்று சிறுவட்டத்திற்குள் முடங்கிக் கிடப்பது இலகு. அதில் இரசனை இல்லை. நானும் செய்துபார்க்கிறேன் என்பதிற்கு துணிவு வேண்டும். சொல்வது இலகு செயலில் காட்ட வேண்டும். அதில்தான் இரசனை உண்டு. அதில் தான் மகிழ்ச்சி. துணிவுள்ளவனே மகிழ்ச்சியை பூரணமாக அனுபவிக்கின்றான்.

ஆக்கம்
நசீர்டீன்
A/L 95 கணிதப் பிரிவு

* * * *

# சூழல் பாதுகாப்பு

நாளைய இயற்கைச் சூழலானது இன்றைய சூழலியல் சேமிப்பு. இன்று நடைமுறைப் படுத்தப்படுகின்ற சுற்றாடல் பேணுகைத் திட்டம் ஆகிய செயற்பாடுகளின் விளைவாகும். சுற்றாடலை வீணே மாசுபடுத்தும் அதிகாரமோ, அனுமதிப்பத்திரமோ, ஆணையோ எமக்கு வழங்கப்பட்டதாகத் தெரியாது. நாங்கள் சுற்றாடலின் நம்பிக்கைப் பொறுப்பாளர் மட்டுமே. அதில் ஏக போக உரிமை எமக்கு இல்லை. எமது மூதாதையர்கள் அதனை எமக்கு வாரிசாக வழங்குதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் இச்சுற்றாடல் சீரழிவுக்கான காரணங்களை முதலில் ஆராய்ந்தால், இயற்கை வளங்களை அளவுக்கதிகமாக பாவித்தலும், வறுமை நிலை, சனத்தொகை அதிகரிப்பும் காரணங்களெனலாம். அண்மைய காலங்களில் கட்டுக்கடங்காமல் சூழலிலுள்ள வளங்களின் அழிவுக்குக் காரணமாக, நகரமயமாக்கல், தொழில் மயமக்குதல் என்பன முக்கியமானவையாகக் காணப்படுகின்றன. இவற்றால் நிலம், நீர், காடு, உயிரினங்களும் தம் அழிவுப் பாதையை நோக்கி செல்வதைக் காணலாம். மனிதன் தன் சொந்தத் தேவைகளுக்காக இச்சூழலைப் பயன்படுத்தும் போது அங்கு சூழலியற் சமநிலை கெட்டுப் போவதைக் காணலாம்.

நாம் வசிக்கும் இந்த நிச்சயமற்ற புவியின் எதிர்காலமானது ஓர் நிச்சயமற்ற தன்மையைக் கொண்டுள்ளது. இவ்வாறான ஓர் நிச்சயமற்ற சூழ்நிலையில் தற்போது உயிரினங்களின் வசிப்பிடத்துக்கும், வாழ்க்கைக்கும் உட்பட்டுள்ளன. இச்சூழலை முடிந்த வரை அழிவுகளிலிருந்து பாதுகாப்பது மனிதனுடைய பொறுப்பாக அமைகிறது. இதனைக் கருத்தில் கொள்ளாது மனிதன் இருப்பானேயானால் அது அவனுடைய அழிவினை அவனே தேடிக் கொள்ளுவதற்குச் சமானமாகும். எமது சூழலை அழிவிலிருந்து பாதுகாத்துக் கொள்வதன் மூலம் நாம் எம்மைச் சார்ந்த இயற்கையையும் நீண்ட காலத்துக்கு நிலைபெறச் செய்ய வழி சமைக்கிறோம் எனலாம்.

மனிதனின் விண்வெளி ஆய்வுகளில் காணப்படுகின்ற வளர்ச்சியும், அபிவிருத்தியும் அவன் வாழும் சூழலில் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றதோ, அந்தளவுக்கு நாளுக்கு நாள் சூழலின் சமநிலை எதிர்மறையாகச் சென்ற வண்ணம் இருக்கிறது. இவற்றின் பிரதி பலன்கள் என்ன என்பதை அறியாதவனாக இன்றைய மனிதன் இயங்கி வருவது கவலைக்குரியதாகும்.

ஆகையால் மனிதன் இயன்றளவு மனிதச் சக்தியை புதிய கண்ணோட்டத்தில் செலுத்துவதன் மூலம் இன்றைய சூழலை அழிவுகளிலிருந்து இயன்றவரைப் பாதுகாக்கும் வழியைத் தேடலாம் முதன் முதலில் சூழல் பாதுகாப்பு என்ற கருத்து அமெரிக்க நாட்டில் தோன்றிய ஒரு விழிப்புணர்வாகும். இச்சூழல் பாதுகாப்பு பற்றி சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு அமைப்பும், ஐக்கிய நாடுகள் சூழல் பாதுகாப்பு ஸ்தாபனமும் எடுத்து வரும் முயற்சிகள் இங்கு குறிப்பிடத்தக்கவை.

எவ்வாறாயினும் சூழலைப் பாதுகாப்பதற்கு காடு வளர்ப்புத் திட்டங்களை மேற்கொள்ளல், சுற்றாடலை மாசுபடுத்தி பிழைப்போருக்கு மாற்று வேலைத்திட்டங்களை அறிமுகமாக்கல், காணி உபயோகத் திட்டங்களை அமுல்படுத்துதல், இளைய தலைமுறையினருக்கு சூழலியல் பற்றிய அறிவினை ஊட்டுதல் மூலமாக சூழலெனும் சாகரத்தை கண் போன்று பேணிப் பாதுகாத்துக் கொள்ளலாம். அத்துடன் பொதுமக்கள் அனைவரும் சுற்றாடல் சீரழிவுக்கு எதிராக குரலெழுப்புவதன் மூலமாகவும் இப்பிரச்சினைக்கு ஒருமுகமாக தீர்வைக் காணலாம். எனவே சூழல் பாதுகாப்பு என்பது இன்றைய கால கட்டத்தில் மனிதன் கட்டிக் காக்க வேண்டிய கடமைகளுள் மிக அத்தியாவசியமானது என்பது தெட்டத் தெளிவாகப் புலப்படும் அம்சமாகும்.

"சூழலைக் காத்திடுவீர்
சுகவாழ்வு எய்திடுவீர்"

ஆக்கம்
R. கமல் ராஜ்
ஆண்டு 12 (விஞ்ஞான பிரிவு)

* * * *

**செந்தமிழே உயிரே நறுந்தேனே**
**செயலினை மூச்சினை உனக்களித்தேனே**
**நைந்தா யெனில் நைந்து போகுமென் வாழ்வு**
**நன்னிலை உனக்கெனில் எனக்குந் தானே**

**(பாரதிதாசன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பின் முக்கியத்துவம்

இன்றைய நவீன உலகில் மனிதன் அளப்பரிய முன்னேற்றத்தை அடைந்துள்ளான் விஞ்ஞானம், பண்பாடு, கலை, தொழில் ரீதியாக என்று பல வகையிலும் முன்னேற்றம் அடைந்து கொண்டே இருக்கின்றான் இதற்குக்காரணம் மொழியாட்சி மனிதனின் சிந்னையில் உருவாகிய மொழி, எழுத்து நலம் கொடுத்து நூல் வடிவமாகி நம் போன்றோர்க்கு அளப்பரிய சேவை புரிகின்றது நூல்களை வாசித்து மேலும் சிந்திக்கும் திறன் உருவாகின்றது. அறிவாளியாகவும், பரந்த நோக்குடனும் செய்திகளை உடனுக்குடன் அறியும் திறனும் வாசிப்பிலே தான் தங்கியுள்ளது.

வாசிப்பின் முக்கியத்துவத்தை வைத்தே "கண்டதும் கற்கப் பண்டிதனாவான்" என்றனர் முன்னோர். கடந்தகால அநுபவங்களையும், ஆராய்ச்சி முறைகளையும், கலாசாரங்கள், ஆகமங்கள் போன்ற சமய தத்துவங்களையும் எமக்கு நூல் வடிவில் தந்துள்ளனர். கேட்டல், பார்த்தல் என்பவற்றின் முழுமையான சிந்தனையைப் பெற்றுவிடவோ, அல்லது பாரிய படைப்பினை மேற்கொள்ளவோ இயலாது, இது மட்டுமல்ல நம் எதிர்கால சந்தததியினர்களுக்கு நாம் பார்த்தவற்றை, எண்ணியவற்றை எடுத்துக் கூற நூல் வடிவே முக்கியத்துவம் பெறுகின்ற து. நூல் வடிவம் வாசித்தால் மட்டுமே தெரிந்து கொள்ளக்கூடியது.

ஏன்? இன்றைய பாடநூல்களையும் வாசிப்பில் தான் முழுமையான அறிவைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. அதனால் கல்வி அமைச்சு ஆரம்ப, இடைநிலை மாணவரின் கல்வியில் வாசிப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது. போட்டிகளும், கணிப்பீடுகளும் நடைபெறுகின்றது. ஏன்? வாசிப்பின் மகத்துவம் தான்.

"சித்திரமும் கைப்பழக்கம்
செந்தமிழும் நாப்பழக்கம்"

என்ற வாசிப்புப்பழக்கத்தினை மேற்கொண்டால் சிறந்த அறிவாளியாகவும், சிறந்த படைப்புக்களை மேற்கொள்ளலாம். என்பதில் சந்தேகமே இல்லை. எனவே தான் வாசிப்பின் முழுமையை அறிந்து பலபாடல்கள், கட்டுரைகள் போன்றவற்றையும், வேறு அநுபவங்களையும் ஒழுங்குப்படுத்தி ஒவ்வொரு கிராமங்கள் தோறும் வாசிகசாலைகளை நிறுவியுள்ளன.

"ஆலும் வேலும் பல்லுக்குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி"

என்று ஒரு பழமொழி உண்டு. சொல்லுக்குறுதிக்கு வாசிப்பே முக்கியம்.

ஆக்கம்
துவாரகன் சிவபாலசிங்கம்
ஆண்டு - 5 (D)

* * * *

**வெற்றியின் பாதையில் நடப்பவன் தற்காலியமாகத் தோல்வியை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் தோல்வியே வெற்றியின் படிக்கற்களென்பர் பெரியோர்.**

(எமர்ஸன்)

* * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளுக்கான ஓய்வூதியத் திட்டம் அமுல் செய்வதன் அவசியம்.

பண்டைக்காலம் முதல் இலங்கை ஒரு விவசாய நாடாகவே திகழ்ந்து வந்துள்ளது. கிழக்குலகின் தானியக்களஞ்சியம் எனப்பிறநாட்டவர்களால் வர்ணிக்கப்பட்ட நாடு எமது இலங்கை நாடு. பண்டைக்காலத்தின் மன்னர் ஆட்சிக் காலத்தில் விவசாயம் பசுமை பெற்றது என சரித்திரம் சான்று பகர்கின்றது.

விவசாயத்திற்கான சகல சுவாத்தியங்களும் நூற்றுக்கு நூறு வீதம் எமது நாட்டில் உண்டு எனவே நாட்டின் முதுகெலும்பென வர்ணிக்கப்படும் விவசாயிகள் வியர்வை சிந்தி ஏர் பிடித்து கால்களை சேற்றில் புதைத்து விவசாயம் செய்யலாயினர். எமது நாட்டின் விவசாயிகளில் அதிகமானோர் ஏழைகள். எமது அரசின் பிரதான வருமானம் இப் விவசாயத்திலே தங்கியிருக்கின்றது. இதனை நன்கு உணர்ந்த அரசு விவசாயிகளின் துயர் துடைக்க விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தை அமுல் நடத்த வேண்டியது அத்தியாவசியமாகும். ஆம் இது ஒரு நல்ல திட்டம் ஆகும். ஏனெனில் இன்றைய தலைமுறையினர் விவசாயத் தொழிலை விரும்பாமல் ஏனைய துறைகளில் வேலை நாடிச் செல்கின்றனர். இதன் விளைவாக விவசாயம் குன்றி பிறநாட்டாரின் தயவை நாட வேண்டிய நிலை ஏற்படும். அதாவது உணவு வகைகளை பிற நாட்டில் இருந்து இறக்குமதி செய்ய நேரிடும். எனவே தான் இலங்கை வாழ் மக்கள் எல்லோரும் இவ் விவசாய ஓய்வூதியத்திட்டத்தை வரவேற்பர். இது விவசாயிகளை ஊக்குவிக்கும் திட்டம் ஆகும். தனது வயது முதிர்ந்த காலத்தில் இனிதே எஞ்சிய வாழ் நாளைக் கழிக்க இத்திட்டம் கை கொடுத்து உதவும் பரம்பரை பரம்பரையாக விவசாயிகளை இத்திட்டத்தை கைக்கொள்வதனால் விவசாயிகள் பெரிதும் நன்மை அடைவர்.

நாடு போற்றும் இவ்விவசாயிகளுக்கு ஓய்வூதியத்திட்டம் அவசியம் அமுல் செய்யப்பட வேண்டும். அரசு உடன் இத்திட்டத்தில் கரிசனை காட்டின் இயற்கை மண்ணை பொன் விளையும் பூமியாக்க இவ் விவசாயிகள் முதுகெலும்பு போல் நாட்டுக்கு உழைப்பது திண்ணம்.

"வாழ்க எமது நாடு! வளர்க எமது விவசாயம்"

ஆக்கம்
M.Z.B. அகமட்
ஆண்டு 8T

* * * *

# எங்கள் தோழர்களாய் விளங்கும் சில விலங்குகள்

வாய் பேசும் விலங்கு மனிதனாம். அந்த மனிதருக்கு அவரைப் போன்ற மனிதர்கள் தோழர்களாய் இருந்து உதவி செய்வார்கள். கோவிப்பார்கள். பகை கொள்வார்கள். ஆனால் அந்த மனிதருக்கு வாய்ப்பேசாச் சாதியான விலங்குகளும் தோழர்களாய் இருக்கின்றனர். மாடு, எறுமை, ஆடு, நாய், குதிரை, பூனை, கோழி முதலியன அவ்வகையான தோழர்கள்.

மாடு என்னும் விலங்கே ஆதிகால மக்களின் பெரும் செல்வமாக விளங்கியது. அதனால் மாடு என்னும் சொல்லுக்கு செல்வம் என்று கருத்தும் உண்டு அத்தகைய சிறப்பு வாய்ந்த விலங்கு மாடு. அது மனிதனின் உற்ற தோழன் பசுவானது நிறையுணவான பாலைத் தந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயைப் போன்று மனிதரை வளர்க்கின்றது. அதனால் பசுவை 'கோமாதா' எனப் போற்றுவர். எருதுமாடு வயலை உழுது பண்படுத்துகிறது. வண்டி இழுக்கின்றது. மனிதனின் விவசாய முயற்சிகளுக்கும் பக்கபலமாய் அமைகிறது. அத்துடன் இவற்றின் சாணம் பயிர்களுக்கு உரமாய் அமைந்து பயிர்களை வளர்க்கின்றது.

ஆட்டுப்பாலும் நிறையுணவு ஆவதோடு நோய் தீர்க்கும் மருந்தும் ஆகின்றது. செம்மறி யாட்டு மயிர் கம்பளி உடையாக மாறி மனிதனை குளிரிலிருந்து காக்கின்றது. ஆட்டுப்பிழுக்கையும் சிறந்த உரவகையில் ஒன்று.

நாய் மிக நன்றியுள்ள, கடமையுணர்ச்சியுடைய, காவற்காரனாய் விளங்கும் நல்ல விலங்காகும். நல்ல நாயுள்ள வீட்டிற்கு எவ்வித அரனும் தேவையில்லை. பூனை எலிகளை ஒழித்து பல பொருட்களை பாதுகாக்கின்றது.

பாலைப்போன்று மற்றொரு நிறையுணவான முட்டையை கோழி எமக்களிக்கின்றது. கோழிப் பண்ணைகளினால் மனிதனின் பொருளாதாரம் விருத்தியடைகின்றது.

வண்டி இழுக்கும் நல்ல குதிரை - நெல்லு
வயல் உழுது வரும் மாடு

அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு - இவற்றை
ஆதரிக்க வேண்டுமடி பாப்பா

என்று பாரதியார் சொன்னவற்றை கேட்டறிந்து. விலங்குகளாகிய நமது தோழர்களை துன்புறுத்தாமல் அன்பு செய்து காப்போம்.

ஆக்கம்
M.S. ஹமீட்
ஆண்டு 6 T

* * * *

# அன்பு

அன்பு என்பது மிகவும் புனிதமானது. அதனால் நாம் எல்லோருடனும் அன்பாக இருக்க வேண்டும். சில இடங்களில் போரும் குழப்பமும் கொந்தளிப்பும் பகையும் இருக்கக் காரணம் என்ன? அந்த இடத்தில் அன்பு உணர்ச்சி குறைந்திருப்பதே.

உலகத்தில் மக்களும், மிருகங்களும், பறவைகளும் மற்றும் உயிரினங்களும் அமைதியோடு உலவுவதற்கும் உயிரோடு இருப்பதற்கும் அடிப்படையாக இருப்பது அன்பேயாகும். ஒருவரிடத்தில் பொருட்செல்வம், அடக்கச் செல்வம் இருந்தும் அன்புச் செல்வம் இல்லாவிட்டால் அவர் மனிதனாகவே இருக்க முடியாது. திருவள்ளுவர் உலக மக்களின் மீது கொண்ட - அன்பின் விளைவாக பிறந்தே திருக்குறள் யேசுநாதர் மக்கள் மீது வைத்த அன்பேஅவரை சிலுவையில் அறைப்பட்டு உயிர்துறக்கும் அளவிற்கு காரணமாக இருந்தது. இறைவன் அன்பே வடிவானவர். அதனால் தான் பெரியோர் இறைவனை 'அன்பே சிவம்' என்றும் 'அன்பின் விளைந்த ஆரமுதே' என்றும் அழைத்தனர்.

ஆகவே நாம் எல்லோருடனும் அன்புடன் இருந்து இறைவனை மனதில் இருத்திக் கொண்டு மகிழ்ச்சியுடன் வாழ்வோமாக.

ஆக்கம்
S.ஹிரோஷன்
ஆண்டு 6 T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

நமக்கும் என்றும் இனியவர் தாயும் தந்தையருமே. அவர்களை விட சிறந்தவர்கள் எமக்கு யாரும் இல்லை. பெற்றோர்கள் செய்யும் உதவியும் அவர்கள் நமக்கு காட்டும் அன்பும் நம்மால் எவ்வளவு என்று அளவிட முடியாது. நம்மை பெற்று வளர்ப்பதற்கு எத்தனையோ துன்பங்களை அனுபவிக்கின்றனர். எம்மை பெற்று அருமையாகவும் பெருமையாகவும் போற்றினார்கள். நமக்கு எவ்வித நோயும் வராமல் எம்மை இரவும் பகலும் பாதுகாக்கின்றனர். பெற்றோர்கள் நம்மை வளர்த்து படிக்கவைத்து ஆளாக்கினர். நாம் நன்கு கற்று வல்லவர்கள் ஆவோம் - என்றும் உயர்ந்த பதவிகளை அடைவோம் என்றும் எண்ணி இன்பம் அடைவார்கள். அவர்களுடைய பசியையும் பொருட்படுத்தாது எமக்காக பாடுபடுவதில் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். வாழ்நாள் முழுவதும் நமக்காக தியாகம் செய்யும் அருமைப் பெருமைப் பெற்றோர்களை கண் கண்ட தெய்வமாக போற்ற வேண்டும். பிற்காலத்திலே அவர்களுக்கும் என்று ஒன்றும் சேர்க்காது தம் பிள்ளைகளையே பெரும் செல்வமாக நினைக்கும் பெற்றோரை நாம் பாதுகாத்து பேண வேண்டும். அவர்களுக்கு உடலும். உள்ளமும் நோகாமல் நடந்து கொள்ள வேண்டும். எமது தாய் தந்தையாருக்கு செய்யும் உதவி உலகிலே மிகச் சிறந்தது. தாயில் சிறந்ததொரு கோவிலும் இல்லை தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை - என்பது போல அவர்களைப் பாதுகாத்து அவர்கள் சொற்படி நடந்து உலகில் நல்ல பிள்ளைகளாக நாம் வாழ்வோமாக.

ஆக்கம்
ச. சிரிதரன்
ஆண்டு 7 T

★ ★ ★ ★

# நான் ஒரு குருவானவரானால்....

எனக்கு சின்னச் சின்ன ஆசைகள் பல உண்டு. நான் ஒரு குருவானவராக வரவேண்டும் என்பதே இந்த ஆசைகள் எல்லாவற்றிலும் மேலானதாகும். கடவுள் தனக்கு ஊழியம் செய்யுமாறு என்னை அழைத்தால் தான் இந்த ஆசையை நான் நிறைவேற்ற முடியும். இறைவன் என்னை அழைத்தால், நான் குருவானவராக வந்தால், மக்களை நான் நல்வழிப்படுத்துவேன். உண்மைக்கு சாட்சி பகரும் மக்களாக, நீதிக்கு குரல் கொடுக்கும் மக்களாக, இறைவனின் நாமத்தை விசுவாசிக்கும் மக்களாக அவர்கள் வாழ வழிகாட்டுவேன். யேசுக் கிறீஸ்து இவ்வுலகில் எப்படி வாழ்ந்து காட்டினாரோ, அதே வழியை நான் பின்பற்றுவேன். ஏழை எளியவர்கள், அனாதைகள், அகதிகள் மீது அன்பு செலுத்தி, கருணையுடன் பணிவிடை புரிவேன். மக்களுக்கு திருப்பலி ஒப்புக்கொடுப்பேன். இறைவனின் பணிகளாகிய குருத்துவப்பணி, போதகப்பணி என்பவற்றை நிறைவேற்றி எனது இலட்சியம் கைகூடுமாறு வாழுவேன்.

ஆக்கம்
P. லெனாட்
ஆண்டு 8T

✢ ✢ ✢ ✢

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுத்தம் சுகம் தரும்

சுத்தம் சுகம் தரும், என்பது ஓர் சுகாதார பழமொழி ஆகும். இதன்படி சுத்தம் எமக்கு ஆரோக்கியமான வாழ்வை வழங்கவல்லது. எப்போதுமே எம்மையும் எமது சுற்றாடலையும் நாம் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். கைகழுவி உணவருந்துவதும், இருவேளை பல் துலக்குவதும், மலம் கழித்த பின் சவர்க்காரமிட்டு நன்றாகக் கைகழுவுவதும், சுத்தமான ஆடைகளை அணிவதும் தலையை எண்ணெய் வைத்து நன்றாக சீவுவதும் எம்மை என்றும் சுத்தமாக வைத்திருக்க உதவும். இது மட்டுமன்றி எமது சுற்றாடலையும் நன்கு சுத்தமாக வைத்திருக்க வேண்டும். குப்பைகளைத் தூக்கி வீசிவிடாமல் ஓர் பாத்திரத்தில் போட்டு வீசி எரித்து விட வேண்டும். கண்ட இடங்களில் துப்புவதையும், கண்ட இடங்களில் மலங்கழிப்பதையும் தவிர்த்துக் கொள்வதால் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆக்கம்
S.விஸ்வராஜா.
ஆண்டு 3.D

* * * *

# விடை பெறும் நூற்றாண்டில் விடை பெறாத பிரச்சினைகள்

இச்சிறிய புவி இந் நூற்றாண்டை மகிழ்ச்சி ஆரவாரத்தோடு தான் வரவேற்றது. எனினும் இந்நூற்றாண்டுக்கு பிரியாவிடை வழங்கும் போது முன்னர் செவிமடுத்திராத இரு முக்கிய பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்க வேண்டியுள்ளது. இந் நூற்றாண்டு எமக்கென விட்டுச் செல்லும் சீதனம் தரம் குறைந்து செல்லும் சுற்றாடலும் வளர்ந்து செல்லும் சனத்தொகையும் தான்.

ஒரு நாட்டினுடைய மிக முக்கிய ஒன்று மனித வளம். அதிலும் எம் போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு அதுவே முக்கிய பலம். நாட்டின் ஏனைய வளங்களைப் பாதுகாக்கவும் அவ்வளங்களைப் பயன்படுத்தி நாட்டை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லவும் மனித வளம் அவசியம். ஆனால் வரையறுக்கப்பட்ட வளங்களையுடைய நாட்டில் வரையறை கடந்து சனத்தொகை அதிகரித்து சென்றால் அதன் விளைவாக ஏனைய வளங்கள் துறையாடப்பட்டு சுற்றாடல் தரக்குறைவாகும் விபரீத நிலை உருவாகும்.

உலக சனத்தொகை அதிகரித்துச் செல்லும் வேகத்தில் மனிதன் அமைதியாகவும், வளமாகவும், ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு அவசியமான வளங்கள் புவியில் அதிகரித்துச் செல்கின்றனவா? இல்லை எனவே தான் இன்று நிலம் தரக்குறைவடைவதற்கும், நீர், வளி என்பன மாசடைவதற்கும் அதிகரித்த சனத்தொகையும் அதன் விளைவாக செயற்பாடுகளும் மூல காரணமாகவுள்ளன.

நாடோடியாக வேட்டையாடி, கிடைப்பதை உண்டு வாழ்ந்த மனிதன் பயிர் செய்து நிரந்தரமாக வாழத் தொடங்கினான். அவனுடைய உணவும் பிரச்சினை பாதுகாப்புப் பிரச்சினை என்பன முன்னேற்றமடைய அவனுடைய எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. பயிர் செய்ய அதிக நிலம் தேவைப்பட்டது. இதற்காக காடுகளை அழிக்கத் தொடங்கினான். இவ்வாறாக சனத்தொகை வளர்ச்சிக்கும், சுற்றாடற் பாதுகாப்பிற்கும் இடையிலான போராட்டம் அன்றே ஆரம்பமாகியது. ஆனால் இருபதாம் நூற்றாண்டிலேயே இது தீவிரம் அடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனத்தொகை வளர்ச்சிக்கு நவீன மருத்துவ விஞ்ஞானத்தின் மகத்தான சாதனைகளும் ஏதுவாக இருந்தன. சிசு மரண வீதம் குறைந்தமை. தொற்றக் கூடிய பல கொடிய நோய்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டமை, மனிதனின் சராசரி ஆயுள் அதிகரித்தமை என்பவ ற்றால் இந் நூற்றாண்டில் சனத்தொகை பல்கிப்பெருகியது.

சில வருடங்களின் முன் நடந்த இரு முக்கிய சர்வதேச மகாநாடுகள் இவ்விரு பிரச் சினைகளும் சர்வதேச அரங்கில் இன்று மிக முக்கிய பிரச்சினைகளாகி விட்டன என்பதையே உணர்த்துகின்றன. ஐ.நா.இன் சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி மீதான மாநாடும் சனத்தொகை மற்றும் அபிவிருத்தி மீதான சர்வதேச மாநாடும் இந்தத் தசாப்தத்தில் முக்கியமானவை. எதிர்கால சந்ததிகளின் தேவைகளை பாதிக்காத வகையில் இன்றைய சந்ததியினர் தமது தேவைகளை பூர்த்தி செய்து முன்னேறுவதற்குரிய அணுகுமுறைகள் இங்கு ஆராயப்பட்டன. இம் மாநாடு சனத்தொகை, சுற்றாடல், அபிவிருத்தி, வளங்கள் ஆகிய நான்கிற்கும் இடையிலான நெருங்கிய தொடர்பை உணர்த்துகின்றன.

நாடுகளுக்கிடையில் ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்து வைப்பது. மனித உரிமை மீறல் களைத் தடுத்தல், என்ற பணிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட ஐ.நா.சபை சுற்றாடற் பாதுகாப்பு, சனத்தொகைக் கட்டுப்பாடு என்பவைகளிலும் கவனம் செலுத்துவதிலிருந்து இப்பிரச்சினைகளின் பாரிய தாக்கம் தெளிவாகிறது. உலக மக்களுக்கிடையே இப் பிரச்சினைகளின் கொடிய விளைவை அறிவுறுத்தி தூங்கிக் கொண்டிருக்கும் மக்களைத் தட்டி எழுப்பி "தீர்வு காண ஓடி வாருங்கள்" எனக் கூவியழைக்க வேண்டும். இதன் மூலம் தான் இனி வரும் நூற்றாண்டிலாவது இவ் விடை காணாப் பிரச்சினைகளுக்கு விடை காணலாம்.

ஆக்கம்
எஸ். ரஜனிகாந்த்
(A.L 96)

❄ ❄ ❄ ❄

# நீங்கள்

அமைதிப் பூவை உதிர்த்தி
அழிவையுண்டாக்கி!
அதன் மேலே
நடந்து போகையிலே!
அமைதி பிறக்கும் என்று
கனவு காண்பார்கள் ....?

❖ ❖ ❖ ❖

சண்டையை மூட்டி
இரசித்துப் பார்த்துவிட்டு
சமாதானத்துக்காகப்
பாடுபடும் – தலைவர்கள்....!

❖ ❖ ❖ ❖

மரியாதையின்றி!
மயானமின்றி!
மானிட உயிர்களை
நடுத்தெருவினில்
சுட்டு வீழ்த்தும்
வேடதாரிகள்.... !

❖ ❖ ❖ ❖

செய்யாத குற்றத்திற்கு
நாங்கள்
தண்டனை பெறும் போது!
சிந்தும் இரத்தங்களுக்கு
நிச்சயம்
பதில் சொல்ல வேண்டியவர்கள் ...!
நாணயத்தை விலை பேசி!
நன்றியை மறந்து!
நல்லவர்கள் யாவரும்
காட்டிக் கொடுக்கப்பட்டு
காணாமல் போவதற்கு
காரணம் .... !

❖ ❖ ❖ ❖

செய்வதையும் செய்துவிட்டு !
கண்களிலே நீரைக் காட்டி
கல்லான உள்ளங்களையும்
கசியச் செய்யும்
நவயுக
இராமர்கள் ...!
இல்லை!
சீதைகள் ... !

ஆக்கம்
ந. சஞ்ஜீவன்
A/L – 97 (உயிரியற் பிரிவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியதோர் உலகம் செய்வோம்

புறப்பட்டுவிட்டேன்,
பொறாமையை அடக்குவதற்கும்,
பொய்மை அழிப்பதற்கும்
போரை கிள்ளி எறிவதற்கும்,
ஆம்,
புதிய தோர் உலகம் செய்யப்
போகின்றேன்
சத்தி முனையால் சாதிக்க முடியா
சமாதானத்தை எனது இப்
பேனாமுனையால் சாதிக்கப் போகின்றேன்.
அதற்காக எனக்கு இவ்வளவும் வேண்டும்
என்
இறைவனுக்கு மடல் வரையப் போகின்றேன்
இறைவா!
பொன்னை காணாத கண்கள் வேண்டும்
பொய்கள் பேசாத வாய்கள் வேண்டும்.
பொறாமையில்லாத உலகம் வேண்டும்
போர்கள் ஒழிந்திடல் வேண்டும்.
போலி மனிதரைக்கண்டு "போடா"
சொல்ல வேண்டும்
போனால் போகட்டும் என்று விட்டுத்தள்ள
வேண்டும்
பேதம் மறந்திடல் வேண்டும்
புதிய தோர் உலகம் வேண்டும்!

பத்து மாதம் சுமந்த தாயை
பாசத்துடன் நேசித்தல் வேண்டும்
பாரதி கண்ட புதுமைப் பெண்கள்
வேண்டும்

வள்ளுவன் காட்டிய வழியில் செல்ல
வேண்டும்.
கம்பன் காட்டிய கருணை வேண்டும்.
வில்லுப்பூத்தாழ்வார் காட்டிய வீரம்
வேண்டும்
வம்புகள் கண்டே தூர விலகிடல்
வேண்டும்
புத்தம் புது பூமி வேண்டும்!

நான் வேண்டுவன எனக்கூறியவை
எல்லாம்,
இன்று வேண்டாதனவாயிட்டன.
ஆனாலும்
உலகின் ஒரு மூலையில்
ஒரு புதிய உலகைச் செய்ய
ஒரே ஒரு உண்மை வேண்டும்.

நான் வரைந்த மடலுக்கு
இறைவன்
இன்று அல்லது நாளை
பதில் எழுதும் வரை
காத்திருப்பேன்.
நான் வேண்டியவற்றை
தருவானா?
தரமாட்டானா?
காலம்தான் பதில்
சொல்லும்!!?!??

**K. விஜயபாபு**
**ஆண்டு 11 T**

● ● ● ●

## கோடீஸ்வரர் ஆகலாம்

கண்ட கண்ட பொருளெலாம்
காசு போட்டு வாங்கியே
தண்டச் செலவு செய்வதால்
தரித்திரராய் ஆகிறோம்!

சிறுகச் சிறுக காசெல்லாம்
செலவிடாமல் சேர்ப்பதால்
பெரிய பெரிய தொகையதாய்ப்
பின்னர் மாறக் காணலாம்.

உண்டி ஒன்று வாங்கியே
ஒன்றிரண்டு காசதில்
கொண்டு தினமும் சேர்ப்பதால்
கோடீஸ்வரர் ஆகலாம்!

**ஷரோன்**
**ஆண்டு 4 D**

## ஆசிரியர்

அன்பில் அன்னை
ஆளும் அரசன்
இரக்கத்தில் இமயம்
ஈகையில் ஈடில்லை
உழைப்பில் உத்தமர்
ஊருக்கு உதவுபவர்
எதிலும் ஏற்றம் காண்பவர்
ஏணியால் நிற்பவர்
ஐயம் தீர்ப்பவர்
ஒற்றுமையை வளர்ப்பவர்
ஓங்கிய குணத்தின் குன்று

**M.J.M. இஷாம்**
**ஆண்டு 4 D.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை அமைதி

அடக்க வேண்டிய ஆத்திரம்
சொல்ல வேண்டிய உண்மை
கொள்ள வேண்டிய அமைதி
விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை
இவற்றின் எதிர் மறையால்
அழியும் நிலையில் மானிடம்

✻

சந்தோசச் சிரிப்பு
ஓடி ஒளிந்து கொள்ள
சமாதானப் புறா
கூண்டில் அடைபட
நிலையற்ற இவ்வுலகில்
ஏனிந்தத் தீராத ஆசை

✻

வேண்டாம்
சண்டை வேண்டாம்
ஆம்! வேண்டும்
அமைதி வேண்டும்
மானிடர்களே
சேருங்கள்.

✻

அனைவரும் ஒன்று சேருங்கள்
பிறக்கப்போகும்
புதிய நூற்றாண்டை
மகிழ்ச்சியுடன் வரவேற்க
வரும் நூற்றாண்டிலாவது
அமைதி குடி கொள்ளட்டும்.

T. காண்டீபன்
A/L 96 (கணிதப் பிரிவு)

✻ ✻ ✻ ✻

# ஈசன் ஈந்த செல்வம் ...

ஈசன் ஈந்த செல்வத்தில்
கல்வியது வைரமடா
அறிவு நேசன் கைப்பற்றும்
பெறுமதியான தங்கமடா

அறிவில்லா மானிடன் - பணம்
கண்டு துள்ளுகிறான்
அவன் மனிதனாக மாற
கல்வியது கருவியடா

ஞாலத்தில் உய்ந்திடவே
கல்வியதைக் கற்றுக்கொள்
நாதனவன் நாமம் போல
உன்புகழும் நிலைத்திடுமே

க சதீஸ் குமார்
ஆண்டு 9 T

# ஒற்றுமை ஓங்கிடச் செய்வோம்.

நாட்டிலே ஏற்பட்ட
நலிவினைப் போக்கவும்
நன்செய் புன் செய்
நற்பலன் ஈயவும்
வீட்டில் துயர்
வேரறுந் தழியவும்
வேதனை எனும்
கொடுவார்த்தை நீங்கவும்
போட்டியும் தீய
பொறாமைகள் மாயவும்
பொழுதெலாந் தொழில்
வளமுறப் பெருகவும்
காட்டுவோம் நேர்வழி
என்னுமோர் கர்ச்சனை
கல்விக் கூடங்கள்
எங்கும் ஒலிக்கவும்.

★

நெறியற்ற சோம்பலை
நீக்கி நாம் வாழவும்
நேர்மையும் ஒழுக்கமும்
நேயமாய் வளரவும்
அறிவோடு உழைப்பையும்
அனைவரும் அடையவும்
ஆனந்த சுதந்திரம்
நுகர்ந்து நாம் களிக்கவும்
சத்தியம் தவறிடாச்
சமயமும் சாந்தியும்
சகலர்க்கும் ஒற்றுமைச்
சமத்துவம் பண்பதும்
பெற்று நாம் பொலிந்திட
நம்மிடையே
ஒற்றுமை
ஓங்கிடச் செய்வோம்.

எம்.எவ்.எம். ஹசாரி
A/L (97) - உயிரியல் விஞ்ஞானப்பிரிவு

✻ ✻ ✻ ✻

# இல்லை! இல்லவே இல்லை

கையிலோ பணம் இல்லை
பசி வயிற்றில் இல்லாமல் இல்லை
கொடுத்துதவ உறவு இல்லை
பணம் இருந்தாலோ உறவுகள் இல்லாமலில்லை
மனித நேயமே இல்லை - நாலுகால்
சீவனுக்கும் நன்றி இல்லாமலில்லை
உடமைகளும் உறவுகளும் இல்லை
ஏசுவும் புத்தனும் காந்தியும் இல்லை - அவர்
போதித்த போதனை மண்ணில் இல்லவே இல்லை

க. சரவணன்
உயிரியல் பிரிவு '96'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் பலரகம்

மாணவர் நாங்கள்
அறிவோடு பாடங்களை
அழகாக கற்றுணர்ந்து
அறமான பிரஜையாய்
ஆகுவதே எம் கடமை - ஆனால்
எங்களிலே பலரகம்
எது வெதுவோ செய்கின்றோம்
ஏகத்தாள பேச்சுத்தான்
என்றாலும் ஏற்கின்றோம்

பள்ளிக் கூட வாழ்க்கையிலே
பலரகமாய் நான் கண்ட
பலதையும் மொழிகின்றேன்
பாங்காக கவிதையிலே

வகுப்புக்கு வருவார்
வஞ்சனை இன்றிப் பேசுவார்
வக்கணையாயும் பேசுவார்
எனினும்
எதையும் பேசும் அவர்
எடுத்துப் பேசாதது ஒன்றே ஒன்று
வேறொன்றையுமல்ல
பாடத்தை தான்
இவர் ஒரு ரகம் - இவரை போல
இன்னும் பலரகம்

கட்டிளங் காளையாய்
களிப்புடன் நுழைவார்
சிதறலாக பேசுவார்
சிந்தையை கிளறும் விதம்
சிங்காரமாய் முறிப்பார்
ஒன்றையும் அல்ல
சோம்பலை தான்
அன்றைக்கு அவர் ரெஸ்டாம்
என்றைக்கு பாடம் படிப்பது - அது
எப்போதும் கேள்விக்குறிதான்
அனுபவத்தில் நான் கண்ட
அடுத்த ரகம் இவர்

உண்மையுடன் ஊக்கமுடன்
உயர்ந்திடும் நோக்கமுடன்
உற்சாகமாய் கற்பார்
ஆனால் பாவம்
உரிய வழி புரியவில்லை
இவர்கள்
பரிதாபத்தின் பிரகிருதிகள்
பலரகத்தின் ஒருரகம்

ஊர் புதினம் உற்சாகமாய் உரைப்பார்
குறுக்கு வழி பல செப்பிடுவார்
ஆனால் இவர்
ஈராண்டில் ஒரு வகுப்பில் மறவாமல்
இருந்திருந்து வந்தாலும்
அறிவின் அளவிலே
ஆக குறைவு தான்

வல்லவர்; ஆனால் வகுப்புக்கு வரார்
வருந்தி அழைத்தாலும்
வழுக்கிச் சென்றிடுவார் - ஆனால்
வருடம் முழுவதிலும்
டியுஷன் வகுப்பென்பார்
"Special" வகுப்பென்பார்
அளவோடு சாப்பிட்டால்
அழகாக ஜீரணிக்கும்
அதிகமாக சாப்பிட்டால்
அஜீரணந்தான் பிடிக்கும்
அப்படியும் ஒரு ரகம்

எறும்பாய் உழைத்து
துரும்பாய் இளைத்து
செறிவும் விரிவும் கொண்டு
செம்மையாய் கற்பார்
நன் மாணாக்கர் என்பார்
இவர்கள் தானோ! ....
இவர்கள்.......
நினைக்கும் ..... போதே .... ஆஹா ......
இனிக்கும் ஒரு ரகம்
....... அன்புத் தோழா .......
நாளைய அரசர் நாமே
அறிவுடன் நடந்து கொள்வோமே
புத்துணர் வதனைப் பெற்று
புதுயுகமதனைப் படைத்திடுவோமே ....

ஆக்கம்
B.H.M. Hafreth
(A/L '95)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளைய உலகை நமதாக்க

இளைஞனே விழித்தெழு
உறக்கத்தை கலைந்திடு
இரவுக்குள் இனியும்
ஒளிந்திருக்க தேவையில்லை
விடிவை நோக்கி வந்து விடு
சம்பிரதாய சடங்குகளை
கடமைகளாக கருதும்
மடமைகள் ஒழியவே
சாதிகள் ஒழியவே
சந்தர்ப்ப வாதிகள் அழியவே
சமுதாய சாக்கடையில்
இருந்து மனிதத்தை
மீட்டெடுக்க வந்துவிடு
கண்ணீர் கதறல்கள்
கோழைகளின் சின்னங்கள்
கண்ணீரை துடைத்துக்
கொண்டு கண்களை
நீ திறந்து விடு
காலம் கடக்கு முன்பே
வாழ்க்கையின் கதவுகளை
திறக்க வந்து விடு
உறங்குகின்ற உலகமிது
இளைஞனே உனக்கும்
உரிமை உண்டு
கடமை உண்டு
புரட்சி செய்யவே
இளமை முடியு முன்பே
எதிர் காலத்தை
ஒளியேற்ற வந்து விடு

H. Suresh
A/L 95

◆ ◆ ◆

## அறிவானோ மனிதன்?

குரங்கில் இருந்து
மனிதன் பிறந்தான்
கூர்பினில் உயர்ந்தான்
கூர்மதி கொண்டான்
விண் வெளியில்
பவனி வந்தான்
வெண்ணிலவிலும்
கால் பதித்தான்
மண்ணுலகையே
ஆட்டி படைக்கின்றான்
ஆனால் கணத்துக்கு கணம்
நிலை தடுமாறுகின்ற மனிதன்
மார் தட்டி கொள்வானோ?
மரத்துக்கு மரம் தாவும்
மந்திகள் என்றும்
பணத்துக்கு அடிமைகள்
ஆனதில்லை பகுத்தறிவு
கொண்டவனானிவன்
அறிவானோ?

ஆக்கம்
M. குணசீலன்
A.L. 96 (வர்த்தகம்)

## மனிதப் புனிதர்கள்

அறிவு என்னும் பூக்களின்
மொட்டுப் பூக்கள்
மெல்லத் திறந்து
பாரெங்கும் மணம் பரப்ப
தினமும் நீர் வார்க்கும்
ஓயா உழைப்பாளிகள்

✱ ✱

அறிவீனம் எனும் இருளிலே
தொலைந்து போகும் - மனிதக்
கப்பலுக்கு - கலங்கரை விளக்கவர்கள்
அறிவு எனும் நெற்றிக் கண்ணை
கற்றுத் தந்து அதன் மூலம்
பிச்சைப் பாத்திரங்களை
அமுத சுரபிகளாக்கும்
மனிதப் புனிதர்கள்

✱ ✱

புதிய தொரு உதயத்தின்
வைகறை விடிவெள்ளிகள்
கரை காணா கல்வியின் மறை
நூல்கள் கூறும் - நிறை மனிதர்கள்
அறிவால் நரைத்து - எம்மை
திருத்த முறைப்பவர்கள் - பின்
அன்பில் கரைப்பவர்கள்

✱ ✱

ஒழுக்கமும் அன்பும் - வளர்க்கும்
வள்ளல்கள்
வாழ்வில் வெற்றியினை
வார்த்தையில் செழிப்பினை
வாதத்தில் தெளிவினை
வேதத்தின் அறிவினைத் தரும்
நேர் வழியாளர்கள் - ஆம்
ஆசான்கள் அவர்களை நாம்
போற்றுவோம்.

M.F. Nihmathullah
12 T (Bio)

● ● ●

## காரிருளில் ஒரு கவிதாப் பிரவாகம்

சில்லென குளிர் காற்று வீசியது
சிறு கவிதை மனதில் விளையாடியது
மெல்ல நடந்து சென்றேன் மேசையருகில்
மேனி சிலிர்த்தது அந்தி வானம் கண்டு

நீலத் திரை சேலையிலே வெள்ளித்தட்டு
உருண்டு வருகின்றது - கூந்தலை நீ முடித்து கொள்
நீருக்குள் நெருப்புக்குள் வைரக்கல்லாக
நீராடுகின்றது - நாளைவரை பொறுத்துக் கொள்
நீலங்கள் சிவப்புகல் சிதறிக்
கிடக்கின்றது - வாரியதை - எடுத்து கொள்
நிகரில்லா அழகுடை இரவு
மங்கையே - நித்தம் நீ வந்து செல்
நித்திரையை வென்று விட்டாயே
இன்னும் ஒரு கவிதை சொல்.

றியாஸ் தாஜுடீன்
A.L '95

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெய்யோனின் காதலுக்கு விடையாதோ?

வெள்ளாடை போர்த்திருக்கும் வெண்பனியே!
வென்றிட முடியுமோ உன்னழகை?
கொள்ளை கொள்ளும் உன்னழகைக் கண்டு - எவனும்
கொன்று விடுவான் தன்காதலியின் காதலை

கண்மணியே இயம்பமாட்டாயோ என்னிடம்
கலப்படமற்ற உன்னழகை யார் ஈர்ந்ததென்று
வெண்பனியே கருணை காட்டிட மாட்டாயோ? - இந்த
வெய்யோனிடம் உன்கோபத்தை குறைத்திடமாட்டாயோ?

ஏன் கண்ணே நான் வரும்போதெல்லாம்
எமனைக் கண்டவள் போல் ஒதுங்குகிறாய்?
பெண்ணே உன்காதலை என்பக்கம் திருப்பாயோ? - நான்
பெருமையோடு உன்வரவை ஏற்பேன்

**வெண்பனியின் விடையிதோ!**

கர்ணனை ஈந்த கதிரவரே! - உம் மனம்
கலக்கம் அடையலாமோ இப்படி
பார்போற்றும் கமலவள் இருக்கும் போது
காற்றுக்கு பதுங்கவேண்டியதுதான் - நான்

பகலவா கலங்காதே சித்தம் - உன்வரவிற்கு
பலவாறு அழகுபடுத்தி பொய்கையிலிருப்பாள் அவள்
தாமரையைக் கவனி கதிரவா - அவளை
தாமதிக்க வைத்து விடாதே!

ஆக்கம்
ஞா. பாலச்சந்திரன்
ஆண்டு 10 T

☆ ☆ ☆

# பூக்கள்

வண்ண வண்ண பூக்கள்
வடிவான பூக்கள்
வாஞ்சை இன்றி பறிக்கும்
வட்டமான பூக்கள்

மனதைக் கவரும் பூக்கள்
மணம் வீசும் பூக்கள்
தேனீ வண்டு அமர்ந்து
தேன் குடிக்கும் பூக்கள்

பெரியோர் சிறியோர் ஈடின்றி
பெரிதும் விரும்பும் பூக்கள்
இறைவன் கூட விரும்பும்
இனிமையான பூக்கள்

காடு மேடு ஊரெல்லாம்
காணாததோ பூக்கள்
என்னை மயக்கும் பூக்கள்
எண்ணிலடங்காப் பூக்கள்

கமால்
ஆண்டு 4 D

# மௌனம் பேசிய போது

வாய்திறந்து பேசாமல்
வார்த்தைகள் இல்லாமல்
வாழ்க்கையினை இருளாகி
வாழ்வது இனி தேவையா?
நிலை கெட்ட எனக்கு
நிம்மதி இனி எங்கே
கனவு இனி ஏதும் இல்லை
கற்பனைக்கு இடமும் இல்லை
பெற்றெடுத்த பிள்ளை நான்
பெயரில் மட்டுமே பிள்ளை நான்
சொற்களில் மட்டுமே எனக்கு
சொந்தம் என்ற உரிமையுண்டு
அத்தனையும் வாழ்க்கையில்
அகலாத நினைவுகளாகி
நித்தமும் நின் எனக்கு இவ்வாறு
நிம்மதி கெட்ட வாழ்வெதற்கு
தொட்டு வளர்ந்த மலர்ச்செடி
தோள் கொடுத்தது எனக்கு
ஏணிப்படிகளாகிய பட்டம்
எனக்கு ஏற்றதாகி விட்டது
சர்ச்சைக் குரிய இந்நிலை
சதா காலங்களில் நிலைக்காமல்
நீர்குமிழி போல் உள்ள வாழ்வை
நித்தமும் சந்தோசமாக்க
வெட்டுக் கிளிபோல தாவியும்
சித்திரை நிலவு போல சிரித்தும்
பச்சை கிளிபோல் பேசியும்
நித்தமும் சந்தோசமாக வாழ்வேன்!

ஆக்கம்
M.T.M. Zihar
A/L 95

* * *

# இல்லை! என்றும் இல்லை

படிக்க என்று நாம் வந்தோம்
ஆனால் நாம் படிக்கவில்லை

படிக்கமட்டும் பணம் தந்தார்
நம் பெற்றோர் ஆனால் இலாபமில்லை!

படிப்பிக்க என்று ஆசிரியர் வந்தார்
படிக்க நமக்கு பிடிக்கவில்லை!

பரீட்சை என்று ஒன்று வந்தது
எழுத ஒன்றும் அறிவு இல்லை

பரீட்சையை மட்டும் எழுதி முடித்தோம்
முடிவில் "F" மட்டும் குறையவில்லை!

வேலை தேடி நாம் பறந்தோம்
வேலை நமக்கு கிடைக்கவில்லை!

செய்த தவறை நாம் உணர்ந்தோம்
ஆனால் இப்போ பயனுமில்லை!

சி. மாக்சன்
A/L 97 - வர்த்தகப் பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவே உன் வானம் உன்னுடன் கதைக்கிறது

என்றும் தீராத நட்புடன் வாழ்ந்தன வானும் நிலவும். தென்றல் வீசிய அவர்களது பசுமையான வாழ்வில் புயலாய் நுழைந்தது அமாவாசை என்ற பூகம்ப நாள். இந்தச் சதியினால் நிலவு அன்றைய தினம் வானுடன் கதைக்காது கோபித்துக் கொண்டு சென்றுவிடுகின்றது. ஒரு நாள் அந்த ஒரேயொரு நாள் தன் பொன்னிலவு தன்னை விட்டுப் பிரிவதை தாங்கமுடியாத வானம், "பொறுப்பில்லாதவர் பேச்சால் நெருப்பில்லாமலும் புகையும் என்பதை நிலவுக்கு உணர்த்த தன் நிலையை இவ்வாறு வெளியிடுகிறது.

"அன்பே நிலவே
ஆத்திரத்தில் அமாவாசை செய்த செயலுக்கு
இப்படியா கோபிப்பது?
ஈங்கு நான்
உன் நினைவால் வாடுகிறேன்
ஊமையாய் நீ சென்றிருந்தால்
என் மனதைத்தேற்றிக் கொள்வேன்
ஏங்கும் என் மீது
ஐயமுற்றால்
ஒரே ஒரு வார்த்தை கூறிவிடு
ஓய்ந்து விடுகிறேன் உன் நினைவைவிட்டு
ஔடதத்தால் தீராதது உன்னால் தீருமடி"
என்றது வானம்.

" வானில் வாழும் நிலவு வானை விட்டுப் பிரிந்தால் வானுக்கு மகிழ்ச்சி என நிலவு நினைத்தால் அது நிலவின் குற்றம். யாருமற்ற நிலையில் நிலவின் நட்பை மட்டுமே தன் மூச்சென எண்ணி வாழ்ந்த வானை நிலவு கைவிட்டால் வானம் யாது செய்யும்? எப்படி வாழும்? நிலவே நீ தான் விடை கூற வேண்டும்"!

எனக் கூறியவாறே

"நிலவே உன்னையும் என்னையும் கருமுகில் கூட்டம் மறைக்கும். ஆனால் நாம் என்றும் எம் ஒளியை இழப்பது இல்லை என்பது உனக்குத் தெரியாதா"? என்று நிலவின் வருகையை எதிர் பார்த்துக் காத்திருக்கின்றது வான்.

"நட்பென்னும் விதி நம்கண்ணெதிரே பரந்து கிடக்கிறது, பாதி வழி வந்தோம், இனி மீதி வழி செல்வோம். ஏனெனில் நாம் நண்பர்கள்!"

**ஆக்கம்**
**சண்முகம் சிவபாஸ்கரன்**
**(A/L - 96 – உயிரியல் பிரிவு)**

✡ ✡ ✡

# சிகரெட்

விதவைக் கோலம்
பூண்டாலும்
என்னை
விலை கொடுத்து
வாங்காதவர் சிலரே
சாதி மத பேதம் இன்றி
சமத்துவமாய்
கைகளைத் தொட்டு
உதடுகளை முத்தமிடும்
உத்தமிகள் நாங்கள்
நீ தொட்டால்
தீர்ந்து போகும்
எங்கள் வாழ்க்கை – அதனால்
நீயும் அழிந்து போவாய்
என்ற திருப்தியுடன் தான்
உயிர் துறப்போம்
குளிரை விரட்டவும்
மதிப்பை உயர்த்தவும்
மகிழ்ச்சியில் மயக்கவும்
சிலர் சிந்திக்கவும்
செயல்படும்
கௌரவ செயலாளர்கள்
நாங்கள்
ஆசைப்படாதவர்கள்
அறிவிப்பு செய்தாலும்
அஞ்சமாட்டோம்
மானிடம் மறக்க முடியாத
மர்ம தேவதைகள்
நாங்கள்
என்பதில் ....

எம். எச். எம். சாஹிர்
A/L 96

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பனே! எனது உயிர் நண்பனே!

என்னுயிர் நண்பனே,
உனக்கு கடிதம்
ஒன்று எழுத நினைத்தேன்
நீ தான் என்னைப் பிரிவதில்லையே
அதனாலே கவிதை ஒன்று எழுதுகிறேன்.

என்னையே பின்பற்றி வருகின்றாய்,
வாழ்க்கைக்கு வழி காட்டுவது போல் -
நீ முன்னாலும் வருகின்றாய் - ஆனால்
ஆதவன் உச்சி வானில் வரும் வேளையில்
ஏன் பாதங்களின் கீழ் ஒளிந்து கொள்கிறாய்?
இன்பமும் துன்பமும் மாறி மாறி வந்த போதிலும்
என்னை விட்டுப் பிரிய மனமின்றி
பாசத்துடன் என்னைத் தொடரும் நண்பனே!
உன்னை நான் நேசிக்கின்றேன்.

நிலவு கூட இருளைப் பிரியலாம்
கதிரவனும் கதிர் இழந்து கருகிப் போகலாம்
விண்மீனும் ஒளி இழந்து வாடிப்போகலாம்,
வான் முகிலும் மழையாகி மண்ணுக்கு வரலாம்
மண்ணோடு வாழ்ந்தாலும் - நீ
என்னாடு வர மறப்பதில்லையே - அதனாலே
உன்னை நான் நேசிக்கின்றேன்

செருப்பினைத் தொட்டு தொடர்ந்து
வரும் என் விருப்பிற்குரிய நண்பர்
நெருப்பு சுட்டாலும் விட்டு விலகாத
கருமை நிறத் தோழா!
தொட்டிலை தொட்டு, கட்டிலை கடந்து சுடு காட்டிலும்
வந்து ஒட்டிக் கொள்ளும் எனது
கரிய விம்பம் நீ தானே - அதனாலே
உன்னை நான் நேசிக்கின்றேன்.

அன்பு அது வெறும் வார்த்தையல்ல
ஆனால் கொண்ட வெளி வேஷம் ஒன்று - இரண்டல்ல
அன்பென்ற அருஞ் செல்வத்தை - உன்னிடம்
நான் யாசிக்கின்றேன் - அதற்காகவே
நான் உன்னை மட்டும் நேசிக்கின்றேன்
என் உயிரிலும் மேலாக நேசிக்கின்றேன்
நீ எட்டாத இடத்து நிலவல்ல
சுட்டெரிக்கும் சூரியனுமல்ல
விட்டு விட்டு ஒளிரும் விண் மீனுமல்ல
தொட்டு விட்டு நழுவும் தென்றலுமல்ல
என் காலடியில் பட்டு வரும் நிழல்தானே
நீயாவது என்னுடன் இருந்து விட்டுப் போ!

எம். குலேந்திரன்
(A/L 95 உயிரியற் பிரிவு)

* * *

# அறிவுள்ள அஞ்ஞானி

இவன் -
ஆஸ்தீக விஞ்ஞானி
அறிவுள்ள அஞ்ஞானி
சாஸ்திரம் பார்த்தான்
சந்திரனிற்கு செல்ல
சந்திதரன் பாவமாம்
வளர்ந்து தேய்கின்றானாம்
யாரோ சாபமாம் - இவன்
ஆஸ்தீக விஞ்ஞானி
அறிவுள்ள அஞ்ஞானி.

நாள்கோள் பார்த்தான்
வளர் பிறை தேய் பிறையாம்
அட்டமியாம் நவமியாம்
இன்னும் இத்தனையோ
திங்கள் முழுதில்
திங்கள் செல்ல

ஓர் நாளில்லை - இவன்
ஆஸ்தீக விஞ்ஞானி
அறிவுள்ள அஞ்ஞானி
என்றோ நல்ல நாள்
அன்றோ அமாவாசை
எங்கு செல்வேன்
என்கின்றான்
அந்தோ பரிதாபம் - இவன்
ஆஸ்தீக விஞ்ஞானி
அறிவுள்ள அஞ்ஞானி

மு. பிரதீப்
(A/L 95) கணிதப்பிரிவு

★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலியை வென்ற பசுக்கள்

ஒரு காட்டிலே பசுக்கள் கூட்டமாக வாழ்ந்தன. அடுத்த காட்டிலிருந்த ஒரு புலி ஒரு நாளைக்கு ஒரு பசுவைக் கொன்று தின்பதை அறிந்தன. பசுக்கள் ஒரு கூட்டமாகக் கூடிப் பேசின. அப்போது ஒரு முதுமை பசு சொன்னது நான் சொல்லும்படி செய்யுங்கள் என்றது.

அதன் படியே ஒரு பசுவை தனியாக நிற்கச் சொன்னது. அப்போது புலிவரும். அப்போது நாங்கள் புலிமீது பாய்ந்து எல்லோரும் குத்துவோம் என்றது. எல்லோரும் சேர்ந்து அப்படியே செய்வோம் என்றார்கள். அப்படியே செய்தார்கள்.

புலி வந்தது. எல்லாப் பசுக்களும் புலிமேல் பாய்ந்தன. பசுக்களின் கொம்பினால் குத்தின. வேதனையுடன் புலி பாரம் தாங்காமல் இறந்தது. பசுக்கள் மகிழ்ந்தன.

"ஒற்றுமையே பலம் வல்லவர்"

ச. யோகானந்தராஜா.
ஆண்டு 3 D

◆ ◆ ◆ ◆

# தற்பெருமை கூடாது

ஒரு காட்டில் சேவல் ஒன்றும், வாத்து ஒன்றும் ஒன்றாக வசித்து வந்தன. ஒரு நாள் இருவருக்கும் நீண்ட தூரம் காட்டுக்குள்ளேயே பயணம் செல்ல வேண்டி ஏற்பட்டது. அன்று அதிகாலையிலேயே சேவலும் வாத்தும் பயணத்தை ஆரம்பித்தன. வழி நெடுகிலும் சேவல் தன்னைப் பற்றி பெருமையடித்துக் கொண்டு நடந்தது. வாத்தின் குரலையும் அதன் கால்களையும் சேவல் ஏளனமாகக் கதைத்தது. எனது குரலைப் பார் நான் அதிகாலையிலே எழுந்து அழகாகக் கூவி மக்களை நித்திரையிலிருந்து எழுப்புகின்றேன். வலிமையான அழகான எனது சிறகுகளைப் பார் என்று கூறிய சேவல் தனது இரு இறகுகளையும் பலமாக அடிக்க ஒரு முறை பெருமையாகக் கூவியது. வாத்து வெட்கத்தால் தலைகுனிந்தது. சேவலிடம் இருக்கும் திறமைகள் தன்னிடம் இல்லையே என்று மனம் வருந்தியது. சிறிது தூரம் செல்ல இருவருக்கும் பெரியதொரு ஆற்றைக் கடந்து செல்ல வேண்டி ஏற்பட்டது. சிறிது நேரம் யோசித்த வாத்து பயமின்றித் தண்ணீரில் குதித்துக் கரையை நோக்கி நீந்த ஆரம்பித்தது. சேவலால் ஒன்றும் செய்ய முடியவில்லை. வாத்தை ஏளனமாகக் கருதிப் பெருமையடித்தது தவறு என்பது அதற்குப் புரிந்தது. என்றாலும் ஆற்றின் கரைக்குப் பறந்து செல்லத் தயாரானது. இரண்டு சிறகுகளையும் அடித்து ஆற்றின் மேலாகக் கொஞ்ச தூரம் பறந்தது. பிறகு பறக்க முடியாமல் தண்ணீரில் "தொப்" என்று விழுந்தது. சேவலுக்கு மூச்சுத் திணறியது. பயத்தால் கூச்சலிட்டது. இதனைக் கண்ட வாத்து அவசரமாக நீந்தி வந்து சேவலைத் தன் முதுகில் ஏந்தி கரைக்குக் கொண்டு சென்றது. சேவல் தனக்கு நீந்தத் தெரியாததை எண்ணி வெட்கத்தால் தலை குனிந்தது. சேவல் தன்னைப் பெருமையாகப் பேசி வாத்தினை ஏளனமாகக் கருதியதை எண்ணி மனம் வருந்தியது.

நிரஞ்சன் சேவியர்
ஆண்டு 4D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடி குடியைக் கெடுக்கும்

ஓர் ஊரில் கண்ணம்மா என்ற கிழவி வசித்து வந்தாள். அவளுக்கு அருண், சசி, சதீஸ் என மூன்று ஆண் பிள்ளைகள் இருந்தனர். அவர்கள் மூவரும் வித்தியாசமான குணங்களை உடையவர்கள். அருண் மிகுந்த பேராசை உடையவன். சசி போட்டியும் பொறாமையும் மிக்கவன். அதிகமாகக் குடிக்கும் பழக்கம் கொண்டவன். ஆனால் சதிஸ் நல்ல ஒழுக்கமான குணங்களை உடையவன். கண்ணம்மா தனக்கிருக்கும் சொத்துகளை மூவருக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்க விரும்பினாள். இதன்படி தனது காணியைப் பங்கிட்டு ஒவ்வொரு பிள்ளைக்கும் பதினைந்து ஏக்கர் நிலத்தை வழங்கினாள்.

அருணும், சசியும் தமக்குக் கிடைத்த நிலத்தை பயன்படுத்தாது இருந்து விட்டார்கள். அதனால் அவர்களது காணி காடாகக் காட்சியளித்தது. ஆனால் சதீஸ் தனக்குக் கிடைத்த காணியில் விவசாயம் செய்யத் தொடங்கினான். அதனால் அவனுக்கு நல்ல வருமானம் கிடைத்துக் கொண்டிருந்தது. சசி அடிக்கடி அருணிடம் வந்து பண உதவி பெற்றுக்கொண்டு, அந்தப் பணத்தில் குடித்துக் கொண்டும், மனைவி மக்களைத் துன்புறுத்திக் கொண்டுமிருந்தான், ஆனால் இந்த விடயத்தை சதீஸ் அறிந்திருக்கவில்லை. அதேபோல் அருணும் சதீஸின் முன்னேற்றதைக் கண்டு பொறாமைப்படுவான். அவனும் குடித்து விட்டு வந்து சதீஸின் விவசாயத்திற்கு இடையூறு விளைவித்து வந்தான்.

இவ்வாறாக இருக்கும் போது அவர்களின் தாய் நோய்வாய்ப்பட்டாள். அவ்வேளையில் சதீஸ் மட்டுமே தாயைக் கவனித்து வந்தான். அத்துடன் தனது தாயாரின் விருப்பப்படி ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்து விவாகம் செய்தான். சிறிது காலத்தில் அவர்களது தாயார் இறந்து விட்டார். சதீஸ் பெரும் துயரடைந்தான் ஆனால் மற்றைய இருவரும் கவலைப்படவேயில்லை.

இப்படியிருக்கும் போது பேராசை காரணமாக அருண் திருடனாக மாறினான்; அவன் பெரிய திருட்டு வேளையில் ஈடுபட்டிருக்கும் போது பிடிபட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப் பட்டான்; அவனுக்கு ஆயுள் தண்டனை கிடைத்தது. சசியும் குடி காரணமாக புற்று நோய்க்கு ஆளாகி மரணப்படுக்கையிலிருந்தான். எனவே அவனது மனைவி தொழில் செய்தே தனது பிள்ளைகளைக் காப்பற்ற வேண்டியிருந்தது. ஆனால் சதீஸ் தனது வருமானத்தைப் பெருக்கிக் கொண்டு தனது குடும்பத்துடன் வளமாக வாழ்ந்தான்.

இந்தக் கதை எமக்கு ஒரு படிப்பினை உணர்த்துகிறது, என நான் நம்புகிறேன்.

ஆக்கம்
க. நிரஞ்சன்
ஆண்டு 7 T

★ ★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசம்

சேறு படிந்த செருப்பு அணியாத அவனது கால்களை மரக்கறிகள் வாங்கி வந்த பொலீத்தீன்பைகள் சர சர வென உரசிக் கொண்டிருந்தன.

அவன் எட்டு வயதை எட்டிப் பிடித்துக் கொண்டிருந்தான். சின்ன வயது தான் அவனுக்கு. ஆனால் இமயம் போன்ற சோகம் அவனது நெஞ்சில் நிறைந்திருந்தது. கையில் இருந்த சுமையைவிட அந்த சோக சுமை அவனை வெகுவாக வாட்டியது. மொட்டில்லாத மலருக்குள் என்ன தான் இவ்வளவு பெரிய மண்ணுக்கு உரமாகும் இதழின் சோகம்.

ஆம் அவன் பெற்றோரை பிரிந்து வந்திருந்தான். இல்லை; பிரித்து கொண்டு வரப்பட்டிருந்தான் "அம்மா நீங்க கவலப்படாதீங்க... உங்க புள்ளய எங்க புள்ளையா நெனச்சி வைச்சிக்கிறோம். என்ட சின்னப் புள்ளயோட விளையாடுறது தான் உங்க புள்ளைட வேல. மற்றப்படி ஒன்னுமே இல்ல" என்று அவனது துரை அன்று அவனை அழைத்து வரும் போது அவனது தாயிடம் சொன்ன பல்லவி அவனது இதயத்தை இன்னும் இடியாய்த்தாக்கிக் கொண்டிருந்தது.

" ஏன்? இந்தப் பெரியவங்க எப்போதும் பொய்யே சொல்றாங்க. அன்னைக்கு சொன்னதென்ன? இன்னைக்கு நடக்கிறதென்ன? என்று அவனது வேலைகளை நினைத்து சோர்ந்து போனான்.

எவருக்கும் சோகங்களை மறந்திட பகற்கனவும், கற்பனைவானமும் உதவும். அவனும் சொக்லட்டும், விளையாட்டுப் பொருள்களுமாக சின்னஞ் சின்னக் கனவுகளில் திளைத்துப் போனான்.

முற்றத்து குரோட்டனில் இருந்த குருவிக் கூடு அவனது சின்ன நெஞ்சத்தை வெகுவாக நிரப்பியது "கிச்சி, கிச்சி" என கூவிக் கொண்டு சந்தோசமாக அங்குமிங்கும் பறக்கும் அந்த தாய்க் குருவி; தாய் வரும் போது பெரிதாய் வாயைத் திறந்து கீச்சிடும் குஞ்சுகள்" இவற்றைப் பார்த்துக் கொண்டே சின்னவனின் பொழுது கழியும். அந்த குருவி கூடு கட்ட ஆரம்பித்த நாள் முதல் முட்டையிட்டு; அரும்புக் குஞ்சுகளை ஊட்டி வளர்க்கும் இந்த நாள்வரை அவன் அக்குருவிகளுடன் பேசுவான்.

"அம்மாக்குருவி! அம்மாக்குருவி! நீ போய் என்ட அம்மாக்கிட்ட என்னக் கூட்டிப் போகச் சொல்லு. இங்க எவ்வளவு உண்ணக் குடிக்க இருந்தாலும் அம்மா கூட இருக்கிற மாதிரி இல்லைன்னு போய்ச் சொல்லு" என்பான். என்ன கிடைத்தாலும் பாசம் என்ற ஒன்று கிடைக்கவில்லை என்பதை அவன், அவன் மொழியில் அப்படித்தான் சொல்லுவான். அவன் வீட்டில் இருக்கும் போது "குறும்புகள் செய்யாதே , சரியாச் சாப்பிடு இல்லைன்னா வேலைக்கி போயிருக்கிற அப்பாக்கிட்ட குருவி போய் சொல்லும். அப்போ அப்பா வரும் போது உனக்கு ஒன்னும் கொண்டு வர மாட்டார்" என்று அவனது தாய் அவனை அடக்கி வைப்பாள். இது "குருவிகள் தூது போகும்" என்ற ஒரு எண்ணத்தை அந்தச் சின்னவன் சிந்தையில் பதித்தது. இப்போது அவன் குருவிகள் மூலம் தாய்க்கு தூதனுப்ப முற்பட்டான்.

ஏதோ சிந்தனையில் வீட்டை அடைந்து விட்டான். முதலாளி அம்மாவிடம் கணக்குத் துண்டையும் தாளில் சுற்றப்பட்டிருந்த மீதிப் பணத்தையும் கொடுத்து விட்டு தோட்டத்தில் இருந்த பெஞ்சில் போய் உட்கார்ந்தான். சட்டென்று அந்த குருவிக் கூடு அவனது கண்ணில் பட்டது.

கீச், கீச் என சின்னக் குஞ்சுகள் கத்திக் கொண்டிருந்தன. அன்பாக அதை நெருங்கினான். தாய் பறவை தீனி கொடுப்பதை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். அந்தத் தாய்ப் பறவை ஆசையாய் தீனி கொடுப்பதும் அன்பாய் குஞ்சுகளை அரவணைப்பதும் அவனது சின்ன உள்ளத்தில் ஒரு பெரிய சோகத்தின்; வெறுமையின்; விரக்தியின் ஆதங்கத்தை ஏற்படுத்தியது. அழுகின்ற குழந்தை ஒரு தாயின் அன்பான அரவணைப்பில் அழுகையை நிறுத்திவிடும்; வயது, இன, மத, பால் வேறுபாடுகளின்றி மனிதர்கள் ஒன்றுறப் பிணைவது பாசத்தினால் மட்டுமே. அந்த உன்னத பாசம்; அன்பு அவனுக்கு கிடைக்கவில்லை அவனது விழியோரத்திலிருந்து முத்தாய் ஒரு கண்ணீர்த்துளி விழுந்து தெறித்தது.

ஹிம்சையின் அடிப்படை விரக்தியும், வெறுமையும், வாழ்க்கை பற்றிய ஆதங்கமுமே; அவனையும் அந்த விரக்தி விட்டு வைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அடே குருவி நான் சொன்னதை போய் யெண்ட அம்மாக்கிட்ட சொல்லல. சொல்லியிருந்தா அவ என்னப் பாக்க வராம இருக்க மாட்டா; என்ன மாதிரி உண்ட புள்ளைகளும் கொஞ்சம் அம்மா இல்லாம இருந்து பாக்கட்டுமே -யேன் .... நீயும் பிள்ளைகள் இல்லாம இருந்து பாரேன் எவ்வளவு கஷ்டம்னு" என்று எண்ணிக் கொண்டான்.

அவன் துரிதமாக செயற்பட்டான். சட்டென்று குருவிக் கூட்டை எடுத்தான் குஞ்சுகள் பயத்தால் வீரிட்டுக் கத்தின. தாய்க் குருவி அங்குமிங்குமாக ஆவேசமாக கீச்சிட்டு கீச்சிட்டு அவனது தலைக்கு மேலே பறந்தது. கூட்டைக் கொண்டு போய் வீட்டினுள் ஒரு மூலையில் வைத்தான்.

அந்தத் தாய் குருவியினதும் மகட் குருவியினதும் கீச்சிடல் அவன் வீட்டில் இருந்து வரும் போது அம்மா கதறியதையும் தான் மறுத்து அடம் பிடித்து பின் மருண்டு போய் காரில் வந்ததையும் அவனுக்கு நினைவூட்டியது. ஆனால் ஒரு குற்றவாளிக்கு தண்டனை அளித்த திருப்தியில் அவனது மனம் இருந்தது. நியாயமாய் தீர்ப்பு வழங்கி விட்டு கம்பீர மாய் அமர்ந்திருக்கும் நீதிபதிபோல் அவன் இருந்தான். கண்கள் மட்டும் கலங்கித்தான் இருந்தன.

"படார்" என்று அவனது முதுகில் முதலாளி அம்மாவின் கை படவே மிரண்டு போய் திரும்பினான் "டேய் ... யேண்டா அந்தக் குருவிக் கூட்டைக் கொண்டு போய் வீட்டினுள் வைச்ச .... கடவுள் ஒன்ட மனசில கருணைய படைக்கலியா?..... குருவிக் கூட்ட கலச்ச பாவி" என்றவாறே கையை ஓங்கினார்.

அம்மா, ...... அம்மா ...... அடிக்காதீங்க, நா.நா என்னக் கூட்டிப்போக வரும்படி அம்மாட்டச் சொ..... சொல்லச் சொல்லி இந்த குருவிக்கிட்ட சொன்னே .... அது சொல்லல அம்மா இல்லாம நா படுற பாட்ட இந்த..... குஞ்சுகளும் நா இல் ... இல்லாம படுர பாட்ட இந்தக் குருவியும் தெரிஞ்சிக்கனும் அது தான்....." அவன் முடிக்கவில்லை ஓங்கிய அந்த அம்மாவின் கைகள் அசையவில்லை.

"சரி சரி .. இந்த குஞ்சுகளைக் கொண்டு போய் இருந்த இடத்திலேயே வைத்து விடு, மாலை வீட்டுக்குப் போவதற்கு உண்ட சாமான்களை செட் பண்ணி வை" என்றார்.

குருவிக் குஞ்சுகளை தாயுடன் சேர்த்தான். அந்தக் குஞ்சுகளின் மகிழ்ச்சி அவனது முகத்தில் இழையோடியது. தாய்க் குருவியின் மகிழ்ச்சியை அவனது அம்மாவின் முகத்தில் காணும் நேரம் வரும் வரை காத்திருக்கலானான்.

"என்னை என் குழந்தையிடமிருந்து பிரித்து எனக்கு தரப்பட வேண்டிய தண்டனையை பாவப்பட்ட அந்தக் குருவிகளுக்கு கொடுத்து விட்டான். கடவுளே இவ்வளவு சொற்ப வேளை இந்தக் குருவிக் குஞ்சுகளை தாயிடம் இருந்து பிரித்ததை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை; எனது பிள்ளைகள் பிரிந்திருந்தால் எப்படியிருந்திருக்கும்" என்று அந்த அம்மாவின் உள்ளம் தவித்தது.

பாசப் பிணைப்புகள் அற்பமானவைகள் அல்ல, உடையக் கூடியவைகளுமல்ல. அதன் பிரிவின் துயர் பிரிந்தவர்களுக்குத்தான் தெரியும் என்றதொரு அடிப்படை அவரது உள்ளத்தில் தோன்றியது.

தாய் பிள்ளை பாசத்தைப் புரிந்தவன் அதில் எந்த ஒருவரையும் கணவன் மனைவி பாசத்தை புரிந்தவன் அதில் எந்த ஒருவரையும்; நாட்டின் மீது ஒருவன் கொண்ட பாசத்தை புரிந்தவன் அவனை அந்த நாட்டைவிட்டும் என்று பாசப் பிணைப்புகளை புரிந்தவன் அதைக் கொண்ட யாரையும் யாரிலிருந்தும் பிரிக்க முயலமாட்டான்; உண்மையான பாசத்தை புரிந்தவர் இந்த உலகில் யாரையும் அழிக்க முற்பட மாட்டார்.

எனவே சமாதானத்தை ஏற்படுத்த பேச்சு வார்த்தைகள் அல்ல மனித பாசம் புரியப்பட வேண்டும்.

அமைதியின் அடிப்படை பாசம் புரியப்படுதலே; அந்த முதலாளி அம்மா விரை வாகத் தயாரானார், அந்த பையனை வீட்டில் கொண்டு போய் சேர்க்க.

ஆக்கம்

**H.C. ஹிறோஸ் கான்**

**A / L 97 விஞ்ஞானப்பிரிவு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசையினால் மயங்கினான்

## (சிறுகதை)

கண்களில் நீர் ததும்ப சின்னமாக தொங்க விடப்பட்ட தன் அன்புக் கனவனின் படத்தை ஏறெடுத்த வண்ணமாய் ஏங்கிக் கொண்டிருந்தாள் ரோஜா. அவளை அறியாமலே அவள் விழிகளிலிருந்து கண்ணீர் நீரோட்டமாய் வழிகின்றது. என்ன செய்வது. இறைவன் விட்ட விதி அது. தன்னை பிரிந்த கணவனின் உடலை சமாதியில் இட்டு வந்து சில மணித்தியாலங்களே ஆகிவிட்டன. ஐம்பது வயதைத்தாண்டி முதிர் வயதின் ஆரம்ப துளிராய் நின்ற ரோஜாவுக்கு மூன்று பிள்ளைகள் மட்டுமே. மூத்த மகன் ரவி இரண்டாவது மகள் செவ்வந்தி மூன்றாவது மகன் நடக்கப்பயிலுகின்ற சின்னஞ் சிறு கொழுந்து. பெயர் சந்திரன். ஏழை எனும் வம்சத்தில் வீழ்ந்த இவர்கள் அன்றன்று கூலிவேலையின் மூலம் தன் ஒரு சாண் வயிற்றை நிரப்பிக் கொண்டனர். இப்பொழுது உழைத்துப் போடவும் தலைவன் இல்லை. திசை மாறிய பறவைகளாய் தவித்தது இக்குடும்பம். மூத்த மகனை நம்பியே தாய் ரோஜா வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. ரவி திடங்கொண்டு தன் குடும்ப பொறுப்பை ஏற்க முன்வந்தவனாய் நின்றான்.

தகப்பனின் உதவியால் சாதாரண தரம் வரை படித்து பரீட்சையின் பின் விளைவை நோக்கி கொண்டிருந்த அவன் இன்று முதல் கல்வி எனும் பட்டத்திற்கு கரை கண்டவனாய் ஆகிவிட்டான். தனக்குத் தெரிந்தவர்களிடம் கூறி தன் தகுதிக்கு ஏற்ற வேலையொன்றைத் தேடிக் கொண்டான். தபாற்காரன் எனும் பட்டத்துடன் தன் குடிசையின் அண்மையில் உள்ள தபாற் கந்தோரின் பெரியவரின் உதவியால் இந்த உத்தியோகத்தைப் பெற்றுக் கொண்டான். வேலைப் பெற்ற இவன் இன்று முதல் குடும்ப பொறுப்பை சிறப்பே கவனித்தான். தன் தங்கை செவ்வந்தியைப் படிக்க வைக்க வேண்டும் என கற்பனை செய்தான். சிறியவன் தம்பி. அவனையும் ஆளாக்க வேண்டும் என சிந்தித்து, நல்வழியிலே சிறப்பாக வேலை செய்தான். தாய் ரோஜாவின் மனம் குளிர்ந்தது. தன் மகன் மீது ஆசீர்வாதங்களைப் பொழிந்தாள். தினமும் தாயின் பாதங்களை நமஸ்காரஞ் செய்து விட்டே வேலைக்குச் செல்வான் ரவி. இப்படியாக நாட்கள் வாரங்களாகவும், வாரங்கள் மாதங்களாகவும், மாதங்கள் வருடங்களாகவும் நகர்ந்தன.

ரவி தனது சொந்த முயற்சியால், மாதாமாதம் பெறும் சிறிய சம்பளத்தின் மூலம் குடும்ப கௌரவத்தைப் பாதுகாத்து சாதாரண நிலைக்குக் கொண்டு வந்து விட்டான். தன் தங்கை செவ்வந்தியை நல்ல ஒரு பையனுக்கு சாதாரணமாக கல்யாணம் செய்து வைத்தான். தன் தம்பி சந்திரன் இன்னும் பாடசாலை வாழ்க்கையை அநுபவிக்கிறான். இப்படியிருக்க ரவியுடன் ஓர் நண்பன் இணைந்தான். அவன் சற்று பணக்காரன். "ரவி சிறிது சிறிதாக முன்னேறுவதைவிட ஒரே தடவையில் முன்னேற வழியுண்டு" என்றான் ரவியும் ஏழையல்லவா. அவன் தன் நண்பனின் ஆசை வார்த்தைக்கு மயங்கி தன் நண்பனான ராஜாவின் படி செய்ய ஆரம்பித்தான். தன் சிறிய தபால் காரன் என்ற தொழிலை வெறுத்தான். அதை ரத்து செய்து விட்டு வீட்டில் இருந்தான். இரவு வேலையில் மட்டுமே இவனுக்கு தொழில் உண்டு.

தன் நண்பன் இரவிலே காரில் வந்து ரவியைக் கூட்டிச் செல்வான்.. எங்கே செல்கிறான், என்ன செய்கிறான் என்பது தன் அன்னை ரோஜாவுக்கு தெரியாது. ஒவ்வொரு நாளும் இரவு எட்டு மணியளவில் சென்று விடியற் காலை நான்கு மணிக்கு வந்து விடுவான். முன்பைப் போலன்றி இப்பொழுது நாளுக்கு நாள் முன்னேறினான். வீடு பெரிதாகக் கட்டப்பட்டது. சகல வசதிகளைக் கொண்ட மாடி மனையாக மாறியது அந்த குடிசை. சகலருக்கும் ஆச்சரியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென ஒரு நாள் அந்த கிராமத்திற்கு ஒரு பொலிசுஜீப் வண்டி வந்து நின்றது. மாடி மனையினை நோக்கி நடந்த அந்த பொலிசுகாரன் ரவியின் வீடு இதுதானா? என்றான். ரவியின் தாய் ரோஜா மெல்ல மெல்ல வந்து யாரைத் தேடுகின்றீர்கள் என வினவினாள். ரவியின் வீடு இது தானே? ஆமாம் ஏன்? அவர் பொலிசில் பிடிபட்டு விட்டார் இப்பொழுது சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் வந்து பாருங்கள் என தகவல் கிடைத்தது ரோஜாவுக்கு. மனம்வருந்தி அலறிய தாய் தன் இளைய மகனுடன் பொலிசு நிலையம் போனாள். அங்கே தாயின் மனம் பட்ட பாடு அவள் மட்டுமே அறிவாள். தன் நண்பனின் வார்த்தையால் வஞ்சிக்கப்பட்ட ரவி, இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சையாய் தபாற்காரனிலிருந்து கள்ளக் கடத்தல் தொழிலில் ஈடுபட்டு தற்பொழுது சிறையிலே தன் சுகத்தை கழிக்கவேண்டி வந்து விட்டது.

நல்ல உத்தமனாய் வாழ்ந்த ரவி ஏமாற்றப்பட்டான். ஆசை அவனை மயக்கிற்று. தன் வீட்டின் சொத்துக்களைவிற்று சிறையிலிருந்து மீட்கப்பட்டான். ரவி பழைய நிலைப்படி சாதாரண தொழிலைப் பெற்று திருந்தியவனாய் வாழத் தொடங்கினான் அன்று மாலை வானொலியிலே கலந்து வந்த இனிய கானம் அவன் மனதின் கலக்கத்தை ஆறுதலடையச் செய்தது. இக்கரைக்கு அக்கரை பச்சை என்றும் இக் கரைக்கு அக்கரை பச்சை....

ஆக்கம்
**D. மோசஸ்**
**(A/L 96 வர்த்தகம்)**

❄ ❄ ❄ ❄

# சிந்தனைகள் சிந்திக்கத் தொடங்கியபோது....

ரகுவிற்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. வந்த வேகத்தில் சப்பாத்தைக் கழற்றி யெறிந்தான். உள்ளே ஏதோ வேலையாக இருந்த அவன் தாய் சத்தம் கேட்டு வெளியே வந்தாள். "அம்மா இனிமேல் நான் ஸ்கூல் போகப் போறதில்லை" என்று கோபத்துடன் சொன்னான் ரகு. இதைக் கேட்ட தாயின் முகத்தில் ஆயிரம் கேள்விக் குறிகள். "ஏன் மகன் என்ன நடந்தது?" என்று அவள் கேட்டாள். "எத்தன நாளைக்குத் தான் இந்த பழைய சம்பாத்தையே போட்டுக் கொண்டு ஸ்கூல் போறது. எல்லோரும் நல்ல சப்பாத்தோட வாரநேரம் நான் மட்டும் தான் இப்படி பழைய சப்பாத்தைப் போடுறேன். எத்தனையோ தரம் நானும் புதுச்சப்பாத்து வாங்கித் தர சொல்லிட்டேன். நீ வாங்கித் தரயில்லை. இனிமே புதுச்சப்பாத்து இல்லாம நான் ஸ்கூல் போகப் போற தில்லை" என்று கூறிய ரகுவின் குரலிலே ஒரு நாளும் இல்லாத உறுதியும், கோபமும் தொனிப்பது கண்டு அவள் மலைத்துத் தான் போனாள்.

அந்தத்தாய் என்ன செய்வது? சிறுவயதிலேயே ரகுவின் தந்தை விபத்திலே இறந்து போக குடும்பப் பாரத்தை சுமக்க வேண்டி நிலை தாய்க்கு ஏற்பட்டது. அவளும் ஒரு கைத்தறி ஆலையிலே வேலை செய்து கிடைக்கும் சிறிய வருமானத்தைக் கொண்டு மிகுந்த சிரமத்துடன் குடும்பத்தை நடத்தி வந்தாள். அவளது ஆசை, கனவு, எல்லாம் ரகுவை நன்கு படிக்கவைத்து ஒரு நல்லநிலைக்கு உயர்த்த வேண்டும் என்பது தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்காகவே அவனை தன் வசதிக்கும் மீறி பெரிய கல்லூரியில் படிக்கவைத்தாள். அங்கு படிப்பவர்கள் எல்லாமே வசதியான வீட்டுப்பிள்ளைகள், ரகுவைத் தவிர. ரகு அங்கே க.பொ.த. சாதாரண தரத்தில் படித்துக் கொண்டு இருந்தான். ரகு ஒரு சாதாரண பாடசாலையிலே படித்தால் இந்தச் சப்பாத்தையே அவன் போட்டுக் கொண்டு போயிருப்பான். ஆனால் அவன் படிப்பது பெரிய கல்லூரியாயிற்றே. அங்கே எல்லோரும் அழகாக வரும்போது ரகுவிற்கு மட்டும் ஆசைகள் வராதா? எத்தனை நாளைக்குத் தான் அவன் சகமாணவர்களின் கேலிப்பார்வைகளுக்கும், நக்கல் பேச்சுக்களுக்கும் ஆளாவது? அதனால் தான் புதுச்சப்பாத்து இல்லாமல் பாடசாலை செல்லமுடியாது என அவன் பிடிவாதம் பிடித்தான்.

ஆனால் ரகுவின் ஆசைகள், தேவைகள் எல்லாவற்றையும் பூர்த்தி செய்ய அந்த ஏழைத்தாயால் முடியுமா? மகனின் முகத்தை அனுதாபத்தோடு பார்த்தாள் அவள் "மகன் நாளைக்கு மட்டும் இந்த சப்பாத்த போட்டுக்கிட்டு ஸ்கூல் போ. நாளைக்கே நான் எங்கட முதலாளிகிட்ட கடனா கொஞ்சம் காசுகேட்டு புதுச்சப்பாத்து வாங்கித்தாறேன். அது வரைக்கும் பொறுமையாக இரு" என்று சொன்னாள் அவள் ரகு அமைதியாக இருந்தான். அவனது மௌனம் சம்மதத்திற்கு அறிகுறியாகத் தெரிந்தது.

அடுத்தநாட்காலை, புதுச்சப்பாத்து எப்படியும் வரும் என்ற நம்பிக்கையில், பழைய பாடசாலை நோக்கிப் புறப்பட்டான் ரகு, கல்லூரி வாசலிலே ஒரு கூட்டம் இருப்பதைக் கண்டு என்னவென்று அறியும் ஆவலில் எட்டிப் பார்த்தான். அங்கு அவன் கண்ட காட்சி அவனையே நிலைகுலையச் செய்தது. ஒரு பதினாறு வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒரு மேளத்தை வைத்துக் கொண்டு பாட்டுப் பாடி பிச்சையெடுத்துக் கொண்டிருந்தான். ஆனால் ரகு அதிர்ச்சியடைந்தது. அதைக் கண்டு அல்ல அவனது கால்களைக் கண்டு. ஆம் அவனுக்கு முழங்காலுக்கு கீழே இரண்டு கால்களும் இருக்கவில்லை. விபத்தினால் இரண்டு கால்களையும் இழந்திருந்தான் அவன். "கடவுளே! என்ன கொடுமை இது. வாழ வேண்டிய ஒரு இளைஞனின் கால்களைப் பறித்து இப்படி முடமாக்கிவிட்டாயே. ஏன் இப்படிச் சோதனை செய்கிறாய்?" என்று அந்த இளைஞனுக்காக ரகுவின் உள்ளம் இரங்கியது. "நாங்கள் கால்களுக்குப் போட சப்பாத்து இல்லை என்று கவலைப்படுகிறோம். ஆனால் இன்று எத்தனையோ மனிதர்கள் கால்களே இல்லாமல் வாழ்க்கையை நடத்துகிறார்களே. அவர்களைப் பற்றி நான் கவலைப்பட்டேனா? இத்தனை நாளும் போலிக் கௌரவத்திற்கும், வெறும் ஆடம்பரத்திற்கும் ஆசைப்பட்டு வாழ்க்கை நடத்தினேன் இந்த கால்களில்லாத இளைஞன் தான் என் கண்களைத் திறந்தான்" என்று சிந்தித்தான் ரகு.

பாடசாலை முடிந்து வீடு நோக்கி வந்தான் ரகு. வாசலிலே அவன் தாய் நின்றுகொண்டிருந்தாள். அவள் முகத்திலே கவலையின் சாயங்கள். "ரகு முதலாளி கடன் தர ஏலாது என்று சொல்லிட்டார்" என்று கவலையுடன் கூறினாள் அவள். உடனே ரகு "அம்மா புதுச்சப்பாத்துக்கு ஒன்றும் இப்ப அவசரமில்லை. சப்பாத்து பிறகு வாங்கலாம்" என்று சொல்லிவிட்டு உள்ளே போனான். மகனின் திடீர் மனமாற்றத்தைக் கண்ட தாய் அப்படியே அதிர்ச்சியில் உறைந்து போனாள்.

ஆக்கம்

**பிரிஜேஷ் பார்த்திபன்**
**(A/L 95)**

* * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பார்ப்புக்கள்

அப்பப்பா! இன்னும் அந்த சத்தம் நிற்கவில்லை அது வடகீழ்பருவக்காற்றுக் காலமாகையால், மேகங்கள் அந்தக் குண்டுச்சத்தத்தையும் துப்பாக்கிச் சத்தத்தையும் கேட்டு கண்ணீர் விடுவதுபோல் மழையை சொரிந்து கொண்டிருந்தன. அன்று தவளைப் பாய்ச்சல் (பூநகரி யுத்தம்) சற்று ஓய்ந்திருந்தது. பாதுகாப்புப்படையினரில் காயமடைந்தோர் முகாமுக்கு கொண்டு வரப்பட்டனர். ஐயோ! அவர்களைப் பார்க்கவே சகிக்கவில்லை அவ்வளவு அகோரமாக இருந்தனர்.

காயமடைந்த வீரர்களுள் ரத்னபாலாவும் ஒருவன் தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு மருந்து போட்டுவிட்டு படுக்கையில் சென்று வீழ்ந்தான். "தான் ஏன் இவ்வாறு சிர மப்படவேண்டும்? நானும் என் இல்லத்தாருடன் சேர்ந்து வாழ்ந்தால் எவ்வளவு நல்லாய் இருக்கும்" என்று பல கேள்விகளை மனதுக்குள் கேட்டுக்கொண்டான். அவனின் நினைவலைகள் பின்னோக்கிச் சென்றன.

சுமார் மூன்று வருடங்களுக்கு முன் ரத்னபால உயர்தரப்பரீட்சைக்கு தோற்றி விட்டு பரீட்சைப்பெறுபேறுகளுக்காக காத்திருந்தான். ஒரு நாள் அவனுடைய தந்தை பீரிஸ் மிகவும் சோகமாக வீட்டிற்கு வந்து தன் மனைவியை அழைத்து இன்னும் ஒரு மாதத்தில் தான் ஓய்வுபெறப்போவதாகக் கூறினார். அன்றிரவு ரத்னபாலாவை அவன் தந்தை அழைத்து தான் ஓய்வு பெறப் போகும் செய்தியைக் கூறி, "தான் குடும்பப் பொறுப்பை சுமக்க வேண்டும், எனவே நீ பரீட்சைப் பெறுபேறு வரும்வரை காத்திருக்காது ஏதாவது வேலை தேடு எனக் கூறினார். அன்று முதல் அவன் சுமார் ஒருவருட காலமாக வேலை தேடிக் கொண்டுதான் இருந்தான்.

அவனுடைய வீட்டில் பொருளாதார நெருக்கடி அதிகமாகக் காணப்பட்டது. அவனது தங்கை நிலந்தியும் திருமண வயதை எட்டிவிட்டாள். பென்சன் பணத்தில் வாழ்க்கைப் படகைக் கொண்டு செல்வது மிகவும் சிரமமாக இருந்தது. அவர்களுக்கு சொந்த வீடு கூட இருக்கவில்லை. காலம் செல்லச் செல்ல வீட்டில் ரத்னபாலா ஒரு சுமையாகவே கருதப்பட்டான் மறைமுகமாகவே அவனது பெற்றோர் அவனுக்கு வேலையில்லை என்பதை சுட்டிக் காட்டத்தொடங்கினார்கள் அவர்களின் சுடு சொற் களினால் பாதிக்கப்பட்ட ரத்னபாலா தனது தங்கைக்கு கடிதம் எழுதி வைத்துவிட்டு வீட்டைவிட்டு வெளியேறினான். அவன் வீட்டை விட்டு வெளியேறிய செய்தியைக் கேட்ட அவனது பெற்றோர் கதறியழுதனர். எங்கு தேடியும் அவர்களால் அவனைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

ரத்னபாலா வீட்டை விட்டு வெளியேறி ஆறுமாதத்திற்குப் பின்பு தான் பாதுகாப்புப் படையில் சேர்ந்துள்ளதாகவும், தற்போது பூநகரி முகாமில் தங்கியிருப்பதாகவும் தன்னைப் பற்றி கவலைப்பட வேண்டாமெனவும் எழுதியிருந்தான். மாதா மாதம் ஐயாயிரம் ரூபா பணத்தை தனது வீட்டிற்கு அனுப்பி வைத்தான். பழைய நினைவிலிருந்து மீண்ட ரத்னபாலா தன் நிலையை நினைத்துச் சிரித்தான். பின் அயர்ந்து தூங்கிவிட்டான். அவனை தாலாட்டுவது போல் துப்பாக்கிச் சத்தங்கள் தொடர்ந்து கேட்டன.

அடுத்தநாட் காலை யுத்தம் முடிவடைந்தது. ரத்னபாலாவிற்கு அவனுடைய தந்தையிடமிருந்து, நிலந்தியின் திருமணத்திற்கு நாள் குறிக்கப்பட்டு விட்டதெனவும், விடுமுறை பெற்றுக் கொண்டு ஓரளவு பணத்துடன் வீட்டிற்கு வருமாறும் கடிதம் வந்தது. இதைப்பற்றி தனது நண்பனான உயரதிகாரியுடன் கதைத்தான். ரத்னபாலாவிற்கு உதவ அந்த நண்பன் முன்வந்தான். இருபத்தையாயிரம் ரூபா பணமும் இரு மாத விடுமுறையும் தருவதாகக் கூறி, மேலதிகமாகப் பணம் தேவைப்பட்டால் தனது பெற்றோரிடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறும் ரத்னபாலாவிடம் அவன் நண்பன் கூறினான் இதைக்கேட்டு பெருமகிழ்ச்சியடைந்த ரத்னபாலா தன் வீட்டிற்கு இன்னும் இரு வாரங்களில் பணத்துடன் வருவதாக எழுதி விட்டு அதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பாராதவிதமாக, பூனை குறுக்கால் போனது போல அடுத்தயுத்தமும் தொடங்கியது. ஆள் பற்றாக்குறை காரணமாக ரத்னபாலாவும் போரிடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

ரத்னபாலாவின் கடிதத்தைக் கண்ட நிலந்தி தனது திருமணம் நன்கு நடைபெறும் என்ற பலத்த எதிர்பார்ப்புடன் காத்திருந்தாள். அவள் மட்டுமா? மூன்று வருடங்களுக்குப் பின் தம் மகனைக் காணப்போகின்றோமென அவனது பெற்றோரும் பெரு மகிழ்ச்சியில் குதூகலித்து அவனது வரவை எதிர்பார்த்து காத்திருந்தனர். ஆனால் நாட்கள் உருண்டோடின. அவனோ வரவில்லை.

அன்றொருநாள்! வெள்ளிக்கிழமை அவர்களின் வீட்டு வாசலில் ஒரு இராணுவவண்டி வந்து நின்றது. தனது அண்ணா வந்து விட்டான் என நிலந்தியும், தமது மகன் வந்து விட்டானென அவனது பெற்றோரும் ஓடி வந்தனர். அவர்களின் எதிர்பார்ப்புகளை வீணடிக்காமல் ரத்னபாலா வந்திருந்தான். ஆனால் அவன் வந்தது பிணமாக!

ஆக்கம்
ஞா. பாலச்சந்திரன்.
ஆண்டு 10 T

* * * *

# சிறு க(வி)தை

அம்மா கொடியை அடகுவைத்து
ஆவலாய் சென்றாய் சீமைக்கு
கும்மாளமடித்து குமரியோடு திரியிறியாம்,
குடியைக் கெடுக்க வந்தவன் நீ

அம்மா அப்படி சொல்லாதே,
அவளை அப்படி வையாதே
அப்பனுக்கும் உனக்கும் பணிவாளே
எனக்கும் அவளே உகந்தவள்

பணக்காரச் சிநேகிதம் தொடராது
படிக்காமல் நீயும் திரியாதே
கண்களால் பேசி மயக்குவாள்,
கணத்துள் ஆசையும் மாத்துவாள்

அம்மா சொன்னதும் பலித்தது
அவளும் சென்றாள் பணத்தோடு
தவறை உணர்ந்து திருந்தி நான்
தப்பிப் பிழைத்து வாழ்கின்றேன்.

தப்பிப் பிழைத்து வாழும் இவன்
எம். கிரிஷாந்தஸ்
A/L 96 (உயிரியற் பிரிவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியல்

எங்கோ சேவல் ஒன்று கூவுகின்றது;
பறவைகளின் இன்னிசை ராகம் ஒலிக்கின்றது;
அரும்புகள் மலர,
இலைகளிலுள்ள பனித் துளிகள் ஒளிர
வருகின்றான் ஒருவன் - தன்
பொன் கதிர்களைப் பரப்பி
மிகமெதுவாக வந்து கொண்டிருக்கிறான்.
ஆனால் அங்கே! அங்கே!
ஓ!
அந்த விடியும் வேளையிலும்
பொழுதை அலங்கரிக்க
வருகிறான் வேறொருவன் இரைச்சலுடன்
ஆம்!
வருபவன் ஒரு இயந்திர மனிதன்
அவன் வருகையினால்
தூங்கியும் தூங்காமலுமான
பெரியவர் முதல் சிறியவர் வரை
ஓடுகின்றனர் ஏன்?
உயிரைக் காப்பாற்றிக் கொள்ளத்தான்
மனிதர்கள் மட்டுமல்ல
பறவைகளும் விலங்குகளும் தான்;
அங்கே மலர்கள் மலர்வதில்லை
ஏன்?
அரும்புகளைத் தோற்றுவிக்க
மரங்களங்கு இருந்தால் தானே.
வந்த இயந்திர மனிதன்
மலர்களையா தூவப்போகின்றான்?
வந்தவன்,
தனது பசியைத் தீர்த்துச் சென்று விட்டான்.
அவனது பசியின் விளைவாக
இங்கு இரத்தங்களும் சதைத்துண்டங்களும்
மண்ணுக்கு வளமாகின்றன.
சேவல்களுக்கு ஏது வேலை?
பிணம் தின்னிகளுக்குத் தான் வேலை.
அங்கும் இங்குமென
எல்லா இடமும் மனித உடல்கள்
இங்கு மனிதம் விலைபேசப்படுகின்றது.
ஓ!
கிழக்கு வெளுக்கின்றது
செக்கச் செவேலென
சோகத்துடன் வருகிறான் கதிரவன்
இங்குள்ள மக்களின் கண்களிலும் சோகம்;
அது அவர்கள் சொத்து.
அங்கோ ஒரு சிறுவன்
ஆவலுடன் வானைப் பார்க்கிறான்,
அவனது இதயம் ஏங்குகின்றது
ஏன்? காதலுக்காகவா?
இல்லை! இல்லை? ஓர்
அழகிய விடியலை எதிர்பார்த்து.........? ? ?

ஆக்கம்
R. சுதர்ஷன்
(A/L 95)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

**R.S. Hartley & Co (Pvt) Ltd.**

**Importers & Distributors**

**'Regent' 2nd Floor**

**345. R.A. de Mel Mawatha**

**Colombo - 3**

**Sri Lanka**

**Tel. 574073/ 574074**

**Fax 574076**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிப் பருவமது தள்ளிப் போய் விட்டது பார்

காலம் இரண்டு வரியில் (வருடங்களில்)
ஒரு கவிதை எழுதியது
இணைந்ததை ஒரு வரியிலும்
பிரிந்ததை மறு வரியிலும் தந்தது
இடையில் நடந்ததை யாருக்கு சொல்ல
கால தேவனே!
உனக்கு கருணை இல்லையா?
இத்தனை ஆண்டுகளா?
மலைத்திருந்த கண்கள்
இமைப்பதற்குள் யாவும்
உருண்டோடி இன்று
இறுதி ஆண்டை அடைந்தது பார்
பள்ளிப் பருவமது தள்ளிப்
போய் விட்டது! பார்வையால்
நாம் வாலிபர் ஆகிவிட்டோம்.
போர்வையில் வாழ்க்கையில்
நுளையும் இவ்வேளை
வார்த்தைகள் தான் பஞ்சம்
கடந்த காலத்தை வர்ணிக்க

நான்கு சுவருக்குள் ஒரு
நட்பு இராச்சியம் கட்டி வளர்த்தோம்
நாளும் எங்கள் நந்தவனத்தில்
அன்பு நீர் வார்த்தோம்.
அங்குதித்த இருபத்தைந்து
மலர்கள் நாம் மாலையாக
இணைந்து மணம் வீசினோமே
நாளை வரும் நாளில் எமை
தொடுப்பதற்கு இனி ஓர் நூலுமில்லையே
கல்விக் கரை காண
கலாசாலை வாசல் காண
தளர்ந்து விடா மனம் கொண்டு
தொடர்ந்து வந்த தோல்விகளை
சளைக்காது எதிர் கொண்டு
வெற்றியின் அத்திவாரமாக்கி
இறுதிவரை எமது இனிய
நட்பினைப் பேணினோமே
இன்று விடை பெறும்
வேளையும் வந்து விட்டதே
கனவுகளை நனவாக்கி
வெற்றிவாகை சூடினோம்
மனதில் உயர்ந்த
கோட்டை கட்டி
கற்பூரமாய் கரைந்து விட
கண்ணீரிலே மிதந்தவர்கள்
இவையும் காலம் தந்த
கவிதை வரிகள் தானே
கல்விக்கு மட்டும்
வரையறுக்கப்பட்டாமல்
கேலியும் கிண்டலும்
ஆட்டமும் பாட்டும்
விளையாட்டும் ஒருங்கே
பயின்ற ஓரறை அது தான்
எங்கள் வகுப்பறை கூட
இன்று எங்களை
ஓரமாக்கி விட்டதே
பனை மர நிழலிலே பால்
பருகிய பூனைகளாக இருந்தோமே

திசைமாறிய பறவைகள்
எல்லோரும் ஒரு வழியாய்
எப்போதும் தனிவழியாய்
எல்லோரும் ஒரணியாய்
ஆழ்கடல் முத்து மணிபோல
அமிழ்ந்து கிடந்தோமே
இனி எமை அகழ்தெடுப்பது
யார்பணியோ!

**95ம் ஆண்டு உயர்தர மாணவர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WE THANK OUR SPONSORS FOR THEIR FINANCIAL SUPPORT

*Mr. S. Kirubananthan, Old Antonian, Omega Medicals, Colombo.*
*M. Thangavelpillai & Co. 35, 37 Nuwara - Eliya Road, Gampola.*
*Mr. T. Sridharan, Old Antonian, Kandy.*
*Mr. P. Rajendran, Old Antonian, City Corporation - Gampola.*
*New Vahini Hardware, 36 Peradeniya Road, Kandy.*
*Mr. Subakumar, Old Antonian, 'Ragulans' 87, Colombo Street, Kandy.*
*Mr. V. Sakthikumar, Old Antonian, Hatton National Bank Ltd, Nawalapitiya.*
*Mr. V. Sridharan, Old Antonian, Kandy.*
*Mas. S. Krishnapradeep, 'An Active Antonian' 1/2 Kadugannawa Road, Gampola.*
*Mr. T. Somasundaram, Rajah & Sons, 109 Colombo Street, Kandy.*
*Mr. K. Alagirisamy, 290 D.S. Senanayake Veediya, Kandy.*
*Mr. M. Panaiyadiyan Pillai J.P, 42 Peradeniya Road, Kandy.*
*Mr. P.R. Somasundaram, 28/3A Weerakoon Gardens, Kandy.*
*Mr. D. Suresh, Old Antonian, Omega Medicals, Colombo.*
*Mr. P. Ravikrishnan, Old Antonian, Omega Medicals, Colombo.*
*Mr. P. Segar, Old Antonian, City Tex, 131 Keyzer Street, Colombo - 11.*
*Visaka Supplies (Pvt) Ltd., 430 Old Moor Street, Colombo - 12.*
*Mr. R. Chandran, Old Antonian, 200 Central Market, Kandy.*
*New Central Hardware, 39 Colombo Street, Kandy.*
*Mr. P.N. Ramesh, B.Sc, Old Antonian, Upcountry Forage Stores, Hatton.*
*Mr. L.G. Gnanapragasam, Old Antonian, 1/1 Uyana Lane - 1, Uyana, Moratuwa.*
*Skylines, 24, Katugastota Road, Kandy.*
*Mr. M.H.M. Irshad, Old Antonian, Iyne Stores, Matale.*
*Seasonal Traders, 178 Colombo Street, Kandy.*
*Sarojini Stores, 164, Colombo Street, Kandy.*
*Kalyani Stores, 70D Gongawela Road, Matale.*
*Durka Traders, 454/A Main Street, Matale.*
*Mr. P. Mahendran, 202 Colombo Street, Kandy.*
*Mr. P. Balakrishnan, 11, Ambagamuwa Road, Gampola.*
*Mr. A. Ravindran, 256 Galle Road, Colombo - 3*
*Mr. P. Rathakrishnan, Anisa & Co, 96, 4th Cross Street, Colombo -11.*
*Mr. M. Periyasamy, 200/ 17A Peradeniya Road, Kandy.*
*Mr. M.I.M. Fuard, Finest Tea Centre, 392, Katugastota Road, Kandy.*
*Mr. M. R. Fahumideen, Faculty of Engineering, University of Peradeniya.*
*Subramanium Jewellers, 268, Main Street, Matale.*
*Monara Tex, Silverdale Shopping Complex, Yatinuwara Veediya, Kandy.*
*Ajantha Organisation, 101 Trincomalee Street, Kandy.*
*Ramya Gold House, 6 Meezan Terrace, Matale.*
*Mr. Feroni Usoof, Old Antonian, 40, Main Street, Matale.*
*Mr. S. Kulasegaram, Fine Focus, 87, Peradeniya Road, Kandy.*
*Mr. Navaneetharajah (Rajah), Old Antonian, Katugastota.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கலாமன்றத்தினரால் நடாத்தப்பட்ட

# போட்டி முடிவுகள் - 1995

பேச்சு

பிரிவு II (6ம், 7ம், 8ம் ஆண்டுகளுக்குரியது)

1ம் இடம் - எம்.எப்.றிமாஸ்
2ம் இடம் - எஸ்.எம்.யாசிர்
3ம் இடம் - எம்.பி.எம்.சிபான்

பிரிவு III (9ம், 10ம், 11ம் ஆண்டுகளுக்குரியது)

1ம் இடம் - டி.ஜே. நிசாந்தன்
2ம் இடம் - ஜீ. பாலசந்திரன்
3ம் இடம் - எம்.எம்.எம். பளீஸ்

பிரிவு IV (12ம், 13,ம் ஆண்டுகளுக்குரியது)

1ம் இடம் - எஸ். ரஜனிகாந்த்
2ம் இடம் - எஸ். சவரிமுத்து
3ம் இடம் - ந. சதீஸ்வரன்

கட்டுரை

பிரிவு II

1ம் இடம் - ஆர். சுரேஸ்காந்த்
2ம் இடம் - டி. தர்சனகுமார்
1ம் இடம் - எஸ்.எம்.யாசிர்

பிரிவு III

1ம் இடம் - ஜீ. பாலச்சந்திரன்
2ம் இடம் - எஸ். சஜீஸ்வரன்
3ம் இடம் - ஜே.பி.பி. பற்றிக்

பிரிவு IV

1ம் இடம் - எஸ்.எச்.எம்.இர்சாட்
2ம் இடம் - என். தனஞ்ஜெயன்
3ம் இடம் - ஏ. யோகேஸ்வரன்

சிறுகதை

பிரிவு III

1ம் இடம் - என். மோகன்குமார்
2ம் இடம் - கே. சதீஸ்குமார்
3ம் இடம் - ஆர். ஜெயகாந்த்

பிரிவு IV

1ம் இடம் - டீ. மோசஸ்
2ம் இடம் - எஸ். சிவபாஸ்கரன்
3ம் இடம் - என். தனஞ்சயன்

பிரிவு III

1ம் இடம் - கே. விஜயபாபு
2ம் இடம் - ஜீ. பாலச்சந்திரன்
3ம் இடம் - கே. சதீஸ்குமார்

பிரிவு IV

1ம் இடம் - என். சதீஸ்வரன்
2ம் இடம் - என். தனஞ்சயன்
3ம் இடம் - எம். குலேந்திரன்

பாஓதல்

பிரிவு II

1ம் இடம் - டி. தர்சனகுமார்
2ம் இடம் - ஜீ. துசாந்
3ம் இடம் - ஏ.எச்.எம். சிபான்

பிரிவு III

1ம் இடம் - டி.ஜே. நிசாந்தன்
2ம் இடம் - எம்.எம்.எம். பளீஸ்
3ம் இடம் - ஜே.பி.பி. பற்றிக்

இசை (தனி)

பிரிவு II

1ம் இடம் - ஜீ. துசாந்
2ம் இடம் - டி. தர்சனகுமார்
3ம் இடம் - ஏ.எச்.எம்.சிபான்

பிரிவு III

1ம் இடம் - எம்.எம்.எம். பளீஸ்
2ம் இடம் - எம். செம்சன்
3ம் இடம் - பி. தினேஸ்காந்த்

இசைக் குழு

பிரிவு II

1ம் இடம் - ஆண்டு 7 மாணவர்கள்
2ம் இடம் - ஆண்டு 6 மாணவர்கள்
3ம் இடம் - ஆண்டு 8 மாணவர்கள்

பிரிவு III

1ம் இடம் - ஆண்டு 10 மாணவர்கள்
2ம் இடம் - ஆண்டு 9 மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''புத்தம் புதிய கலைகள் – பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே – அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.

சொல்லவும் கூடுவதில்லை – அவை
சொல்லும் திறமை தமிழ்மொழிக்கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும் – அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்''.

என்றந்தப் பேதை உரைத்தான் – ஆ
இந்த வசையெனக் கெய்திடலாமோ?
சென்றிடுவீர் எட்டுத் திக்கும் – கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்.

இந்தப் பெரும் பழி தீர தமிழ் கலாமன்றத்தினர்
பணியாற்ற இறையாசி வேண்டி வாழ்த்துகிறோம்.

– விக்னேஸ்வரன் ஸ்ரோர்ஸ்
173 கொழும்பு வீதி
கண்டி


*With Best Compliments From*

# Vigneswaran Stores

**Leading Oil Merchants in Kandy**

**173, Colombo Street**

**Kandy**

**T.P. 23014**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# P. Surendran & V. Periyasamy

(Old Antonians)

11, Ambagamuwa Road
Gampola
T.P. 52383

**Vicktoriya Stores**

Dealers in
Polythene, PVC Sheeting, Nylon Ropes
Rigifoam Items, Rexine Etc
38 - C Yatinuwara Veediya,
Kandy

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தில் மாளப் பெரிது”
என்னும் வள்ளுவன் வாக்கிற்கமைய .......

* பைந்தமிழன்னைக்கு விழாவெடுக்கும் இவ்வேளையில், தமிழ் என்னும் அமுதக் கடலில் மூழ்கி, தமிழ்ப் பணி செய்வதற்கெனவே தம்மை அர்ப்பணித்த எமது பிரதம அதிதி அவர்கட்கும் அவரின் பாரியாருக்கும்,

* நல்லாசி வழங்கி எம்மை ஊக்குவித்து காலாகாலமாக எமக்கு கரம் கொடுத்துதவும் மத்திய மாகாண கல்வி அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகட்கும், கல்வித் திணைக்கள அதிகாரிகட்கும்,

* மொழி கடந்து, தமிழ்ப் பற்று கொண்டு செங்கதிரோன் ஒளியென இம்மன்றத்தை ஒளிபெற வைத்த முன்னாள் அதிபரவர்கட்கும், அவர் பணியை இனிதே தொடரும் இந்நாள் அதிபரவர்கட்கும்,

* ஆலோசனைகள் வழங்கி எம்பிழை பொறுத்து இலைமறை காயாகிய எம்மாற்றல்களுக்கு ஒளி கொடுத்துதவிய ஆசிரியர்களுக்கும் பயிற்றுவித்த கலைஞர்களுக்கும்,

* பின்னணி இசை மழைமூலம், விழா நிகழ்ச்சிகள் பொலிவுறுவதற்கு காரணமாக விருந்த இசைக் கலைஞர்களுக்கும்,

* இன் முகத்துடன் நிதியுதவி நல்கிய பேரன்பர்களுக்கும், பழைய மாணவர்களுக்கும்,

* கலைக்களஞ்சியமாகிய கலைமதியை சிறப்பாக அச்சேற்றி உதவியளித்த றோயல் அச்சகத்தினருக்கும்,

* அழகான அழைப்பிதழையும், நிறைவான நிகழ்ச்சி நிரலையும் அச்சிட்டு வழங்கிய பற்றுள்ள பழைய மாணவர்களுக்கும்,

* செந்தமிழ் விழாவை ஒலி, ஒளியால் அலங்கரித்த இனிய நண்பர்களுக்கும், நினைவின் சின்னமாக நிழற்படமெடுத்த Fine Focus நிறுவனத்திற்கும்,

* இனிய வாழைத் தோரணத்தால் வரவேற்கப்பட்டு தமிழ் அன்னையின் விழாவைக் கண் குளிரக் காணவந்த பெற்றோருக்கும், பெரியோருக்கும், பழைய மாணவர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும்

உரித்தாகட்டும் எமது உளமார்ந்த
நன்றிகள்.


- தமிழ்க்கலாமன்றம் -

1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A/L 95 Batch

## (Tamil Medium)



Ahamed
Azeem
Brijesh
Dhilsowdy
Dhinesh
Farzan
Hafrath
Hilmy
Imran
Kulendran
Malik
Navaneethan
Nazeedeen

Niroshan
Pradheep
Ramesh
Riyas
Riz-Khan
Sadheesh
Senthil
Sudharshan
Suhedharan
Suresh
Sutharson
Yogeswaran
Zihar

*Sponsored By*

**Muruganandas**
115, Central Market
Kandy

Tel : - 08 - 34619 Residence : 072 - 21480

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From*

# T. Sridharan

**(Old Antonian)**

No. 192 Balagolla
Kengalla

☎ 08 - 32350

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# LUCKYLAND BISCUIT MANUFACTURERS

NATHARAMPOTHA,
KUNDASALE.

T' PHONE : 08 - 24217, 08 - 32574

Cover & Text Designed & Printed by
ROYAL OFFSET (Pvt) Ltd. - 190, COLOMBO STREET, KANDY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org